# மரண முள்!

லயன் காமிக்ஸ்




Tamil Comics Ulagam - King Viswa





# ஹாட் - லைன்!

வாசக நண்பர்களே,

வணக்கம்! (மாமூலான) தாமதத்தால் மார்ச் மாத இதழை முழுங்கி விட வேண்டியதாகி விட்டது! தாமதப் பேய் டெக்ஸ் வில்லரையும் பாதித்துவிடக் கூடாதே என்ற ஆதங்கத்தில் - இந்த **"மரண முள்"** இதழினை முடிந்தளவு விரைவாக வெளியிட்டுள்ளோம்! இடையில் வந்திருக்க வேண்டிய ரிப் கிர்பியின் **"கம்ப்யூட்டர் கொலைகள்"** ஓரிரு மாதங்கள் கழித்து வரும்!

தாமதத்திற்காக அனைவரிடமும்; ரிப் கிர்பியின் தள்ளி வைப்பிற்காக ரிப் ரசிகர்களிடமும் Sorry கேட்டுக் கொள்கிறேன்!

இந்த மாத இதழில் - நீண்ட இடைவெளிக்குப் பின் பிரசன்னமாகும் நமது சூப்பர் கௌ - பாய் டெக்ஸ் வில்லரின் ஒரு மிக வித்தியாசமான சாகஸத்தைப் படிக்கப் போகிறீர்கள்! இந்தக் கதையில் செவ்விந்தியர்கள் சாரை சாரையாய் வந்து சுடப் போவதில்லை... வண்டி வண்டியாக தோட்டாக்களை டெக்ஸ் குழு வீணாக்கப் போவதில்லை...!

மாறாக - இன்னதென்றே விளக்க முடியாததொரு விசித்திர எதிரியோடு விஞ்ஞானத்தின் உதவியுடன் டெக்ஸ் குழு போராடுகின்றனர்! கௌ-பாய் கதைகளிலும் விஞ்ஞானம் தலைகாட்ட முடியுமென்பது கதையைப் படித்துப் பார்த்தால் புரியும்!

இந்த முழு நீள சாகஸம் பற்றிய விமர்சனங்களை விரைவாக எதிர்பார்க்கிறேன்!,

சென்ற மாத இதழான மாடஸ்டியின் **"ஆவியின் பாதையில்"** சூப்பரான வரவேற்பு **பெற்றுள்ளது! அந்த இதழில் இடம்பெற்ற வாசக ஓவியரான தி. ரமேஷின் சிறுகதைக்கும் பரவலான பாராட்டுக்கள்! இது** போன்ற **சிறு சிறு கதைகளை** மட்டுமே வாசக ஓவியர்கள் இனி அனுப்பும் படி கேட்டுக் கொள்கிறேன்! (பார்க்க வாசகர் ஹாட் - லைன்)

இந்த மாதம் சூப்பர் கௌ-பாய் சாகஸம் என்றால் - அடுத்த மாதம் காமெடி கௌ-**பாயின்** அட்டகாசம்! யெஸ் - லக்கி லூக் **மேடையில் ஒரு மன்மதனாக"** அடுத்த இதழில் உலா வரப் போகிறார்! முழு நீள - முழு வண்ணக் காமெடி! முழு வண்ணத்தில் என்பதால் இதழின் **விலை ரூ.7/-** படித்து ரசிக்கத் தவறாதீர்கள்!

நமது 12வது ஆண்டு மலரில் வரப் போவது எந்தக் கதை என்று guess பண்ணுங்களேன்! பக்கத்தைப் புரட்டுங்கள் ஒரு Pleasant Surprise காத்திருக்கிறது!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அது வரை happy reading & happy holidays!

அன்புடன்,

S. விஜயன்

**பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும் வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், தபால்பெட்டி எண்: 374, சிவகாசி - 626 123. போன்: 72649**

**அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.**

இந்த வருட ஆண்டு மலரில்

# இரத்தப் படலம் - VI




10 ஆண்டுகளாய் தொடர்ந்திடும்
ஒரு தேடல் படலம்.....

ரூ. 7.50





அரிஸே
வந்து வ
இயங்கிவ
சம்பவ


அ
முள்
ஏற்பட்
எவ

அதைப்
ரும்பவும்

இரத்த

மனித
புருஷர்க
கா

# மரண முள்!





அரிஸோனா மாநிலத்தில் ஸன்ஷைன் பகுதியில் வெகுகாலத்திற்கு முன் பிரபஞ்ச வெளியிலிருந்து வந்து விழுந்த பிரம்மாண்டமான விண்கல் உருவாக்கிய பெரும் பள்ளத்திற்கு அருகே இப்போது இயங்கிவரும் சிறிய மியூஸியத்தினுள் நுழைந்தீர்களேயானால் அந்த விண்கல் வந்து விழுந்த சம்பவம் பற்றிய முழு விபரம் அறியக் கிடைப்பதோடு, அந்தக் கருங்கல்லின் மாதிரி துண்டுகளை கண்டு ரசிக்கவும் வாய்ப்புக் கிட்டும். ஆனால் -

அந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவத்தோடு தொடர்புடைய விபரீத 'பச்சை நிற முள் உருண்டைகள்' பற்றியோ, அந்த நாசகலி ஜந்துக்களால் அப்பகுதி வாழ் எளியோருக்கு ஏற்பட்ட நெஞ்சை உலுப்பும்படுபயங்கர அனுபவம் பற்றியோ எடுத்துரைக்க இன்றைக்கு அங்கே எவருமிலர். காரணம் - காலச் சக்கரத்தின் சுழற்சியில் இன்று அது செவ்விந்தியர்களின் நினைவிலிருந்து ஒரு கெட்டகனவாக மறந்து போய்விட்டது.


அதைப்பற்றி தன் நெஞ்சின் அடித்தளத்தில் நிழலோட்டமாக தங்கிவிட்ட சில உண்மைகளை ரும்பவும் நினைவு கூர்ந்து எனக்கு விவரித்த அந்த முதியவரும் கூட இன்றைக்கு நவஜோ கல்லறையினுள் அடங்கிப் போய்விட்டார்.

இரத்தத்தை உறைய வைக்கும் அந்த உண்மைச் சம்பவங்களை தெரிந்து கொள்ளும் ஆர்வம் உடையவர்கள் மேலே தொடர்ந்து படியுங்கள்.

**மனித சமுதாயத்திற்கே சவாலாக முளைத்த அந்த விபரீத ஜந்துக்களுக்கு முடிவுகட்டிய வீர புருஷர்கள் வேறு யார்... - உங்களுடைய அபிமான கதாநாயகர்களான டெக்ஸ் வில்லரும், கார்ஸனும் தான் என்கிற உண்மையை முன் கூட்டியே சொல்லிவிடுகிறோம்.**



அரிஸோனா மாநிலத்தில் ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள் இரவு சூழ்ந்திருந்த காரிருளை கிழித்துக் கொண்டு ஜகஜ்ஜோதியாக கீழிறங்கி வந்தது ஒரு பிரம்மாண்டமான விண்கல்...
ஷ்ஷ்ஷ்...
வோ...!
வெள...வெள
வாஹ்றஹ்...


ஊ...ஊ...ஊஊ...ஊஊஊ...
விர்ர்ர்ர்...ருருருரு...ம்ம்ம்...
பூம்!
உனக்கும் கேட்டதா?
தேவனின் ஆங்காரம்... நல்லதற்கில்லை!




வாருங்கள்... நம் குடிசைகளுக்கு திரும்பிப் போவோம்...தீய சக்திகளுக்கு சாந்தி பூஜை நடத்த வேண்டும் - உடனடியாக!
ஓவ்...!
மறுநாள் -
விண்கல் விழுந்து பள்ளமாகிப் போன இடத்தைச் சுற்றி உருவாகியிருந்த மேட்டின் உச்சிவரை ஏறிச் சென்று நோட்டம் விட்டார்கள், அப்பகுதியில் ஆடுமேய்க்கச் சென்ற சில இளைஞர்கள்.
அப்போது - அந்தப் பள்ளத்தினுள் தென்பட்ட பல நூறு சிறிய குழிகளுக்கு அருகில் பல்வேறு வகையான பாறைத்துண்டுகள் சிதறிக் கிடப்பதை மட்டுமே கண்டார்கள்.
அப்படியே திரும்பி தங்களுடைய வழியில் போகாமல் அவர்கள் ஒரு சில தினங்கள் அங்கே முகாமிட்டிருந்தார்களேயானால் அந்த சிறிய குழி ஒவ்வொன்றிலிருந்தும் கருநிற தண்டுகளாக ஒருவகை விஷச் செடி முளைவிட்டதை கண்டிருப்பார்கள்.


தொடர்ந்து அவர்கள் அதை கவனித்திருந்தால் அந்த விஷச் செடிகள் பெரிய பச்சை நிற முள் உண்டைகளாக உருவெடுத்த உண்மையையும் தெரிந்து கொண்டிருப்பார்கள்.
முழு வளர்ச்சியடைந்த அந்த உருண்டைகள் தண்டுகளிலிருந்து துண்டித்து விலகி, எதையோ தேடுவது போல் ஒரே சீராக நகரத் தொடங்கின.
விண்கல் வந்து விழுந்து சுமார் ஒரு மாதத்திற்குப் பிறகு -
சே...! நன்றாக இருட்டிவிட்டது... இப்படியே ஊர் போய்ச் சேருவது கஷ்டம்! இன்றிரவை இங்கேயே கழிக்க வேண்டியதுதான்!
ஹே... டைகர்! ஆடுகளை நிறுத்தி ஒன்று திரட்டு!
வாஹ்...வாஹ்...
வாஹ்...வாஹ்...



சில மணி நேரம் கழித்து, முழு நிலா கீழ்த் திசையில் மேலேறிக் கொண்டிருந்த வேளையில், அந்த பச்சை நிற ஜந்துக்கள் சில கரையை நோக்கி ஏறத் தொடங்கின.
அவற்றில் ஒன்று கரை உச்சியை சென்றடைந்ததும் அதன் நீண்ட முட்கள் சிலிர்க்கத் தொடங்கின... பூச்சிகள் கூட்டமாய் பறக்கும் போது ஏற்படும் ரீங்கார ஓசை எழுந்தது அப்போது...
ஸ்ஸ்ஸ்ஸ்
அவ்வோசையைக் கேட்ட மற்ற ஜந்துக்களும் அம்மாதிரியான ஓசையை எழுப்பத் தொடங்கின. கேட்பவர்களுக்கு வயிற்றை கலக்கக்கூடிய விபரீதமான ஒலி அது.
ஸ்ஸ்ஸ் ஸ்
ஸ்ஸ்
ஸ்ஸ்ஸ்
ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்
வாவ்...வாவ...


?!
வோவ்...வோவ்...
ஏய்...டைகர்...ஏன் இப்படி காரணமின்றி வாள் வாள் என்று கத்தி உயிரை எடுக்கிறாய்?
சுற்றிலும் நோட்டம் விட்ட அந்த ஹோபி இளைஞனின் பார்வையில் வித்தியாசமாக எதுவுமே தென்படவில்லையாதலால் மீண்டும் போய் படுத்து போர்வைக்குள் முடங்கிக் கொண்டான்.
ஏய்... சனியனே... கத்தாதே!
இதற்கிடையே அந்த விநோத ஜந்துக்கள் நெருங்கி வந்து கொண்டிருந்தன.
கர்ர்ர்ர்ர்....


அந்த பச்சை உருண்டை ஆபத்தான ஒன்று என்பதை நொடியில் உணர்ந்துவிட்ட அந்த நாய் தன்னை நெருங்கிய ஜந்துவை தன் காலால் ஓங்கி அறைந்தது.
அதற்கு ஓரிரு கணங்களுக்கு முன் அந்த ஜந்து அம்பு மாதிரியான ஒரு ஊசியை உமிழ்ந்தது...
ஊசி பாய்ந்ததும் பரிதாபமாக ஊளையிட்டவாறு மண்ணில் சரிந்தது அந்த அப்பாவி நாய்.
ஸ்ஸ்ஸ்...
ஸ்ஸ்ஸ்
ஊ ஊ ஊ...


அந்த
யை
ஸ்ஸ்
ம்ம்மேமே...
மே... மே...
ஞே..ஞே...
ஞே ஞே...
றுநாள் ஜாடிடோ குக்கிராமத்தில்...
ஓடி வாருங்கள்... ஆடுகளை பட்டியில் அடைக்க ஒத்தாசை செய்யுங்கள்...
ம்மே..ம்மே..மே...
என்ன தான் நடந்திருக்கும்?
விபரீதமான ஏதோ ஒன்று... இப்படி அலட்சியமாக ஆடுகளை ஓடவிடக்கூடியவனில்லை என் தம்பி!



ஆடுகளை பத்திரமாக பட்டியில் அடைத்த பின் அவனைத் தேடிப் போவோம்!
சரி...!
அதையடுத்து, ஆட்டிடையனின் அண்ணன் இக்னேஸியா வேறு மூன்று நபர்களோடு கிராமத்தைவிட்டுக் கிளம்பினான்
ஆடுகள் வந்த தடத்தை பின்பற்றிச் சென்ற அவர்கள் முடிவில் விண்கல் புதையுண்ட பள்ளத்தின் அருகே சென்றடைந்தனர்.
கழுகுகள்...!
என் தம்பிக்கு விபரீதமாக ஏதோ சம்பவித்திருக்கக்கூடும்!
டுமீல்! டுமீல்!
டுமீல்!



கழுகுகளை துரத்தியடித்த பின் ஹோபி இளைஞனின் எலும்புகளும், நாயின் எலும்புகளும் கிடந்த இடத்தை நெருங்கினர்.
சொட்டு இரத்தம் கூட காணப்படவில்லை.
தோல் வறண்டு, சுருங்கிப் போயிருக்கிறது... எலும்புகளும்கூட உதிர்ந்து சிதறிக் கிடக்கின்றன.
வேறு யாராகவோ இருக்கலாம்!
இல்லை - கிழிந்து போயிருந்தாலும் என் தம்பியின் தோலினால் ஆன பாண்ட்டை என்னால் அடையாளம் காண முடிகிறது.
இந்தப் போர்வையும் அவனுடையதே!
மண்டையில் இருக்கும் வெள்ளைநிற திட்டு ஒன்று போதும் நாயை அடையாளம் காட்ட! இது நான் போன வருடம் என் தம்பிக்கு அன்பளிப்பாக கொடுத்தது!
சரி... என்னதான் நடந்திருக்கும்!... இவர்களுக்கு இப்படியொரு கதி நேர்ந்தது எப்படி?


உன் கேள்விக்கு விடை இங்கே அருகிலேதான் இருக்கும்! கொலையாளி யாராக இருந்தாலும் ஏதாவது ஒரு தடயம் கிடைக்காமலா போய்விடும்.?
வோ...!
நாலாதிசைகளிலும் அவ்விளைஞர்கள் தேடிப்பார்த்தனர். கரை மேட்டிலும்கூட ஏறிப் பார்த்தனர்.
பள்ளத்தினுள்ளே அவர்களுடைய பார்வையில் பட்டதெல்லாம், அவர்கள் முன்பின் பார்த்திராத பச்சை நிற தாவரங்களைத்தான் சுருண்டு வளைந்து தண்டுகளையும் வேர்களையும் கூரான முட்களையும் கொண்டிருந்த அந்த தாவரங்கள் இப்போது இரத்தச் சிவப்பில் பூத்திருந்தன.



# ஆண்டுச் சந்தா

லயன் காமிக்ஸ் - ஓராண்டுச் சந்தா - ரூ. 75/-

முத்து காமிக்ஸ் - ஓராண்டுச் சந்தா - ரூ. 60/-


ஓராண்டுக்குக் குறைவான சந்தா

ஏற்க இயலாது.





அன்றிரவு - கிராமத்தில்...
தடயம் எதுவுமே இருக்கவில்லை என்பது நிச்சயம்தானா?
நிச்சயம்!
ம்ம்... புதிராக இருக்கிறது!
என் தம்பிக்கு மரணம் சம்பவித்த வித
புதிரானதுதான்!
கழுகுகள் கொத்தியதால் ஏற்பட்ட காயங்களைத் தவிர அவனுடைய உடம்பில் வேறு காயம் எதுவுமே காணப்படவில்லை!
எல்லாம் அறிந்த புத்திமானான உங்க கேட்கிறேன்... என் தம்பிக்கு மரண சம்பவித்தது எப்படி? அவனுடைய பல நாட்கள் கடும் வெய்யிலில் காய் போல் வறண்டு, சுருங்கிப் போயிருந் ஏன்?
உன் கேள்விக்கு என்னிடம் இப்போது விடை இல்லை.
ஹூம்...! விடையை நானே தேடிக் கண்டு பிடிக்கத் தீர்மானித்து விட்டேன்!
நேற்றிரவு அவன் முகாமிட்டிருந் இடத்திற்கு போய் கண்டறிய முயற்சிப்
தீர்க்கமாக தேடிப் பார்த்துவிட்டோம் சொன்னாயே புதிதாக என்ன கிடை போகிறது அங்கே?





ஜீவானிடோ கொலையுண்டதாக நம்புகிறேன்... கொலையாளி இன்னமும் அருகேதான் எங்கோ இருப்பான் என்று நினைக்கிறேன்... சூழ்ச்சியாக வலை விரித்து அவனை பிடிக்கப்போகிறேன்.
அது சரியான காரியம் தானா என்று யோசித்துப் பார்!
யோசிக்க இதில் எதுவுமேயில்லை!
கொலையாளியோடு நான் திரும்பி வரும் போதாவது என் தீர்மானம் சரி என்று ஒப்புக் கொள்வீர்களல்லவா?
உறுதியாக போவது என்று நீ தீர்மானித்து விட்டால், அங்கே தனியாக போகாதே!
நேற்றிரவு நான் ஒரு தீக்கனவு கண்டேன்... அதில் ஆந்தை மும்முறை அலறக் கேட்டேன்.
இல்லை... நான் தனியாகத்தான் போகப் போகிறேன்
என் புத்திமதியைப் புறக்கணித்துவிட் போகும் உனக்கு இறைவன் துணை நிற்கட்டும்!



ஆனால் மறுநாள் தானும் கூட வருவேன் என்று அடம்பிடித்த தன் நண்பன் ஒருவனை உடனழைத்துக் கொண்டுதான் போனான் அந்தச் செவ்விந்திய இளைஞன்.
உன் சகோதரன் எனக்கு நெருங்கிய நண்பன். அவனுடைய மரணத்திற்கு பழி வாங்க நானும் தான் வருவேன்
வோ!
இருள் கவிழ்ந்த போது...
அதோ...அந்த இடம்தான்!
இங்கே முகாமிட்டுத் தங்குவோம். நன்றாக இருட்டிய பின் கரை உச்சியில் போய் பதுங்கிக் கொள்வோம். அங்கிருந்து இப்பிராந்தியம் முழுச்க கண்காணிக்க ஏதுவாக இருக்கும்.
வோ!
ஒரு மணி நேரம் கழிந்து, எதிரியை ஏமாற்ற தாங்கள் படுத்திருப்பது போல் போர்வைகளை ஜோடனை செய்துவிட்டு இரு இளைஞர்களும் பள்ளத்தை நோக்கி புறப்பட்டனர்.
கரை உச்சியை சென்றடைந்ததும் படுத்த நிலையில் பார்வையை எல்லா திசைகளிலும் ஓடவிட்டவாறு காத்திருந்தனர்.


நள்ளிரவு நெருங்கும் போது
ஹீ...ஹீ...ஹீ...ஹீ...
குதிரைகள் எதையோ செவிமடுத்திருக்க வேண்டும்.
ஆனால் எதுவுமே கண்ணில் படவில்லையே
ஆனால் திடீரென்று எழுந்த விநோதமான சலசலப்புக் கேட்டு இருவரும் திகைத்தனர்.
ஸ்ஸ்
அது என்ன சப்தம்?
பூச்சிகளின் கூட்டம் பறக்கும்போது எழும் ரீங்காரம்
ஸ்ஸ் ஸ்ஸ் ஸ்ஸ்


நாம் இதுவரை கேட்டறியாத சப்தம்...
குழபபுகிறது...
ஸ்ஸ்ஸ்.. ஸ்ஸ்ஸ்ஸ்
ஹீஹீஹீ
எதையோ கண்டுவிட்டு குதிரைகள் பிரட்சியடைகின்றன.
?!
ஏதாவது கண்ணில் படுகிறதா?
இல்லையே!


ஸ்ஸ்ஸ்ஸ்!
?
ஆஆ...ஹாஹா...!
ஹீ...ஹீ...ஹீ...
ZZZSSSS
ZZSSSSS
ஸ்ஸ்ஸ்...ஸ்ஸ்
ஹீ...ஹீ...ஹீ...


ஹிஹிஹிஹிஹி...
ஹி...ஹி...ஹி...
ஊஊஊஊ...ஊஊ...
ஹிஹிஹிஹி....
விடியற்காலையில் களைத்துச் சோர்ந்து போய் அந்தக் குதிரை கிராமத்தை சென்றடைந்தது. ஏதோ விபரீதம் என்று புரிந்து கொண்ட கிராம மக்கள் அவ்விரு இளைஞர்களையும் மீட்க பள்ளத்தை நோக்கி விரையலாயினர்.
யாஹாஹா.....
விரையுங்கள்



மர்ம எதிரியைப் பற்றி தடயம் எதுவும் கண்ணில் படாமலா போய்விடும்.
முயன்று பார்ப்போம்!
மனிதனோ, விலங்கோ எதுவாயினும், தன் தடத்தை முற்றிலுமாக அழித்துவிட முடியாது.
வானிலிருந்து வந்திருந்தால்?
பிதற்றாதே! கழுகுகள் கூட மனிதனை தாக்கத் துணிவதில்லை. அத்தோடு அவை கூட உடலை அவ்வளவு மோசமாக சிதைத்து விட முடியாது!
இவ்விரு இளைஞர்களுக்கும் அதே கதிதான் ஏற்பட்டதா என்று தெரிந்து கொண்டு அப்புறமாக மிச்சத்தை விவாதிக்கலாமா?
சில மணி நேரத்திற்குப் பின் அனைத்து சந்தேகமும் தீர்ந்து விட்டது.
டுமீல் டுமீல்
டுமீல்


ஜீவானிடோவின் நாய்க்கு ஏற்பட்ட கதியே இந்தக் குதிரைக்கும் ஏற்பட்டிருக்கிறது பார்!
ஹம்ம்...
நம் தோழர்களுக்கும் இப்படியொரு கதிதா ஏற்பட்டிருக்கலாம் என்று இப்போதே யூகித்து விடலாம்!
போய் பார்ப்போம் - வாருங்க
மற்றவர்கள் பரவலாக நாலா திசைகளிலும் தேடிச் செல்ல, மாந்திரீக மருத்துவரும் மற்றும் மூன்று நபர்களும் பள்ளத்தை சுற்றியிருந்த கரை மீது ஏறி ஆராய்ந்தனர். அங்கே, கண்ணில்பட்ட காட்சியைக் கண்டு நம்ப முடியாத திகைப்பில் வாயடைத்துப் போயினர்.
உங்கள் கருத்து என்ன ஹனாகுவா?
படுபயங்கரமான காட்சி!
என் வாழ்நாளில் எத்தனையோ பயங்கரங்களை பார்த்திருக்கிறேன். ஆனால் இப்படி உயிரோட்டம் முழுக்க உறிஞ்சப்பட்ட உடல்களை நான் இது வரை கண்டதேயில்லை.
யார்... எதற்காக இந்தக் கொடுமையை இழைத்திருப்பார்கள்!
ஆண்டவன்தான் அறிவார்!


வாருங்கள்.
அறிவார்!


அந்த செம்மலர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ஹனாகுவா? அந்த விண்கல் விழுந்த ஓரிரு தினங்களுக்குப் பின் நாங்கள் இங்கே வந்து பார்த்தபோது இவை இங்கே இல்லை.
அப்போது கண்ணில் பட்டதெல்லாம் ஏகப்பட்ட சிறிய் குழிகளும் கருங்கற்களும்தான்! இந்த கருப்பு நிற தண்டுகளோ, பச்சை நிற முள்ளுருண்டைகளோ, அல்லது இந்த செம்மலர்களோ இருந்த தடயமே கிடையாது.
எல்லாமே விசித்திரமாக இருக்கிறது
கீழே போய் ஒன்றை பறித்தெடுத்து வரட்டுமா!
வேண்டாம்... அந்த புதர்களுக்கிடையே விபரீதமாக எதுவோ இருக்கலாம் என்கிறதாக என் உள்ளுணர்வு எச்சரிக்கிறது!
அந்த கருநிற தண்டுக் குவியல்களிடையே எந்த வினாடியிலும் நம் உடம்பில் விஷத்தைப் பாய்ச்ச விரியன் பாம்புகள் ஆவேசத்தோடு காத்திருப்பதான பிரமை ஏற்படுகிறது எனக்கு.
வந்த வேலை முடிந்துவிட்டது... வாருங்கள் ஊர் திரும்பலாம்!
வோ!


உயிர்களைக் குடித்த எமனின் தடங்கள் எதுவுமே எங்கேயும் காணப்படவில்லை என்பதை உடனிருந்த ஹோபி இளைஞர்களைக் கேட்டு உறுதி செய்து கொண்டுவிட்ட மாந்திரீக மருத்துவர் அனைவரும் ஊர்திரும்ப உத்தரவிட்டார்.
இதெல்லாம் பேய் பிசாசின் வேலையாக இருக்கலாம் ஹனாகுவா!
இருக்கலாம்! எனவே, நாம் ஊர் போய்ச் சேர்ந்ததும் பலிபூஜை நடத்த ஏற்பாடு செய்வோம்!
ஒரு மாதம் உருண்டோடிவிட்டது. அங்கிருந்து வடக்கே தொலைவில் நவஜோ குடியிருப்பு பகுதியை டெக்ஸ் வில்லரும் அவருடைய நண்பர் கார்ஸனும் நெருங்கி வந்து கொண்டிருந்த வேளையில்...
அங்கே...கவனி!
இரவுக் கழுகு' உடனே ஊர் திரும்பவும்
புகை சமிக்ஞையில் செய்தி வந்தது!
என்ன விபரீதமோ?
போய்த்தான் தெரிந்து கொள்ள வேண்டும் - விரட்டு குதிரையை
பிடி...ஓட்டம்!
யாஹா... ஹாஹா!


புகை
செய்தி
வந்தது!


மூன்று மணி நேரம் கழித்து...
அதோ வந்துவிட்டார்!
அவர் சம்மதிப்பார் என்று நீ நினைக்கிறாயா?
நிச்சயமாக சம்மதிப்பார் ஹனாகுவா! தன் செவ்விந்திய சகோதரர்களுக்கு ஒரு கஷ்டம் என்றால் அவரால் சகித்துக் கொண்டு வாளாவிருக்க முடியாது!
கிட்டுக்கு ஏதேனும் ஆபத்தா?
இல்லை! உங்களுடைய குமாரரும், டைகரும் திரும்பி வரும் நேரம்தான்!
அதோ... வந்து விட்டார்கள்! நீங்கள் இங்கே வந்து கொண்டிருப்பதை நான்தான் இவர்களுக்கு ஆள் அனுப்பி தெரிவித்தேன்.


முதலில் ஹனாகுவாவை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். லிட்டில் கொலராவுக்கு தெற்கேயுள்ள ஹோபி கிராமங்கள் ஒன்றின் மாந்திரீக மருத்துவர் இவர். உங்களுடைய உதவியை நாடி இவ்வளவு தூரம் வந்திருக்கிறார்.
வணக்கம்...ஹனாகுவா!
உங்களுக்கு என்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்யச் சித்தமாக இருக்கிறேன்...
நன்றி... இரவுக் கழுகாரே!
இதற்கிடையே டைகரும், கிட்டும் அங்கே வந்து மற்றவர்களோடு சேர்ந்து கொண்டார்கள்...
நண்பரே...என்னிடம் சொன்ன அனைத்து சங்கதிகளையும் இவரிடம் கூறுங்கள்...
வோ!
பல மாதங்களுக்கு முன் மிகப் பெரிய நட்சத்திரம் ஒன்று எங்கள் கிராமத்துக்கு அருகே வந்து விழுந்தது. அதனால் அங்கே பிரம்மாண்டமான பள்ளம் உருவானது...
ஏதோ தெய்வ குற்றம்தான் காரணம் என்று எனக்குத் தோன்றியது. என் கணிப்பு சரியென்று சமீபத்தில் நிருபணமாகி விட்டது! என் கிராமத்து மக்கள் சிலர் மர்மமான முறையில் மாண்டு போயினர்.
சற்றுப் பொறுங்கள்! விழுந்தது நட்சத்திரமாக இராது... பிரம்மாண்டமான விண்கல்லாக இருக்கக்கூடும்! ஆனால் அது எப்படி மர்மச் சாவுக்கு காரணமாக அமைய முடியும்?
சொல்கிறேன்...!




இறந்து போனவர்களின் சடலங்கள் இதுவரை கண்டிராத வகையில் புதிரான முறையில் சிதைந்து கிடந்த விபரத்தை ஹனாகுவா எடுத்துரைத்தான்... அவர்களுக்கு மரணம் சம்பவித்தது இப்போது பாவ பூமியாக கருதப்படும் அந்த பெரும் பள்ளத்தின் அருகே என்பதையும் குறிப்பிட்டுச் சொன்னான்.
இப்போது யாரும் அந்த பள்ளத்தின் அருகே போகத் துணிவதில்லை. எங்கள் கிராமத்திற்கு சாபக்கேடு வந்துவிட்டதாகவும் அது மர்ம மரணங்களுக்கான காரணம் கண்டறியப்பட்டு களையப்பட்ட பின்னர்தான்.நீங்கும் என்ற நம்பிக்கையும் நிலவிவருகிறது.
பள்ளத்தைப் பற்றி குறிப்பிட்ட போது, அதனுள்ளே விசித்திரமான முட்புதர்கள் சிவப்பு நிற பூக்களோடு பரவி வருவதைப் பற்றி சொன்னீர்கள்!அவை கற்றாழை வகையை சேர்ந்தவையோ?
இல்லை!
அவ்வகை முட்செடிகளை இதற்கு முன் எங்களில் எவருமே பார்த்ததுமில்லை. கேள்விப்பட்டதுமில்லை. அதற்கு இப்போது செந்நிற மரணப் பூக்கள் என்று பெயர் சூட்டியிருக்கிறோம்! காரணம்... சடலங்கள் அருகே இவை திடீரென பெருமளவில் பூத்திருக்கக் கண்டோம்!
ஹம்ம்...
கார்ஸன்... நீ என்னநினைக்கிறாய் இதைப்பற்றி!
ஒரு இழவும் புரியவில்லை!
விண்கல்லுக்கும், மரணத்திற்கும் சம்பந்தம் இருக்கும் என்று நீயும் சந்தேகிக்கிறாயா?
சம்பந்தம் இருக்க வாய்ப்பே இல்லை!


உங்களுடைய வரவுக்காக காத்திருந்த வேளையில் இதுபற்றி விரிவாக என் கருத்தை இவரிடம் எடுத்துரைத்து விட்டேன். விண்கல் வந்து ஒருவன் மீது நேரடியாக விழுந்தால் மரணம் சம்பவிக்கலாமே தவிர என்றோ, எங்கேயோ விழுந்த கல்லினால் யாருக்கும் எவ்வித தீங்கும் நேரிடாது!
உங்கள் கருத்தை நான் ஆமோதிக்கிறேன். முன்பு ஒரு முறை இதே மாதிரியான விவகாரம் ஒன்றில் ஒரு மனிதன் பின்னணியில் மர்மமான முறையில் செயல்பட்டது வெளிவந்தது.
'மரணத்தின் நிறம் பச்சை' சம்பவத்தை குறிப்பிடுகிறாயா?
ஆமாம்... அதேதான்!
அந்த விவ காரத்திலும் மர்மச் சாவுகளுக்கான காரணம் புதிராகவே இருந்துவந்தது. எங்கள் நண்பர் எல் மேரிஸ்கோவின் உதவியோடு பின்னர் அந்தப் புதிருக்கு விடை கண்டோம்.
?
அந்த பள்ளத்தை சுற்றி சடலங்கள் கிடந்த இடத்தில் தீவிரமாக புலனாய்வு செய்தீர்களா?
ஆமாம்!
கடைசியாக கற்றாழை பழம் சேகரிக்கச் சென்ற இளம் பெண்ணொருத்தி பலியானபோதும் அங்கே ஆராய்ந்து பார்த்தோம். தடயம் எதுவும் தென்படவில்லை.


ாதிக்கிறேன்!
ரதிரியான
மனிதன்
முறையில்
ந்தது.


இரவுக் கழுகார், 'கழுகுகள் வட்டமிடுவதை பார்த்ததும் அவளுடைய கதியை யூகித்து விட்டோம்... அவளுடைய சடலத்தை சுற்றிலும் வெகு தொலைவுக்கு தேடிப் பார்த்துவிட்டோம். தடயம் எதுவுமே தென்படவில்லை...
அதுமட்டுமின்றி, அவளுடைய உடலில் கழுகுகளின் நகக்கீறல்கள் தவிர வேறு காயம் எதுவும் தென்படவில்லை.
கெட்டது...போ!
முந்தைய சந்தர்ப்பங்களில் நிகழ்ந்தது போலவே இப்போதும் ஏகப்பட்ட செந்நிற மரணப் பூக்கள் அந்த சடலத்தின் அருகே பூத்திருக்கக் கண்டு திகைத்தோம்.
ம்ம்... சரியான சவாலாகத்தான் இருக்குமோ!
ஆரம்பத்தில் அப்படித்தான் தோன்றும்! முயன்றால் எப்படியாவது உண்மையை கண்டறிந்துவிடலாம்!
மர்மக் கொலையாளி எவ்வகை
கொண்டிருப்பான்


பிரேதங்கள் வித்தியாசமாக காட்சியளித்தன என்று சொன்னாயல்லவா... எப்படி என்று விபரமாகச் சொல்!
சொல்கிறேன்...! கடும் சூரிய வெப்பத்தில் பலநாள் கிடந்து கருகியது போல்...
....தோல் வறண்டு சுருங்கிப் போயிருந்தது. தொட்டால் பொல பொலவென்று உதிர்ந்து போய்விடுவது போல் எலும்புக்கூடு பொரிந்து போயிருந்தது.
விவாதத்தை இத்தோடு நிறுத்திக் கொள்வோம். நாளை சம்பவம் நடந்த இடத்திற்கே போய் ஆராய்வோம். ஹோபி இடையர்கள் காணத் தவறிய தடயம் எதுவும் நம் கண்ணில் படலாம். ம்ம்... நீங்கள் இன்றிரவு இங்கே தங்கப் போகிறீர்களா?
ஆமாம்! குறி சொல்லும் கற்களை இன்றிரவு கேட்டுப் பார்க்கலாம் என்று உங்கள் மாந்திரீக மருத்துவர் சொல்லியிருக்கிறார்.
நல்லது!
நாளை காலை மீண்டும் சந்திப்போம்...! அங்கே நாங்களும் உங்களோடு வரத் தீர்மானித்திருக்கிறோம்!
வோ!


மோடு உணவருந்த அவனை அழைப்பாய் என்று எதிர்ப்பார்த்தேன்.
அதற்கு அவசியமில்லை நண்பனே!
ஹனாகுவாவும் நம் மாந்திரீக மருத்துவரும் குடிசைக்குள் போய் கதவை தாழிட்டுக் கொண்டு பில்லி சூனிய வேலைகளில் முழு மூச்சாக ஈடுபடப்போகிறார்கள். உணவைப் பற்றிய எண்ணமே அவர்களுக்கு வரப்போவதில்லை.
டெக்ஸ் சொல்வது முற்றிலும் உண்மை.
கொதிக்கும் நீரினுள் மூலிகைகளையும் பழைய எலும்புத் துண்டங்களையும் போட்டு புகை மண்டலத்தை உருவாக்கி மாஜிக் கற்களிடம் கேள்விகள் கேட்பார்கள். வண்ணக் களிமண்ணைக் கொண்டு விநோதமான உருவங்களை வரைந்து ஆவிகளிடம் வினா எழுப்பி உண்மையை அறிய முயற்சிப்பார்கள்... விடியும்வரை தொடரும் இந்த முயற்சி.
தனக்கு மாஜிக் வித்தையிலும் திறமையுண்டு என்று பெருமையாக கூறிக் கொள்வார் நம் மருத்துவர்.
...இந்த விவகாரத்தைப் பற்றி நீ என்னதான் நினைக்கிறாய்?
அங்கே நிச்சயம் தடயம் இருக்கும் - தேடிப் பார்த்த ஹோபிகள் கோட்டைவிட்டிருப்பார்கள்...!


புதிரான ஆயுதம் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். அந்த ஆயுதத்தை பிரயோகிக்க அங்கே ஒரு மனிதன் வந்திருக்கத்தானே வேண்டும்... முதலில் - பயன்படுத்தப்பட்ட ஆயுதம் எது என்றும், பிறகு...
...அதை பிரயோகிக்க அங்கே வந்து
மனிதன் பற்றியும், அப்பாவி உயிர்
அவன் பலி கொள்ளக் காரணம் பற்
நாம் ஆராயப் போகிறோம்.
அந்த மர்மப் பூக்களை மறந்து விட்ட டாடி
பலியானவர்களின் அருகே பூத்துக் கிடக்கும் அந்த மலர்களுக்கு இதில் சம்பந்தம் இருக்கலாமில்லையா...
விநோதமாக் செயல்படும் பூக்களை, செ
கொடிகளைப் பற்றி நாம் அறிவோம்...
ஆனால் எதுவுமே மரணத்தை விளைவித்ததாக கேள்விப்பட்டதேயில்லை அல்லவா!
விவாதத்தை இத்தோடு நிறுத்திக் கொண்டு சாப்பிடப் போகலாம்... வா!
அந்த மர்மக் கொலையாளியின் கவனம் நம்மீது விழாதவரை சரிதான்...
உயிர் போய் விடுமோ என்ற அச்சம்
நீ பெரிய தைரியசாலியாச்சேப்பா


அவருக்கு சதா மரணம் பற்றிய எண்ணம்தான்!
வெட்டியானாக போயிருக்க வேண்டிய ஆசாமி!
இப்போதும் ஒன்றும் மோசம் போய்விடவில்ல, நீயும் வருவதானால் இப்போதே அந்த தொழிலை மேற்கொள்ள நான் ரெடி!
என்னை குழிதோண்டச் சொல்வாயோ?
இல்லை... நீ நிறைய வாடிக்கையாளர்களை கொண்டு வந்து சேர்த்தாலே போதுமானது!
சரி... வெட்டிப் பேச்சு போதும்... நிம்மதியாக சாப்பிடவிடு!
இதற்கிடையே...
உங்களுக்கு மஸாயூ உச்சாடனம் தெரியமா?
காலதேவனுக்குரிய அர்ச்சனையா? - தெரியாது!
ஆனால் அதுபற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்... ரொம்ப பயங்கரமானதாமே!



ஆமாம்... சில வேளைகளில் வித்தைக்காரனையே பலி கொண்டுவிடும்...! இன்றிரவு அதை நாம் பிரயோகம் பண்ணிப் பார்த்துவிடலாம்!
அவசியம் தேவைதானா?
மாஜிக் கற்கள் நம் கேள்விக்கு பதி
சொல்லாவிட்டால், எலும்புத் துண்டா
கொலையாளியின் பெயரை எழுதிக் க
தவறினால் வேறு வழியில்லை நம
ஆவிகளின் மீது உங்களுக்குள்ள ஆதிக்கம் பற்றி அறிவேன். ஒரு சிலரே அறிந்த மந்திர தந்திரங்கள் உங்களுக்கும் தெரியும் என்பதால் உங்கள் சொற்படி நடக்கச் சித்தமாக இருக்கிறேன்.
உங்கள் தீர்மானத்தை பாராட்டுகி
ஹனாகுவா... பதிலுக்கு, உங்களுக்
அதிசய வித்தை
போதிக்கப் போகி
வோ!
சிறிய கற்களை தீக்கங்கு மீது ஒவ்வொன்றாகப் போடுங்கள்! ஏதாவது உபயோப்படுகிறதா பார்ப்போம்...
இரவு முழுக்க அவ்விரு மாந்திரீகர்க
விநோதமான பல மந்திர தந்திரங்க
பூஜை, புனஸ்காரங்களும் செய்து
கொண்டிந்தனர்.


ஆனால் இப்படி நீர், நிலம் ஆகிய பூதங்களின் மீது முயற்சிக்கப்பட்ட மந்திர தந்திரங்கள் அனைத்தும் வியர்த்தமாகிப் போயின... விடிகாலையில் டெக்ஸும் அவருடைய சகாக்களும் குடிசையினுள் நுழைந்து பார்த்தபோது அவ்விரு மாந்திரீகர்களும் சோர்ந்து போயிருந்தனர்.
இரவுத் தூக்கம் போனதுதான் மிச்சம் - இல்லையா?
ஆமாம்! வந்து அமருங்கள்!
க்கு எட்டி து வாய்க்கு எட்டாது போன மாற்றம் முகத்தில் தெரிகிறது - சரிதானா?
ஆமாம்... இரவுக் கழுகாரே!
ஆனால் வெற்றி அப்படி கைநழுவிப் போகுமுன், உண்மையின் தரிசனம் ஒருகணம் என் கண் முன் நிழலாடக் கண்டேன்.
?!
தாவது - கொலையாளியை அடையாளம் தெரிந்து கொள்ள முடிந்தது என்கிறீர்களா?
இல்லை!
நான் கண்டதெல்லாம் விநோத ஒலியை எழுப்பியவாறு சிலிர்த்துத் திரிந்த, இனம் விளங்காத ஒன்றைத் தான்! இரத்தத்தை உறைய வைக்கும் அந்த பயங்கரக் காட்சி புலப்பட்டதும் மரணத்தின் பிடியில் சிக்கிக் கொண்டுவிடலாகாதே என்ற துடிப்போடு விலகி ஓடவே யத்தனித்தேன்.


எதையும் தெளிவாக சொல்லத் தெரியவில்லை எனக்கு ஏனெனில் நான் பார்த்த காட்சியுமே பச்சை நிறபுகைப்படலத்தினூடே தென்பட்ட தெளிவற்ற தோற்றம்தான்... கணநேரமே காண முடிந்தது என்றாலும் நெஞ்சில் அது ஏற்படுத்திய பீதி அடங்க வெகு நேரம் பிடித்தது.
நீங்கள் எல்லோருமே வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!
ஹோபிக்களை கொன்றது எதுவாயி
அது படுபயங்கரமான ஒன்று என்பது
நிச்சயம். அதை முடுக்கிவிட்ட சூத்ரதா
லேசுப்பட்டவனில்லை . ஏனெனில்
மாந்திரீக சக்தி அவனிடம் செல்லுபடியாகவில்லை.
ஓகோ!
ஆராயப் போகும் இடத்தில் இரவில் சேர்ந்து குழுவாகவே போங்கள்... யாரும் தனித்து விலகிப் போக வேண்டாம்.
இந்த ஆலோசனையை மறக்க மாட்டோம்!
ஹனாகுவா! எங்களோடு கிளம்ப நீங்க
ரெடியா?
வோ!


மேற்கொண்டு ஏதும் பேசாமல் ஐவரும் அங்கிருந்து பயணத்தைத் தொடங்கினர்.
காலையில் நாம் மீண்டும் சந்தித்ததிலிருந்து நீங்கள் எதுவுமே பேசவில்லையே ஏன்?
உங்களுடைய மகிமை வாய்ந்த மாந்த்ரீகர் அனைத்தையும் விபரமாக எடுத்துரைத்த பின் நான் சொல்ல என்ன இருக்கிறது?
பச்சை நிற புகை மண்டலத்தினூடே தென்பட்ட காட்சியை நீங்களும் காண முடிந்ததா?
ஆமாம்... இரவுக் கழுகாரே!
படுபயங்கரமான காட்சி அது! விலங்கு ஒன்றின் நெஞ்சிலிருந்து பிய்த்து எடுக்கப்பட்ட இருதயம் தனித்து துடித்து இயங்குவது போன்ற மயிர்கூச்செரிய வைக்கும் காட்சி!
அப்படியொரு காட்சியை இன்னொரு முறை காண எனக்கு மனோதிடம் போதாது... அப்படியொரு சாபம் எனக்கு இடப்பட்டுவிடக் கூடாது என்று ஆண்டவனை இறைஞ்சி கேட்டுக் கொண்டிருக்கிறேன்.


பச்சை புகை மூட்டத்தினூடே புலப்பட்ட விசித்திர ஜந்து பற்றிய அவர்கள் கூற்றை நாம் நம்பாதபோதிலும், எனக்கு என்னவோ நாம் எதிர் கொள்ளப் போகும் எதிரி விநோதமான பயங்கரவாதியாக இருக்கக்கூடும் என்று தோன்றுவதால் நாம் மிகுந்த விழிப்போடு செயல்படவேண்டியது அவசியம்!
இரு தினங்களுக்குப் பின்...
அடக் கடவுளே...! மரண முரசு ஒலிக்கி
டம்..டம்..
டம்...!
டம்...!
மர்ம எதிரி மீண்டும் தன் கைவரிசையைக் காட்டி விட்டானா?
விரைவிலேயே நாம் தெரிந்து கொள்ளலாம்!
ம்ம்...வேகமாக வாருங்கள்!



நாலைநது நிமிடங்களுக்குப்பின் ஊரை நெருங்கி அவர்கள் விசாரித்த போது துரதிர்ஷ்டவசமாக அவர்கள் பயந்தது போலவே நடந்துவிட்டிருந்த உண்மை தெரிய வந்தது.
இவனும் அதே மாதிரிதான் செத்துப்போனானா?
ஆமாம்... மாண்புமிகு ஹனாகுவா!
இரு தினங்களுக்கு முன், இரவை காட்டுக் குடிசையில் கழிக்கப் போவதாக சொல்லிச் சென்றவன் பின்னர் ஊர் திரும்பாததால் அவனை தேடிச்சென்ற அவனுடைய மகன் ஆஞ்சரிட்டோ படுக்கையில் அவன் செத்துக் கிடக்க கண்டிருக்கிறான்.
தன் தந்தை ஆழ்ந்த நித்திரையில் இருப்பதாக முதலில் அவன் நினைத்திருக்கிறான். ஆனால் மற்றவர்களைப் போலவே அவனும் கொலையுண்டிருக்கிறான்.
ஆஞ்சரிட்டோ இப்போது எங்கே இருக்கிறான்?
ஊருக்கு வந்து துப்பாக்கியை எடுத்துக் கொண்டு குதிரையிலேறி எதிரியை தேடிப் போயிருக்கிறான்!
கேட்டீர்களல்லவா?
அந்த காட்டுக் குடிசை எங்கே இருக்கிறது.... சொல்லுங்கள்! நாமும் அவனை பின் தொடர்ந்து போய் எதிரியை தேடி உடனடி நடவடிக்கை மேற்கொள்வோம்!



பழைய ஜாடியோடோ நீரூற்று செல்லும் தடத்தில் போங்கள்... கயூஸ் பாறை வந்ததும் வலப்பக்கம் திரும்புங்கள். அங்கிருந்து இரண்டு மைல் தொலைவில் இருக்கிறது. அந்த காட்டுக் குடிசை... அங்கே அதை கண்டுபிடிப்பதில் கஷ்டமேயிராது!
நல்லது!
வந்ததும் வராததுமாக புறப்பட்டு விட்ட
என்று நினைக்காதே... உற்சாகமாக கிள
உங்களுடைய மாந்திரீக மருத்துவரின் அறிவுரை நினைவில் இருக்கட்டும். இரவுக் கழுகாரே!
துப்பாக்கி தயார் நிலையில் இருக்கிறதா
என்று ஒவ்வொரு நிமிடமும் நினைவுறுத்தி
கொள்வேன் - ஹனாகுவா! போய் வரட்டுமா!
வாருங்கள் தோழர்களே! அதிர்ஷ்டம் துணை புரிந்தால் எதிரியின் தடம் மறையுமுன் நாம் அங்கே போய்ச் சேர்ந்துவிடலாம்!
புறப்படு!


லை மணி நேரத்திற்குப்பின்...
அதோ... காட்டுக் குடிசை!
இங்கிருந்தே தடம் தென்படுகிறதா என்று பார்க்கத் தொடங்குவோம்... ஆஞ்சலிட்டோவின் தடம் தெளிவாக குடிசையை நோக்கிப் போகிறது - பார்!
நிதானமாக நாம் செயல்படவேண்டும் எந்தச் சிறு தடயமும் நம் பார்வையிலிருந்து தப்பிவிடக் கூடாது!
கரெக்ட்!
ஆனால், அவர்கள் எவ்வளவோ நுணுக்கமாகத் தேடியும் எந்தத் தடயமும் கண்ணில் படவே இல்லை!
அடச்...சே!
நம்பவே முடியவில்லை!
இரு ஜோடி கால் தடங்கள்... ஒன்று - செத்துப் போனவனுடையது. மற்றது அவனுடைய மகனுடையது. மகன் இங்கே வரை வந்து விட்டு, சற்று நேரம் இப்படியும் அப்படியுமாக நடந்துவிட்டு, பின்னர் ஏதோ மூளையில் பொறி தட்டினாற்போல் திடீரென்று வேகமாக கிளம்பிப் போயிருக்கிறான்.
குழப்புகிறதே!
உள்ளே போய் ஒரு நோட்டம் விட்டால் என்ன?



மறு வார்த்தை பேசாமல் அந்நால்வரும் குதிரையை விட்டிறங்கி எச்சரிக்கையோடு அந்தக் குடிசையினுள் நுழைந்தார்கள்...
ஜாக்கிரதை!
இதென்ன கொடுமை!
பாடம் செய்யப்பட்ட
மாதிரி அல்லவா கிடக்
நீர்ச் சத்து அனைத்தும் உறிஞ்சப்பட்டு வற்றலாகிப் போயிருக்கிறது!
கவனமாக நாம் செயல்படவேண்டும்... எப்போதும் விழிப்போடிருங்கள்... இவன் தாக்கப்பட்ட விதம் எப்படி என்று ஆராய வேண்டும்!
'மரணத்தின் நிறம் பச்சை' விவகாரத்தைப் போன்றதொரு விவகாரம் இது என்ற கணிப்பிலேயே நீ இருக்கிறாய்!
அதில் என்ன சந்தேகம்!
இந்த அப்பாவியை கவனி
உலர்ந்து கருகிய தோலினா
போர்த்தப்பட்ட எலும்புக்
கூடு மட்டுமே
மிஞ்சியிருக்கிறது - அந்த
விவகாரத்திலும்
இப்படித்தானே சம்பவித்தது


அந்த வஞ்சக எண்ணம் கொண்ட அஸ்டெக் புரோகிதரின் இரகசியத்தை ஈடேற்றிக் கொள்ள அதே வழிமுறையை இங்கே கையாளத் தொடங்கியிருக்கலாம் என்ற வாதத்தை ஏன் நாம புறக்கணிக்க வேண்டும்?
போயும் போயும் அப்பாவி ஹோபி இடையர்களுக்கு எதிராகவா?
பின்னால் முழு அளவில் நிகழப்போகும் ஒரு சதிச் செயலுக்கு இது ஒரு தொடக்கமாக இருக்கலாம்... எதிரி ஒரு நூதன ஆயுதத்தை கையாளுகிறான் என்று இப்போதைக்கு வைத்துக் கொள்வோம்!
ஏற்றுக் கொள்ளக் கூடியது தான்
சரி.... ஆராய்ச்சியைத் தொடருவோம்!
ஆனால், அரைமணி நேரம் கழித்து
சே... ஒரு துப்பும் கிடைக்கவில்லையே!
ஒரு அங்குலம் விடாமல் தேடியாகிவிட்டது!
இனி என்ன செய்யலாம்?
ஆஞ்சிரிட்டோவை தேடிப் போவோம்! -வேறு உபாயம் ஏதுமில்லை!


நமக்கு முன் இங்கே இருந்தவன் ஒருவேளை எதையேனும் கண்டு பிடித்து சரியான வழியில் போய்க் கொண்டிருக்கலாம்!
திடீரென்று குதிரையில் பாய்ந்து ஏறி வேகமாக எங்கோ அவன் போனதற்கு நிச்சயம் காரணம் இருக்கும்?
புதிருக்கான விடை அவனிடமிருந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு புறப்படுவோம் - கிளம்புங்கள்!
ஓ.கே!
அஸ்தமன வேளைவரை ஆஞ்சிலிட்டோவின் தடத்தைப் பின் தொடர்ந்து சென்றது அந்தக் குழு -
இங்கே முகாமிட்டுத் தங்குவோமே!
நல்ல யோசனை
இங்கிருந்து பூமி பாறைபோல் கெட்டியாக இருப்பதால் இரவில் தடத்தை கண்டுபிடித்துச் செல்வது வெகு கடினம்!
அத்தோடு, நமக்கும் சரி, களைத்துப் போன குதிரைகளுக்கும் சரி பயணத்தை தொடருமுன் நல்ல ஓய்வு அவசியம்!



குதிரைகளின் சேணத்தை களைந்துவிட்டு, தீ மூட்டி எளிய முறையில் உணவு தயாரித்து சாப்பிட்டான பின் படுக்கையைப் போட்டார்கள்.
தூங்குங்கள்...! முதலில் நான் காவல் நிற்கிறேன்!
நல்லது! எப்போதும் விழிப்போடு இரு!
நம்மைச் சுற்றி பத்தடி வட்டத்திற்குள் எது நகர்ந்தாலும் சட்டென்று சுட்டுவிடுகிறேன்!
செய்!
கிட்டின் முறை முடிந்து அடுத்து டைகரும், பின்னர் டெக்ஸும் காவல் நின்ற போதெல்லாம் எதுவுமே சம்பவிக்கவில்லை. ஆனால், இறுதியாக கார்ஸன் காவல் நின்றபோது முகாமை நோக்கி எதுவோ வேகமாக உருண்டோடி வந்தது.
ஸ்ஸ்ஸ்ஸ்
வஹீ...வஹீ...வஹீவஹீ..வஹீ


?! குதிரைகள் ஏன் மிரளுகின்றன?
காதில் விழும் ரீங்கார ஒலி ரொம்பவும் விநோதமாக இருக்கிறதே - என்னவாக இருக்கும்?
நாகத்தின் சீற்றமோ?
அந்த பாறைக் குவியலிலிருந்துதான் ஓசை வருகிறது. குதிரைகள் கூட அத்திசையைத்தான் மிரட்சியோடு பார்த்துக் கொண்டிருக்கின்றன... இவை இந்த அளவுக்கு மிரண்டு நான் பார்த்ததில்லை.


எதிரேயுள்ள நிலாவின் வெளிச்சத்தால் ஏற்படும் நிழல் ஏதோ ஒன்று முன்னேறி வருவதாக உணர்த்துகிறது.
டுமீல்!
பாறையை விட்டு விலகி வெளியேறிய அந்த ஐந்து தோட்டா பாய்ந்ததும் பல துண்டுகளாக சிதறிப் போனது!
டுப்!
ஹோ...!
என்ன ஆயிற்று?
ஒரு நாகம் பாறையிலிருந்து வெளியேறி குதிரைகளை தாக்க முன்னேறி வந்தது...
எங்கே அந்த நாகம்!...காணோமே?


கனா கண்டிருப்பேன் என்கிறாயா? அதன் நிழலுருவம் வர வர பெரிதாகி வந்தது... பாறைக்கு வெளியே அது தலை நீட்டியதும் சுட்டேன்!
ம்ம்ம்...
மௌனமாக அந்த இடத்தை நெருங்கினார் டெக்ஸ்! பிளந்து துண்டங்களாகக் கிடந்த பச்சை நிற முள் உருண்டை மட்டுமே அவருடைய பார்வையில் பட்டது!
சுட்டேன் என்றாயே - வந்து பாம்பின் உடலைக் காட்டு... கார்சன்!
குழப்புகிறதே!
ஏதோ பச்சை நிற முள் உருண்டை தாவரத்தை நீ சுட்டிருக்கிறாய்... ஏதேதோ கற்பனையில்!
ஹம்ம்...
ஆனால் கோபாவேசத்தோடு சீறும் நாகத்தின் ஓசையை நான் கேட்டேனே?
அப்படியா!



நான் மட்டுமல்ல... குதிரைகளும் கூட கேட்டுவிட்டு மிரண்டோடத் துடித்தனவே!
ஓகோ!
டாடி... இது ஏதோ ஒரு புது வகை தாவரமாக தெரிகிறது. துண்டுகளை எல்லாம் ஒருங்குவித்துப் பார்த்ததில் இது முள்ளம் பன்றி போன்று முட்களாலான முரட்டு மேல் தோலைக் கொண்ட ஒரு தாவர உருண்டை என்று தோன்றுகிறது.
உள்ளே இருந்தது சிதறிவிட்டதால் என்ன என்றே தெரிந்து கொள்ள முடியவில்லை! ஆனால், சிவப்பு வரிகளையுடைய சாம்பல் நிற மென் பொருள் ஏதோ ஒன்று என்று யூகிக்க முடிகிறது!
அதுமாதிரியான எதையும் நான் கேள்விப்பட்டதில்லையே!
அது சீறியதாகச் சொன்னாயே?
ஆமாம்... நாகத்தைப் போல்!
அது சீறியதோ, இல்லையோ அந்த 'ஜந்து' வைத்தான் நீ நரகத்திற்கு அனுப்பி வைத்து விட்டாயே...! விடியப்போகிறது. மீண்டும் தூங்கப் போகும் எண்ணத்தைக் கைவிட்டு சூடாக காப்பி தயாரிக்கிற வழியைப் பார்ப்போம்.
என் பேச்சில் நம்பிக்கை ஏற்படவில்லையா!
அங்கிள்...நீங்கள் தவறாக புரிந்து கொண்டிருக்கலாமில்லையா?


இல்லை...! சீற்றத்தைக் கேட்டு அது பாம்பு என்று யூகித்ததில் வேண்டுமானால் நான் தவறிழைத்திருக்கலாம். நீங்கள் கேட்டிருந்தாலும் அப்படியொரு முடிவுக்குத்தான் வந்திருப்பீர்கள்!
அத்தோடு, குதிரைகளுக்குமா மனப்பிர ஏற்பட்டிருக்கும்? ஏதோ அச்சுறுத்தியத அவை மிரண்டு எழுப்பிய ஓலம் கேட்டுத்தான் நானே சுதாரித்துக் கொண் தேடத் தொடங்கினேன்.
உனக்கு என்ன தோன்றுகிறது?
கார்ஸனின் கூற்றில் நம்பிக்கை ஏற்படாமலில்லை... ஆனால் இரவில் யாருமே வெகு சுலபமாக உணர்ச்சி வசப்பட்டு விடுவார்கள் என்ற உண்மையை மறந்துவிடலாகாது!
அந்த முள்ளுருண்டையை காற்று உருட்டிவிட நிலவொளியினால் ஏற்பட்ட நிழல் நிலவரத்தை பெரிதுபடுத்த குதிரைகள் , வீணாக மிரட்சியடைந்து போயிருக்கலாமில்லையா?
அந்த சீறும் ஓசை? அது ஒன்றும் கற்பனை அல்ல... வெகு துல்லியமாகக் கேட்டேன் என்று அடித்துச் சொல்வேன்.
காற்றினா ஏற்பட்ட சலசலப்பாக இருக்கலாம்!




போப்பா! காற்று அப்படி சீறாது!
சரி... விவாதத்தை அப்புறமாக தொடருவோம்! காப்பி ரெடியா!
ஓ...!
காப்பி பருகியபின் குதிரையிலேறி பயணத்தை தொடங்கிய அந்நால்வர் குழு ஆஞ்சலிட்டோவின் வழித்தடத்தை பின் தொடர்ந்து சென்று முடிவில் விண்கல் விழுந்துகிடந்த பெரும் பள்ளத்தை நெருங்கினர்.
அங்கே கவனித்தாயா...?
ஐயோ... பாவம்! அவனுடைய கதையும் முடிந்து விட்டது போலிருக்கிறது!
தந்தையின் கொலையாளியை தேடிப் போன அவ்விளைஞனையும் எதிரி பலிகொண்டு விட்டானே!
நாம் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.
ஆஞ்சலிட்டோ நேற்றிரவு உயிரோடிருந்திருக்கிறான். எனவே அவனை கண்டுபிடிக்கும் முதல் நபர்கள் நாம்தான். ஆகவே, எதிரியின் தடங்கள் இன்னமும் அழியாமல் அங்கே காணக் கிடைப்பது உறுதி.


நான் தொடர்ந்து ஆஞ்சலிட்டோவின் தடத்தில் முன்னேறுகிறேன்... நீங்கள் அக்கம் பக்கத்தை ஆராய்ந்தவாறு அங்கே வாருங்கள்!
இன்றைக்காவது தடயம் ஏதாவது தென்படுமா?
நிச்சயமாக! கழுகைப் போல் கொலையாளிக்கும் இறக்கைகள் இருந்தால் அன்றி!
பார்ப்போம்!
வாருங்கள் தோழர்களே ஆவியை வேட்டை யாடப் போவோம்!
வீண் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம் என்கிறீர்களா... அங்கிள்?
அதில் என்ன சந்தேகம் உனக்கு?
இவருடைய பேச்சை கேட்காதே கிட் பாறை போல் பூமி இங்கே கடினமாக இருந்தாலும் கொலையாளியின் காலடித் தடத்தை நிச்சயமாக கண்டுபிடித்து விடலாம்!


ஆஞ்சலிட்டோவின் தடத்தின் வழியாகவே தொடர்ந்து முன்னேறிச் சென்ற டெக்ஸ் கொலையாளி பற்றி ஏதாவது தடயம் கிடைக்கிறதா என்றும் ஆராய்ந்தவாறு சென்றார்.
பிணம் கிடந்த இடத்திற்கு 20 அடி தொலைவிலேயே குதிரையை விட்டிறங்கி நடந்தே போனார்.
அதெப்படி ஒரு தடம் கூட இல்லாமல் போக முடியும்?
மற்றவர்களைப் போலவே இவனும் கருகி தோல் சுருங்கி கிடக்கிறான்! ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் - இன்னமும் இவன் கையில் துப்பாக்கியை இறுகப் பற்றிய நிலையில் இருப்பதால், வீழ்த்தப்படு முன் பூரண ஆரோக்கியத்தோடு இருந்திருக்க வேண்டும்!
...அதாவது - எதிரி இவனை பின்னாலிருந்து ...ம்ம்... இந்தப் பக்கமிருந்து... அதிரடியாக தாக்கியிருக்கக்கூடும்!
எத்தனை தேடியும் சிறு தடயம் கூட கிடைக்காமல் போகவே டெக்ஸ் மனம் நொந்து போனார்...
சே... ஏன் இப்படி குழப்புகிறது!


சற்று நேரம் கழித்து -
ஏதாவது தென்பட்டதா?
இல்லை - உங்களுக்கு?
இங்கேயும் அதே கதைதான்!
கொஞ்சமும் நம்பும்படியாக இல்லையே!
அந்த செவ்விந்தியனும் இரு குதிரைகளு சருகுபோல் உலர்ந்து கிடக்கிறார்கள். அ தவிர அங்கே நான் கண்டதெல்லாம் நான் செம்மலர்களைத்தான்!
ஓ... ஹனாகுவா குறிப்பிட்ட மரணப் பூக்கள் இவைதானா?
இதற்கு முன் என் வாழ்நாளில் இவ்வகை பூக்களை கண்டதேயில்லை!
ஒன்றைக் கவனித்தீர்களா... இந்த மலர் பூத்திருப்பது பச்சை நிற முள்ளுருண்டையின் உச்சியில், இம்மாதி முள்ளுருண்டை ஒன்றைத்தானே அங்கிள் கார்ஸன் அங்கே சுட்டு கூழாக்கினார்!



இந்த முள்ளுருண்டை தன்னை பூமிக்குள் புதைத்துக் கொண்டு மலரை மட்டும் வெளியே நீட்டிக் கொண்டிருக்கிறது... பார்த்தீர்களா!
அதைத் தொடாதே!
அதற்குள்ளாகவே மலரைப் பறித்தெடுக்க தண்டைப் பற்றிவிட்ட கிட் கையை உதறிக் கொண்டு விலகினான்.
சைத்தானே...!
ஏன்... கொட்டிவிட்டதா?
இல்லை...! தண்டின் மீது சளி பூசியிருப்பது போல் இருக்கவே தொட்டதும் அருவருப்பாகி விட்டது - அத்தோடு அதை நான் தொட்ட மாத்திரத்தில் பயங்கரமாக நாற்றமடித்தது...
தொலைகிறது! இந்தப் பூவை ஆராய்ந்து கொண்டிருப்பதைவிட வேறு பல முக்கிய வேலைகள் நமக்கிருக்கின்றன...
டெக்ஸ்! நாம் அங்கே போய் அந்தப் பள்ளத்தினுள் ஒரு நோட்டம் விட்டால் என்ன?


நாம் தேடும் மர்மக் கொலையாளி அங்கே ஒளிந்து கொண்டிருக்கலாம் என்கிறாயா?
அப்படி என்றில்லை!
பல கொலைகள் அதைச் சுற்றியே நிகழ்ந்திருப்பதால் அதையும் ஆராய்ந்து பார்த்துவிடலாமே என்பதற்காகச் சொன்னேன்.
நியாயம்தான்! வாருங்கள் போகல
வழி முழுக்க தடம் ஏதாவது தென்படுகிறதா என்று தொடர்ந்து பார்த்துக் கொண்டே போனார்கள். ஏமாற்றம் தான் மிஞ்சியது. கரை மீது ஏறி பார்த்த பின் புதராக மண்டிக் கிடந்த அந்த நூதன தாவரங்களை கிட்டத்தில் போய் பார்க்கத் தீர்மானித்தனர்.
இதுவரை எந்தத் தடயமும் கிடைக்கவில்லை!
கீழே இறங்கி அவற்றின் அருகே போவோம்
விண்கல் விழுந்ததால் ஏற்பட்ட சூட்டில் கருகிப்போன பூமி இன்னமும் அப்படியே கருமையாக இருக்கிறது பாருங்கள்...
பிரம்மாண்டமானது போலும்!
கிராமத்தின் மீது விழுந்திருந்தால் சர்வ நாசம் விளைந்திருக்கும்.
சந்தேகமில்லாமல்!


அதையடுத்து -
என்ன வகை தாவரம் இது?
கருநிற தண்டுகள் கருநாகத்தை நினைவூட்டுகின்றன...
அந்த பச்சைநிற முள்ளுருண்டைகள் விஷமத்தனமாக தோற்றமளிக்கின்றன.
மோரிஸ்கோ இப்போது இங்கே இருந்தால் பளிச்சென்று சொல்லிவிடுவார் - இவை எவ்வகையை சேர்ந்தவை என்று.
ஒருவேளை தெரியாது போனால் உடனே ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டுவிடுவார்.
அப்போது, கருந்தண்டோடு ஒட்டிக் கொண்டிருந்த ஒரு முள் உருண்டை உதிர்ந்து விழுந்து தடிமனான காம்பை நோக்கி உருண்டோடியது.
தன்னிச்சையாக அதைப் பிடித்து எடுக்க முயன்ற கிட்டை தந்தையின் எச்சரிக்கை தடுத்தது.
பொறு...! வெறுங்கையால் அதைத் தொடாதே!


அந்த கூர்மையான முட்கள் விஷத்தன்மை கொண்டவையாக இருக்கலாம்! கொண்டு போய் மோரிஸ்கோவிடம் காண்பிக்க நினைத்தால் தகுந்த முன்னேச்சரிக்கையோடு செயல்படு!
ஓ.கே. டாடி...கைக்குட்டையில் முடிந் எடுத்துச் சென்று குதிரையில் இருக்கும் பையினுள் போட்டு விடுகிறேன்.
இங்கே இருக்கவே பிடிக்கவில்லை -வாருங்கள் போகலாம்
கொலையாளியைப் பற்றி துப்புக் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கமா?
அதுவும் தான்! அத்தோடு, இங்கே நிற் ஏனோ பயமாக இருக்கிறது!
உங்களுக்குத்தான் என்றில்லை -எனக்கும்தான் காரணமின்றி வயிற்றை பிசைகிறமாதிரி இருக்கிறது!
அப்படியானால் உடனே கிளம்புங்கள்!
குதிரைகள் நின்ற இடத்துக்கு திரும்பியது கிட் தன் சேகரிப்பை தோல் பையினுள் போட்டு பத்திரப்படுத்தினான்.
அடுத்து...?


சங்கடமான வேலை! எந்த தடயமும் இன்றி ஒரேயடியாக நிறைச் செய்கிறது!
கொலையாளி இங்கேதான் எங்கோ அருகில் இருக்க வேண்டும்!
இருக்கத்தான் வேண்டும்! எதிரியைப் பற்றி ஒரு சிறு துப்புக் கிடைத்தாலும் போதும் -உண்மையை கண்டறிந்து விடலாம்!
வோ!
உன் கருத்து என்ன?
நேராக மோரிஸ்கோவிடம் போகலாம் என்கிறேன்!
சரியான யோசனை! ஆஞ்சலிட்டோவின் உடலையும் கொண்டு போவோம்! சடலத்தை ஆராய்ந்து உண்மையை கண்டுபிடித்து விடக்கூடும்! அவருடைய வழி முறைகள் நம்முடையதைவிட விஞ்ஞான பூர்வமானவை!
உண்மைதான்!
தடயத்தை விட்டுச் செல்லாமல் கொலையாளி மறைந்த புதிரை அவர் விடுவிக்கக் கூடும்!
வாருங்கள் - போகலாம்!



குதிரையிலேறி பயணத்தை தொடங்கிய அந்தக் குழு யூனியன் பஸிபிக் ரயில்வே ஸ்டேஷனை ஒட்டியிருந்த வான்ஸ்லோ கிராமத்தில் ஒரு சவப்பெட்டியை வாங்கி . அதில் சடலத்தை பத்திரப்படுத்திக் கொண்டு. ரயில் ஏறி எல்பாஸோ நோக்கி பயணத்தை தொடர்ந்தது...
தடயமே இல்லை என்கிற உண்மையை ஜீரணிக்கமுடியவில்லை!
ரொம்பவும் அலட்டிக் கொள்ளாதே!
இந்தப் புதிருக்கு சீக்கிரமே விடை கிடைக்காமலா போய்விடும்?
அப்படியே நம்புவோமாக!
எல்பாஸோ போய்ச் சேர்ந்தபின் போர்லெனிர் கிராமத்தை சென்றடைந்து அங்கே ஒரு கோச்சை அமர்த்திக் கொண்டு பயணத்தை தொடர்ந்து இரண்டு நாள் கழித்து பிலாரெஸ் சென்றடைந்தனர்.
வந்து விட்டோம்!



பத்து நிமிடங்களுக்குப் பின் -
வம்பில் மாட்டிக் கொள்ளப் போகிறோம் பாஸ்!
ஏன் அப்படிச் சொல்கிறாய்?
டெக்ஸ் வில்லரும் அவரது சகாக்களும் இங்கே வந்து கொண்டிருக்கிறார்கள்.
நிஜம்தானா நீ சொல்வது?
சத்தியமாக - பாஸ்!
அருமை...! ஓடு... போய் அருமையான விருந்து சமை... நான் அவர்களை வரவேற்று அழைத்து வரப் போகிறேன்!
சற்றைக் கெல்லாம் -
வாருங்கள் தோழர்களே!
மீண்டும் உன்னை பார்ப்பதில் எவ்வளவு சந்தோஷம் தெரியுமா மோரிஸ்கோ?



அது என்ன சவப்பெட்டி? நிச்சயம் பிரேதமாக இருக்காது என்று நினைக்கிறேன்... உள்ளே வேறு எதை வைத்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?
திகைப்பூட்டக்கூடிய ஒன்று என்று இப்போதைக்கு நீ தெரிந்து கொண்டால் போதும்!
என் ஆர்வத்தை தூண்டிவிட்டீர்கள்!
உள்ளே கொண்டு போய் வைத்தபிறகு விளக்குகிறேன்
அப்போது யூஸெபியோ அங்கே வந்து அனைவருக்கும் வணக்கம் கூறிவிட்டு மோரிஸ்கோவை நோக்கி பேசலானான்...
அப்போதே நான் சொன்னேனில்லையா பாஸ்? வம்பு வருகிறது என்று! இப்போது சவப்பெட்டி வந்து சேர்ந்திருக்கிறது! பாஸ் -இதை உள்ளே வைக்க அனுமதிக்காதீர்கள்.
பாஸ்... நீங்கள் மாமேதையாக இருக்கலாம்... ஆனால் நான் என் மூதாதையர்களிடமிருந்து கற்றறிந்த உள்ளுணர்வுத் திறன் மூலம் மரணத்தின் நிழலை இங்கே என்னால் உணர முடிகிறது.
?!
சவப்பெட்டி இருக்கும் இடத்தில் மரணத்தின் நிழல் இருக்கத்தான் செய்யும்... யாருக்கும் தெரிந்த சங்கதிதானே இது?


ஸாரி... வில்லர்! நான் சொன்னதன் உள்அர்த்தம் வேறு என்பது உங்களுக்கும் தெரியாதது அல்ல!
ஒத்துக் கொள்கிறேன் யூஸெபியோ... ஆனால் அந்த ஆபத்து இங்கே தொடரவில்லை என்பதை புரிந்துகொள்.
நீங்கள் பேசிக் கொள்வது எதுவுமே எனக்கு விளங்கவில்லை!
பெட்டிக்குள் பிரேதம் இருப்பதை யூகிக்க சாமர்த்தியம் அதிகம் தேவையில்லை என்றாலும் யூஸெபியோவுக்கு எப்படியோ இந்த மரணம் சாதாரணமானதல்ல... இதுவரை கேள்விப்பட்டிராத அளவில் பயங்கரமானது என்றவரை தெரிந்திருப்பது ஆச்சரியம் தான்!
அந்த சடலத்தை உள்ளே கொண்டு வந்தால் மரணத்தின் நிழல் இங்கேயும் படியத் தொடங்கும் என்ற எச்சரிக்கையையும் சொல்லி வைக்கிறேன்.
உளறாதே!
பொறுங்கள்! யூஸெபியோவுக்கு தீர்க்க தரிசன அறிவு இருப்பதில் சந்தேகம் வேண்டாம். அவன் ஆபத்து என்று குறிப்பிட்டால் நிச்சயம் அதில் ஆபத்து இல்லாமலிராது!
ஆபத்து வந்தால் டெக்ஸ் கவனித்துக் கொள்வார்... களைப்பு நீங்க ஐஸ் பீர்கூட பருகாமல் இப்படி பேசிப் பேசியே வெட்டிப் பொழுது போக்கிக் கொண்டிருந்தால் எப்படி?


ஹோபி இடையர்கள் மர்மமான முறையில் செத்துப்-போனது பற்றியம், சடலங்களின் விசித்திர தோற்றம் பற்றியும், சம்பவம் நடந்த பகுதியில் எதிரிபற்றி எந்த தடயம் இல்லை என்பதையும் சுருக்கமாக எடுத்துரைத்தார் டெக்ஸ்
புரியாத புதிராக உள்ளதே!
யூஸெபியோ சோர்வடையாதே... நடந்ததைத்தான் நீயும் கேட்டாயல்லவா... பின்னே எதற்கு பயம்?
நீங்கள் சொன்னால் சரி... பாஸ்!
பாஸின் உத்தரவின்படி டிரைவரின் துணையோடு அந்த சவப்பெட்டியை உள்ளே எடுத்துப் போனான் யூஸெபி
அதே சமயம் தான் கைக்குட்டையில் கட்டி எடுத்து வந்த முள்ளுருண்டையை மோரிஸ்கோ வசம் ஒப்படைத்தான் கிட்!
நன்றி...! அதைக்காண துடிப்போடிருக்கிறேன் நான்!
பள்ளத்தினுள் பரவிக் கிடக்க நாங்கள் கண்ட தாவரத்தின் மாதிரி இது!
ஜாக்கிரதை! கையில் குத்திவிடப்போகும் மோரிஸ்கோ!


கவலை வேண்டாம்... வெகு கவனமாக கையாளுவேன்!
நல்லது!
சற்றுப்பின்னர் -
ஒரு தண்டோடு ஒட்டிக் கொண்டிருந்தது என்று சொன்னீர்கள் அல்லவா?
ஆமாம்!
தரையில் புதராக வளைந்து சுருண்டு கிடந்த கரு நிற தண்டுகளில்...
?!
?!
ஏய்... ஸிகுய்டா! என்ன ஆயிற்று உனக்கு திடீரென்று?


சீற்றமடைகிறதோ?
இல்லை...மிரண்டு போயிருக்கிறது... விநோதமான சங்கதிதான்.
அமைதியான சுபாவம் கொண்ட குரங் இது... ஏனோ இப்படி சுத்துகிறது!
வா... உன்னைக் கொண்டு போய் உன் கூண்டினுள் பத்திரமாக அடைத்துப் போடுகிறேன்!
இன்று மாலை வரை உள்ளேயே அடைந் கிட...என்ன... புரிகிறதா?
ஆனால், அமைதியாக அடங்கிக் கிடப்பதை விடுத்து அந்தச் சிறு குரங்கு ஆவேசமாக கூண்டின் கம்பிகளை பிடித்து உலுப்பி ஆர்ப்பாட்டம் செய்தது.
யீ..யீ...யீ...யீயீயீ...!
அது பொறுக்காமல் முடிவில் ஒரு திரையைக் கொண்டு வந்து கூண்டை மூடிவைத்தார் மோரிஸ்கோ...
இனியாவது கத்தமாட்டாயல்லவா!


ஏன் அப்படி ஆர்ப்பாட்டம் பண்ணுகிறதோ... தெரியவில்லை! சரி, அது கிடக்கட்டும்... விஷயத்தை சொல்லுங்கள்!
இம்மாதிரி பச்சைநிற தாவரத்தை இதற்கு முன் பார்த்திருக்கிறீர்களா...?
இல்லை! ரொம்பவும் விநோதமாக இருக்கிறதே! கருப்பு நிற தண்டின் மீது வளர்வதாக சொன்னீர்கள் அல்லவா? எனவே தாவர வகையை சேர்ந்ததாகத் தானிருக்க வேண்டும்!
...ஆனால் கடல் வாழ் ஜந்து மாதிரியும் தோன்றுகிறது - ஆமாம்... இது அந்த வகைதான்!
பாஸ்... டின்னர் ரெடி!
இதை அப்புறமாக வந்து ஆராய்வோம்... டின்னர் ஆறிபோய்விடப் போகிறது!
எங்களுக்கும் நல்ல பசி... வாருங்கள் போகலாம்!



உணவருந்தும் வேளையில் உரையாடல் அந்த மர்மமான மரணங்கள் பற்றியும், அங்கே எவ்வித தடயமும் இல்லாத புதிர் பற்றியும்தான் சுற்றிச் சுற்றி வந்தது.
சடலங்களை தீர்க்கமாக பரிசீலித்தீர்களா?
நிச்சயமாக!
ஆனால் முறைப்படி பரிசீலிக்க உபகரணங்கள் எங்கள் வசம் இருக்கவில்லை. ஆயினும் நாங்கள் முடிந்தவரை தெளிவாக பரிசீலித்து விட்டோம்!
மேல் தோல் இருந்த நிலையை வைத்து அதிகமாக தெரிந்து கொள்ள முடியாது. முறைப்படியான சவப் பரிசோதனை மூலம் தான் உண்மையை கண்டறிய முடியும்!
அதை நாளை
செய்வீர்கள
பொறுமையில்லையே உங்களிடம்!
எல்லோருமே பொறுமையிழந்து தான் போயிருக்கிறோம்!
ஆனால் எனக்கு கூடுதலாக ஒரு
காரணம் இருக்கிறது!
?!


கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்!
ஹோபியின் சடலத்தை நாங்கள் பார்த்ததற்கு முந்தைய இரவு, நான் காவல் நின்ற சமயம், குதிரைகள் எதையோ கண்டு அல்லது கேட்டு மிரண்டு ஆர்ப்பாட்டம் செய்தன.
அந்த தொடர்ந்து சற்றுத் தொலைவிலிருந்த பாறை ஒன்றின் பின்னாலிருந்து 'விர்' என்று விநோதமான ஒரு ஒலி வரக் கேட்டேன். துப்பாக்கியை தயார் நிலையில் உயர்த்திப் பிடித்துக் காத்திருந்த நான் பாறையின் பின்னாலிருந்து ஏதோ ஒன்று வெளி வரக் கண்ட மாத்திரத்தில் கச்சிதமாக குறி வைத்து அடித்து விட்டேன்.
நாகமாக இருக்கலாமோ?
இல்லை! கிட் எடுத்து வந்திருக்கும் இதே முள்ளுருண்டை மாதிரியான ஒன்று அது!
விர்ரென்ற ஒலி கேட்டது எப்படியோ? மற்றதெல்லாம் நிஜம் தான் மோரிஸ்கோ!
சரிதான்!
என்ன சரிதான்? அந்த ஓசையை தெள்ளத் தெளிவாகக் கேட்டேன் என்கிறேன்!
இல்லை என்று நான் சொல்லவில்லை நண்பரே!
ஓசை கேட்டது... ஒரு சம்பவம் - இந்த முள்ளுருண்டையை அடுத்துக் கண்டது இன்னொரு சம்பவம்... இரண்டையும் இணைத்துக் கொண்டதில்தான் குழப்பம் என்பது என் கருத்து


இதையேதான் நானும் சொன்னேன்! கார்லன் சுட்டது எதை என்று தேடிப் போய்ப் பார்த்த எங்களுக்கு ஒரே ஆச்சரியம்!
என்ன அது?
இதே பச்சை முள்ளுருண்டைதான்
துண்டுகளாக சிதறிக் கிடந்தது...
அமைப்பு எப்படி இருந்தது?
முரட்டுத் தோலின் மேலே நீண்ட முட்கள் இருக்க உள்ளே வெளிறிய சிவப்பு நிற பசைக் கூழ் போல் இருந்தது.
ம் ம்... விநோதமாக இருக்கிற
இவற்றில் சில சிவப்பு நிறத்தில் பூத்திருப்பதாக குறிப்பிட்டீர்கள் அல்லவா!
ஆமாம்! உருண்டை சற்று உள்வாங்கிய இடத்திலிருந்து செந்நிற தண்டு நீண்டிருக்க அதன் உச்சியில் முன்பின் யாரும் பார்த்திராத செந்நிற மலர் பூத்திருந்தது...


அந்த மலர் ஒன்றை பறித்தெடுத்து இங்கே நீங்கள் கொண்டு வந்திருக்கலாம்!
முயன்றேனே! ஆனால் நான் அதை தொட்ட மாத்திரத்தில் சட்டென்று துர்நாற்றத்தை அது பரப்பியது...
விசித்திரமாக இருக்கிறதே! அம்மாதிரி மலரை நான் படித்தது கூட இல்லை! சவப் பரிசோதனை முடிந்தபின் இதுபற்றி மேற்கொண்டு பேசுவோம்.
காபி சாப்பிட்டானதும் பரிசோதனையை தொடங்கிவிடுவோம்!
தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டீர்கள் என்கிற தைரியத்தில் சடலத்தை சவப் பெட்டியிலிருந்து அகற்றி பரிசோதனை மேஜை மீது கிடத்தியிருக்கிறேன் பாஸ்!
நல்ல காரியம் செய்தாய் யூஸெபியோ...! இங்கே வேலை முடிந்தவுடன் பிரேத பரிசோதனைக்கான ஏற்பாடுகளை செய்!
அதையும் செய்துவிட்டேன் பாஸ்!
உன் சாமர்த்தியத்தை எப்படி பாராட்டுவது என்றே தெரியவில்லை!


சடலத்தை நோட்டம் விட்டிருப்பாய் என்று நினைக்கிறேன். அதைப்பற்றிய உன் கருத்து என்ன?
விநோதமான மரணம் பாஸ்!
மரணக் கற்கள் விவகாரத்தை நினைவூட்டுகிறது... ஆனாலும் இது
வேறு மாதிரியானது!
அப்படி நீ சொல்லக் கார
முந்தைய விவகாரத்தில் சடலத்தின் தோல் கல்லாகிப் போனது மாதிரி இருந்தது... ஆனால் இவர்கள் கொண்டு வந்திருக்கும் சடலத்தின் தோல் காற்றிலும், சூரிய வெப்பத்திலும் பலநாள் கிடந்து சுருங்கியது போல் இருக்கிறது.
உனக்கு அபார ஞாபகசக்தி இருப்பதோடு எதையும் கூர்ந்து கவனிக்கும் திறனும் இருக்கிறது!
அதாவது இரண்டும் வெவ்வேறு வகைப்பட்ட விவகாரம் என்கிறீர்களா?
நாளைதான் உறுதியாகக் கூற முடியும்!
இன்றைக்கு அதிக அவகாசம் இல்லையாதலால் மேலோட்டமாகவே பரிசீலிக்கப் போகிறேன். ஹோபியின் உடலில் எந்தப் பகுதி தாக்கப்பட்டிருக்கிறது என்று கண்டறிய முயற்சிப்பேன்.



நீங்களும் என்னோடு இருக்க விரும்பினால் தாராளமாக வரலாம்...
நாங்களும் உடன் இருக்கிறோம்.
ஐந்து நிமிடங்களுக்குப்பின் மோரிஸ்கோவும் அவருடைய உதவியாளும் பணியை தொடங்கினார்கள்
ஆமாம்! தோல் படுமோசமாக சுருங்கிப் போயிருக்கிறது! விளக்கை இன்னும் சற்று அருகில் தூக்கிப் பிடி!
துப்பாக்கியை தயார் நிலையில் ஏந்திப் பிடித்த நிலையில் தலை குப்புற விழுந்து கிடந்தான். எனவே, கழுத்துப் பகுதியில் கவனம் செலுத்துங்கள். தான் தாக்கப்படவிருப்பது அவனுக்கு தெரிந்திருக்கிறது...
ஆனால் கழுத்துப் பகுதியில் தாக்கப்பட்டதற்கான அடையாளம் எதுவும் தென்படவில்லை.
காயமோ, துளையோ எதுவுமே இல்லை.



முடிக்கு அடியில் மண்டை தோலில் ஏதோ காயம் தெரிகிறதே! ஆனால் -
ஆமாம்...! சவரக் கத்தி பட்ட காயம்!
அப்படியே விட்டு விடு... தோலை சிதை விடாதே!
ஓ.கே. பாஸ்!
உங்கள் கருத்து?
யூஸெபியோ தெரிவித்த கருத்து சரியானது... மரணக்கற்கள் விவகாரத்திற்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.
குழப்பம் என்னவென்றால் பிரேதத்தை விட்டுச் சென்ற கொலையாளி தடயம் எதையும் விட்டுச் செல்லாததுதான்.
ம்ம்...
கொலைதான் என்று உறுதியாக நம்புகிறீர்களா?
பின்னே? தற்கொலையாகவ இருக்க முடியும்?




இனம் விளங்காத ஏதோ ஒரு காரணத்தினால் மரணம் சம்பவித்திருக்கிறது... விபத்தாகவும் இருக்கலாம்...
அவ்வாறு தீர்மானிக்க காரணம்?
அனுபவசாலிகளான நம்மால் இன்னமும் வேறுவிதமாக தீர்மானிக்க முடியாததுதான் காரணம்!
கொலையாளி ஆகாய மார்க்கமாக வந்து போயிருக்கலாம்!
ப்பூ...!
பாஸ்.... வந்து பார்க்கிறீர்களா?
வாருங்கள்... மரணத்தின் காரணத்தை கண்டறிய முடியுமா என்று பார்ப்போம்
பிரேதத்தை எவ்வளவோ நுணுக்கமாக ஆராய்ந்தும் கூட காயத்தின் அடையாளமோ, மரணத்தின் காரணமோ தெரியவேயில்லை!
நுண்ணிய விஷஅம்பு பாய்ந்திருக்கலாமோ என்ற சந்தேகம் கூட இனி உங்களுக்கு வேண்டாம்... எந்த அடையாளமும் இல்லை.
கெட்டது போ!
அடுத்து?


வேறு சில நுணுக்கமான பரிசோதனைகளை நாளை செய்வோம். இன்றைக்கு இத்தோடு நிறுத்திக்கொண்டு நம் மூளைக்கு கொஞ்சம் ஓய்வு கொடுப்போம்!
யூஸெபியோ...! போய் ஸிகுய்டாவை கூண்டிலிருந்து வெளியேற்று...! அடுத்து எங்களுக்கு உயர்ரக மது பாட்டில் ஒன்றை கொண்டு வந்து கொடுத்து விட்டு நீ தூங்க-போகலாம்!
ஓ.கே. பாஸ்!
அந்த ஐவரும் அவ்விவகாரம் பற்றி ஒரு மணி நேரத்திற்கு விவாதம் நடத்தியபின் படுக்கச் சென்றனர். அவர்களை தினறச் செய்து வரும் மர்ம மரணம் அன்றிரவே அவர்களின் இருப்பிடத்திலேயே நிகழப் போகிறது என்கிற உண்மையை அவர்கள் கற்பனையாக்கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள்
குட் நைட், மோரிஸ்கோ!
நன்றாக தூங்குங்கள்... யூஸெபியோ வந்து காலையில் உங்களை எழுப்புவான்!
மறுநாள் காலையில் யூஸெபியோ குரல் கேட்டு அவர்கள் விழிப்புற்றது என்னவோ உண்மைதான்... ஆனால் அவன் விடுத்த அழைப்புதான் அவர்கள் சற்றும் எதிர்பாராத விதமாக இருந்தது.
பாஸ்...பாஸ்
கீழே இறங்கி வாருங்கள் - சீக்கிரம்
?!
?!



யூஸெபியோ ஏன் இப்படி அலறுகிறான்?
ஏதோ விபரீதமாக சம்பவித்திருக்க வேண்டும்
வாருங்கள் - கீழே போவோம்!
யூஸெபியோ!
ஓடிவாருங்கள்... பாஸ்!
என்ன நடந்தது?
ஸிகுய்டா... கதவினருகே செத்துக் கிடக்கிறது - மர்மமான முறையில்!
அந்த செவ்விந்தியனுக்கு ஏற்பட்ட மாதிரியான மரணம்
கடவுளே!
மரணமா...? யார்?




ஸிகுய்டா...! நேற்று நீங்கள் என் அறையில் பார்த்த சிறு குரங்கு!
என் யூகம் சரியாக இருக்குமேயானால் ஷோபிக்கு ஏற்பட்ட அதேவகை மரணம்தான் இதற்கும் சம்பவித்திருக்க வேண்டும்
யூஸெபியோ அப்படித்தான் சொல்கிறான்!
ஆமாம்... மிஸ்டர் வில்லர்
அறையினுள் வேறுயாராவது இருந்தார்களா?
இருக்கவில்லை! ஆனால்
ஸிகுய்டாவின் சவத்தைக் கண்டதும் நான் சட்டென்று வெளியே ஓடி வந்து கதவை பூட்டி தாழிட்டு விட்டேன்.
கதவை திறந்துவிட்டு சட்டென்று விலகிக் கொள்!உள்ளே யாரும் இருக்க மாட்டார்கள் என்ற போதினும் நீ உஷாராக நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.
யெஸ்...வில்லர்!
உண்மையை நீ தெரிந்து கொண்ட மாதிரி இருக்கிறது உன் பேச்சு!
சரியாக யூகித்துவிட்டாய் கார்ஸன்!


நான் நினைப்பது சரியாக இருக்குமேயானால், நாம் கண்டறியப் போகும் உண்மைகள் இம்மரணங்கள் மனிதனால் நிகழ்ந்தவை அல்ல என்பதை உறுதி செய்யக் கூடும்.
இதைப் பாருங்கள்!
உள்ளே நுழைந்தவர்களின் பார்வையில் அந்த குரங்கின் சடலத்தை தாண்டித் தென்பட்டது ஒரு புதிரான காட்சி.
அங்கே இருந்த பச்சை முள்ளுருண்டையில் இப்போது செந்நிறப் பூ ஒன்று அட்டகாசமாய்ப் பூத்திருந்தது.
அது - மரண மலர்!
உங்களுடைய நண்பர்கள் வந்தபோது நான் உணர்ந்த மரணத்தின் நிழலுக்கு அடிப்படை எது என்று இப்போது புரிந்துவிட்டது... அது - அவர்கள் கொண்டு வந்த, சவப்பெட்டி அல்ல... இந்த பச்சை நிற சைத்தான்தான்!



சட்டென்று ஒரு வெறி உந்தித்தள்ள ஸிகுய்டாவின் மரணத்திற்கு பழி வாங்கும் ஆத்திரத்தில் யூஸெபியோ சுவரில் தொங்கிக் கொண்டிருந்த குறுவாள் ஒன்றை பாய்ந்து பற்றி எடுத்தான்.
யுஸெபியோ - வேண்டாம்!
முடியாது!
மறுகணம் மலரின் தண்டை சதக் என்று துண்டித்தான்.
தொலைந்து போ... சைத்தானே!
சதக்
சாத்தானின் சூட்சமம்...! - கவனியுங்கள்!
?!
?!
வெட்டப்பட்டதும் அந்த தண்டிலிருந்து செந்நிற பிசுபிசுப்பு திரவம் கொட்டியது...
உருக்குலைந்து போன மலர் இருந்த இடத்தில் மறு கணம் வெளிறிய உலர்ந்த சில தழைகள் மட்டுமே மிஞ்சிக் கிடந்தன.
அதே கணத்தில் அந்த மலர் நிறமிழந்து உருவமிழந்து சிதைந்து போன்து.
பில்லி சூனிய சங்கதியா?



யுஸெபியோ விலகிப் போ அப்பால் அதன் அருகே நெருங்காதே!
அதை என்னிடம் விடுங்கள்.
வேண்டாம் கார்ஸன்!
என் யூகம் சரியாக இருக்குமேயானால் இனி அதனால் எந்த ஆபத்தும் விளையாது!
அருகிலிருந்த கண்ணாடிக் கூண்டை எடுத்து அந்த முள்ளுருண்டை மீது வைத்தார்.
ஆபத்தானதோ, இல்லையோ இதுஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இருக்கட்டும்!
அந்த விசித்திர ஜந்துவை வெகு கவனமாக எடுத்து பரிசோதனைக் கூடத்திலிருந்த மேஜை மீது வைத்து விட்டு அதிலிருந்து வழிந்த செந்நிற திரவத்தை ஆராயத் தொடங்கினார் மோரிஸ்கோ...
பிசின் மாதிரி இருக்கிறது!
இல்லை... இது வேறு! இதிலிருந்து கொஞ்சத்தை எடுத்து முறைப்படி சோதித்துவிட்டு மிச்சத்தை சொல்கிறேன். இது என்னவென்று ஏற்கனவே நான் யூகித்துவிட்டேன்!


இப்போது பிசின் மாதிரி தோற்றமளித்தாலும் உண்மையில் இது நேற்றுவரை ஸிகுய்டாவின் உடம்பினுள் ஓடிக் கொண்டிருந்த இரத்தமாகும்.
இரத்தமா?
அப்படித்தான் நினைக்கிறேன்! என் பரிசோதனை இதை உறுதி செய்தால் இதுவரை மனிதர் எவரும் பார்த்திராத கேள்விப்பட்டிராத ஒரு புது வகை தாவரத்தை நாம் கண்டறிந்தவர்களாவோம்
சில தாவரங்கள் மாமிச பட்சணிகள் என்று நாம் அறிவோம். இலைகளை விரித்து வைத்துக் காத்திருந்து சிறு புழு பூச்சிகள் வந்து அமர்ந்ததும் மூடிக் கொண்டு மிச்சத்தை துப்பிவிடும் தாவரங்கள் உண்டு... ஆனால் இது - இரத்தக் காட்டேரிமாதிரி விநோதமாக செயல்படுகிறது.
என் கூற்றை நான் செய்யப் போகும் பரிசோதனை உறுதி செய்யும் என்பதில் எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது.
எனக்கும் அந்த நம்பிக்கை வந்துவிட்டது
தன் 'இரை'யை இது எவ்வாறு போக்கிக் கொள்கிறது என்ற விபரங்கள் எல்லாம் ஆராய்ந்து அறியவேண்டும். ஆனால் ஒன்று அந்த புதிரான மரணங்களுக்கெல்லாம் இந்த சைத்தான்தான் காரணம் என்பதில் ஐயப்பாடே இல்லை.
இது உண்மையானால் அந்த விண்கல் விழுந்த பகுதியில் வாழும் ஹோபி இனத்தவரை நாம் எச்சரிக்க வேண்டியது அவசியமல்லவா!
நிச்சயமாக! நானும் அது பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்!



ஷெரீப்புக்கு தந்தி அனுப்பி, ஹோபி கிராமத்திற்கு யாரையாவது அனுப்பி அந்த விண்கல் அருகே யாரும் போக வேண்டாம் என்று மக்களை எச்சரிக்கச் சொல்வோம்!
குறிப்பாக இந்த 'சைத்தான்' தாவரத்தின் அருகே யாரும் போகக்கூடாது என்று எச்சரிக்க வேண்டும்!
நான் அன்று காவல் நின்ற இரவில் குதிரைகள் ஆர்ப்பாட்டம் பண்ணியது ஏன் என்று இப்போது விளங்குகிறதா?
ஆபத்து நெருங்கி வருவதை அவை உணர்ந்திருக்க வேண்டும்...
நான் அந்த முள்ளுருண்டையை சுட்டு சிதறடித்ததும் 'புஸ் ஸென்ற சீற்றம் ஓய்ந்து போனது என நான் சொன்னேன்... என் வார்த்தையை இப்போதாவது நம்புகிறீர்களல்லவா?
அந்த 'சைத்தான்' அப்படியொரு ஒலியை எழுப்ப முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?
எதையும் தீர்மானமாக சொல்வதற்கில்லை!
இந்த தாவரத்தைப் பற்றி இன்னமும் நமக்கு முழு விபரமும் தெரியவில்லை.... இப்போதைக்கு 'பச்சை சைத்தான் என்று பெயர் சூட்டி வைப்போம்!



விண்கல் விழுந்த பள்ளத்தில் புதிதாக முளைக்கத் தொடங்கியுள்ள தாவரத்தின் தண்டில் இந்த முள் உருண்டைகள் உருவாகி, முதிர்ந்து, உதிர்ந்து பின்னர் தனியா இயங்கும் தன்மை பெற்று விலகிச் செல்கிறது... பின்னர் மனிதனையோ மிருகத்தையோ தேடிச் சென்று ஒட்டிக் கொண்டு அவர்களுடைய இரத்தத்தை உறிஞ்சுகிறது... முற்றிலுமாக இரத்தத்தை உறிஞ்சியானதும் அதில் செந்நிற பூ ஒன்று பூக்கிறது. இதுவரை நாம் தெரிந்து கொண்ட விபரங்கள் இவை.
சரிதானா?
இன்னொரு விஷயத்தை குறிப்பிட மறந்து விட்டீர்கள். அது இரவில் மட்டுமே நடமாடுகிறது!
அந்த மாதிரி ஒரு 'கட்டுப்பாடு' மட்டும் இல்லாதிருந்தால் அங்கே ஆராயப் போன நம்மில் எவருமே உயிரோடு திரும்பியிருக்க முடியாது!
உண்மைதான்! நாம் அங்கே போயிருந்த போது அவற்றிடையே சிறு சலனம் கூட இருக்கவில்லை!
அவை உயிர்த்து ஆபத்தை விளைவிப்பது இரவில் மட்டுமே என்பது உறுதியாகிறது.
காப்பி...பாஸ்!



சரியான சமயத்தில் கொண்டு வந்திருக்கிறாய் யுஸெபியோ!
தாங்க்ஸ் மிஸ்டர் வில்லர்!


நீங்கள் கடைசியாக கூறிய வாசகங்கள் காதில் விழுந்தது. நீங்கள் அனுமதித்தால் ஒரு சிறு ஆலோசனை கூற விரும்புகிறேன்!


சொல்...!
இது பகல் வேளையாதலால், அது ஆபத்து ஏற்படுத்தாது. இப்போது அதை இரண்டாக கூறு போட்டு ஆராய்ந்தால் என்ன?


நல்ல யோசனைதான்!
மோரிஸ்கோ - உங்கள் கருத்து?
அதை பத்திரப்படுத்தி வைத்திருந்து நிதானமாக, தீவிர பரிசோதனைகள் பலவற்றை மேற்கொள்ளலாம் என்று நினைத்திருந்தேன்.



சரியான தீர்மானம்தான்... ஆனால் இதை உரிய முறையில் கட்டுப்படுத்தி வைக்கத் தவறினால் ஹோபிகளுக்கு ஏற்பட்ட கதிதான் உங்களுக்கும் நேரிடும் - ஜாக்கிரதை!
நியாயமான எச்சரிக்கை!
நாளை விடியும் வரை அதை வைத்தி ருந்து ஏற்படும் மாற்றங்களை குறிப்பெடுத்துக் கொண்டு ,பின்னர் யுஸெபியோ சொன்ன மாதிரி வெட்டிப் பார்த்துவிடலாம்.
ஆனால் சிறு பிழை நேர்ந்தாலும் விளைவு பயங்கர மானதாக இருக்கும்... மறந்து விடாதீர்கள்!
கவலைப்பட வேண்டாம்! அதை எங்கே வைக்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டேன்... எந்த ஆபத்தும் விளையாமல் நான் அதை பரிசீலிக்க முடியும்.
இந்த ஏற்பாட்டில் ஆபத்து எதுவும் இருக்க முடியாது!
யுஸெபியோ வெட்டிய கீழ்ப்பகுதி சுருங்கி கருகிப் போய்விட்டது. பாருங்கள்!
அந்தப் பகுதி பிற முட்கள் மாதிரி தோற்ற மளிக்கிறது - நிறம் மட்டுமே பளுப்பாக உள்ளது!


அந்தப் பகுதி பிற முட்கள் மாதிரி தோற்றமளிக்கிறது - நிறம் மட்டுமே பழுப்பாக உள்ளது!
கவனிக்க வேண்டிய அம்சம்!
உள்ளேயே கிட சைத்தானே! பொழுது விடிவதற்குள் உன்னைப் பற்றிய இரகசியங்கள் அனைத்தும் அம்பலமாகிவிடும் என்று நம்புகிறேன்!
ஷெரீப்புக்கு தந்தி கொடுக்க டெக்ஸும் மற்றவர்களும் சென்றிருந்த வேளையில் மோரிஸ்கோ தோட்டத்தின் ஒரு பகுதியில் கண்ணாடி பலகைகளை கொண்டு சுற்றுச் சுவர் ஒன்று எழுப்பிக் கொண்டிருந்தார்.
இது போதும் யுஸெபியோ?
அந்த சைத்தான் தாண்டிக் குதித்து விட்டால்
அது தன் முட்களைக் கொண்டு உருண்டு நகருகிறது... எனவே, தாண்டிக் குதிக்காது என்பது என் கணிப்பு! எதற்கும் ஒரு முன் எச்சரிக்கை நடவடிக்கையாக, நாம் பரிசோதனைகளை தொடங்கு முன் டெக்ஸையும் மற்றவர்களையும் துப்பாக்கியை தயார் நிலையில் வைத்துக்கொண்டு இங்கே நிற்கச் சொல்வோம். விபரீதமாக அந்த சைத்தான் ஏதாவது செய்ய முற்பட்டால் சுட்டுவிடட்டும்!


உள்ளே எதை விடுவது என்பது பற்றி தீர்மானித்து விட்டீர்களா... பாஸ்?
ஓ...! டான் இல்ாரியோ சென்ற வாரம் கொன்றுவிடச் சொன்ன கிழட்டு நாயை விடப்போகிறேன்!
அந்த கிழட்டு நாய்க்கு பார்வை சரியாக தெரியாது... மேலும் நடமாடக்கூட சக்தி கிடையாது... மரணம் அதற்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும்... சித்திரவதை இல்லாமல் சட்டென்று மரணம் விளைய வேண்டும்...!
அதை எப்படி உறுதியாகச் சொல்ல முடியும்? ஸிகுய்டாவுக்கு மரணம் நேரிட்டபோது நம்மில் எவரும் பார்க்கவில்லையே!
வாஸ்தவம்தான்! ஆனால் அதன் இரத்தத்தை இன்று காலையில் நான் பரிசோதனை செய்தபோது அதில் கடுமையான விஷப்பொருள் கலந்திருக்கக் கண்டேன்.
எனவே, அந்த 'பச்சை சைத்தான்' விஷ ஊசியை பாய்ச்சி மரணத்தை ஏற்படுத்துகிறது என்று யூகித்தேன்.
அது சரியோ தவறோ என் அனுமானம் அதுதான்
சரி... நான் போய் நாயை கொண்டு வருகிறேன்
போய் வா... டெக்ஸும் மற்றவர்களும் எந்த நேரமும் திரும்பி வந்து சேரக்கூடும்!
சரி...பாஸ்!


ஒரு மணி நேரம் கழித்து நால்வரும் மோரிஸ்கோவின் வீட்டிற்கு திரும்பி வந்து சேர்ந்தனர்.
போன வேலை முடிந்ததா?
ஓ...! அந்த விண் கல் பற்றி இனி நாம் கவலைப்படத் தேவையில்லை. கோட்டையின் கமாண்டர் வின்ஸ்லோ, மற்றும் ஸன்ஷைன் ஷெரீப்புகளுக்கு தகவல் கொடுத்ததோடு நில்லாமல் அபாச்சே மற்றும் டிபியன்ஸ் கோட்டையிலுள்ள அதிகாரிகளையும் எச்சரிந்து விட்டாச்சு!
நீங்கள் சொன்ன விபரங்களைக் கேட்டு மூர்ச்சை போட்டிருப்பாரே!
நாங்கள் உண்மையை அப்படியே சொல்லியிருந்தால் அதுதான் நடந்திருக்கும்.
அப்படி ஒரு விபரீதத்தை தவிர்க்கவே நான் சற்று அடக்கி வாசித்தேன்.
அவை விஷத்தன்மை கொண்டவை என்றும், இதுவரை பல மரணங்களுக்கு காரணமாகியிருக்கின்றன என்றும் மட்டும் சொல்லி நிறுத்திக் கொண்டேன்.
நீங்கள் மேற்கொண்டிருக்கும் ஆராய்ச்சி பற்றியும் குறிப்பிட்டேன்... வெளி வரும் உண்மைகளையும் அவ்வப்போது அவருக்கு தெரிவிப்பதாகவும் வாக்களித்திருக்கிறேன்
விண்கல் விழுந்த இடத்தைவிட்டு விலகியே இருக்குமாறு ஹோபிக்களுக்கு எச்சரிக்கை போய்ச்சேரும் வேளையில், அவ்வழியே செல்லும் பயணிகளையும் எச்சரிக்கை செய்ய இரண்டு கோட்டைகளும் ரோந்துப் படையை அனுப்பி வைத்திருக்கும்!


மரணப் பூக்களின் இரகசியங்களை தெரிந்து கொள்ள இன்றிரவு நாம் சோதனையை மேற்கொள்வோம்.
அதற்கான முன்னேற்பாடுகளை எல்லாம் செய்துவிட்டீர்களா?
ஓ...செய்து விட்டேன்! உணவருந்திய பின் நீங்கள் அதை பார்வையிடலாம்!
இரவு உணவு சாப்பிட்டானபின்
போய் அதைக் கொண்டு வரட்டுமா?
சரி...! ஆனால் தட்டிலிருந்து ஜாடி நழுவி விடாமல் நீ ஜாக்கிரதையாக கையாள வேண்டும்!
வாருங்கள்...! எதற்கும் துப்பாக்கிகளை தயார் நிலையில் வைத்திருங்கள்
?!
!
அந்த சைத்தான் தன் முட்களைக் கொண்டு தான் உருளுகிறது என்பது என் கணிப்பு... எதற்கும் நாம் முன்னெச்சரிக்கையோடு இருப்பது நல்லதல்லவா?
ஒருவேளை அது கண்ணாடித் தடுப்பை தாண்டி எகிறி குதித்துவிடும் என்று அஞ்சுகிறீர்களா?


ஆமாம்...!
அதுமாதிரியான விஷமத்தனம் எதையும் அது செய்ய முற்பட்டால் அக்கணமே தோட்டாக்களால் சிதறடித்து விடுகிறேன்!
அந்த உத்தரவாதத்தை நானும் தர முடியும்!
சற்றைக்கெல்லாம்....
ஓ... இதைத்தான் 'பலிகடா' வாக்கப் போகிறீர்களா?
ஆமாம்!
தீராத வியாதி காரணமாக இது நடைப்பிணமாக உலவிக் கொண்டிருக்கிறது.. இது செத்துப் போனால் அது நிச்சயம் 'கருணைக் கொலை' என்பதாகத் தானிருக்கும்!
அதோ யுஸெபியோ 'சைத்தான்' இருக்கும் ஜாடியை கொண்டு வந்துவிட்டான்.



உயிர் இருப்பதற்கான அறிகுறி எதையும் காட்டியதா?
இல்லை...பாஸ்!
ஜாடியை மெல்ல உள்ளே வை...
ஜாடியை உள்ளே வைத்த யுஸெபியோ ஒரு கழியினால் ஜாடியை தட்டிலிருந்து விலக்கினான்...
எல்லோருடைய பார்வையும் அந்த சைத்தான் மீதே இருக்கட்டும்!
நகருகிறதா?
இல்லை!
அந்த வாயில்லா ஜீவனை பாருங்கள்
சீறி வரும் புலியை எதிர் கொண்டது போ
மிரண்டு போய் தத்தளிக்கிறது...


கர்ர்ர்ர்...
பார்வை சரியாக இல்லை என்ற போதிலும், ஆபத்து இருக்கும் திசையை பார்த்துக் கொண்டு நிற்கிறதை கவனியுங்கள்
பின்னுக்கு நகர்ந்து முடிந்தால் விலகி ஓடிப் போக முயற்சிக்கிறது
மலை வாயிலிருந்து அப்போது வெளிப்பட்ட சந்திரனின் பால் ஒளி அப்பிராந்தியம் முழுக்க பரவியது...
...அதே கணத்தில், அந்த சைத்தானின் முட்கள் சிலிர்த்துக் கொண்டு சலசலப்பை ஏற்படுத்தின.
ஸ்ஸ்
ஸ்ஸ்ஸ்...
அன்றிரவு நான் கேட்ட அதே சீறல்...!
மெள்ள உருண்டு தட்டை விட்டு வெளியேறுகிறதை கவனியுங்கள்!
ஸ்
ஸ்ஸ்ஸ்


நம்பவே முடியவில்லை!
நேராக நாயை நோக்கிப் போகிறது
ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்
கடல் வாழ் ஜந்துக்களைப் போல தன் முட்களைக் கொண்டு உருண்டு நகர்கிறது.
நாயை நெருங்கி விட்டது!
சுட்டுத் தள்ள என் கை பரபரக்கிறது
நின்று விட்டது...
அது நின்ற மறுகணம் முட்களில் ஒன்று முறித்துக் கொண்டு அம்பு போல் நாயை நோக்கிப் பாய்ந்தது...
விஷ்க்!


விஷ அம்பு பாய்ந்ததும் பரிதாபமாக ஊளையிட்டுக் கொண்டு சரிந்து விழுந்தது அந்த நாய்...
ஸ்ஸ்ஸ்
இது எப்படி சாத்தியம்!
அம்பு விஷத்தன்மை கொண்டதாக இருக்கக்கூடும்!
பின்னர் நாயை பரிசோதித்துப் பார்த்தால் உண்மை தெரிந்து விடும்!
மறுபடியும் நகருகிறது பாருங்கள்
நாயின் சடலத்தின் மீது ஏறிக் கொண்டுவிட்டது.
விருந்துண்ணத் தொடங்கிவிட்டதோ!
அப்படித்தான் தோன்றுகிறது!
அருகில் சென்று பார்ப்போம்... இப்போதைக்கு நமக்கு ஆபத்து ஏதும் வந்துவிடாது... அனைத்து விபரங்களையும், அவ்வப்போதே ஒன்றுவிடாமல் குறித்துக் கொண்டால்தான் பின்னர்
விரிவான ஆய்வறிக்கை சமர்ப்பிக்க ஏதுவாக இருக்கும்!


ஒவ்வொரு அரை மணிக்கும் நாயிடமும், அந்த சைத்தானிடமும் ஏற்பட்டுள்ள மாற்றத்தை குறித்துக் கொண்டே வருவோம்.
கொஞ்சம் பொறுங்கள்...! 'குறித்துக் கொண்டே வருவோம்' என்று நீங்கள் குறிப்பிட்டது யாரை?
உங்களையும் யுஸெபியோவையும் என் சரி... அதை விடுத்து எங்களையும் சேர் என்றால்
புரிகிறது...! என்னை தவிக்கவிட்டு போ தீர்மானித்து விட்டீர்கள்!
ஆமாம்...! ஒரு விஞ்ஞானி என்ற முறையில் அந்த குரூரமான செம்மலர்களை பற்றிய விபரங்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் அறிய உங்களுக்கு ஆர்வமும் துடிப்பும் இருக்கலாம். ஆனால் எங்களுக்கு மர்ம சாவுகள் பற்றிய புதிர் விடுபட்டால் போதும்!
அத்தோடு, இன்றைய நடப்புகள் எங்கள் சக்கையாகப் பிழிந்து விட்டன... எப்போ போய் படுக்கையில் விழுவோம் என்று தவித்துக் கொண்டிருக்கிறோம்.
ஓ.கே.! நீங்கள் போய் ஓய்வெடுங்கள்... இந்த பச்சை இரத்தக் காட்டேரியை நானும் யுஸெபியோவும் கவனித்துக் கொள்கிறோம்!
இரத்தக் காட்டேரி என்று சரியாகச் சொன்னீர்கள்! அவ்வுண்மையை கணப் பொழுதும் நீங்கள் மறந்து விடலாகாது!


எச்சரிக்கையோடு இருப்போம்
போய் வாருங்கள்!
குட்நைட்!
சிறிது நேரம் கழித்து
கொலைகாரனை கண்டு பிடிக்க நாம் மேற்கொண்ட கஷ்டங்களை எல்லாம் நினைத்துப் பார்க்கும் போது, ஓடிப் போய் அந்த சைத்தானை பந்தாட வேண்டும் போலிருக்கிறது எனக்கு!
ஆபத்தாய் முடியும் அது!
வாஸ்தவம்தான்! அந்த சைத்தானுக்கு அருகில் போவது விரியன் பாம்பின் வாலைப் பிடிப்பதற்கு ஒப்பானதாகும். பள்ளத்திலுள் ஏகப்பட்டவை இருந்த போதிலும் அன்று நாம் உயிர் தப்பியது தெய்வாதீனமான செயல்தான் இல்லையா?
அதுதான் ஏற்கனவே சொன்னேன்... இரவில் மட்டுமே இவை ஆபத்தானவை என்று!
நிச்சயமாக அப்படித்தானா?
சந்தேகத்திற்கே இடமில்லை!
இரவுப் பொழுதானதும் அதன் நடவடிக்கைகள் எப்படியிருந்தன என்று நீயும்தானே பார்த்தாய்!



ஜீவனற்றது போல் கிடந்தது நிலா வானில் மேலெழும்பியதும் சிலிர்த்துக் கொண்டு நகரத் தொடங்கியது...
ஆமாம்...!
முடிவாக பூக்கிறதே அது ஏன்?
என்னைக் கேட்காதே!
இந்தக் கேள்விக்கு மட்டுமின்றி மற்ற பல புதிர்களுக்கும் மோரிஸ்கோ நாளை காலையில் விளக்கம் சொல்லக்கூடும்... சரி... எனக்கு தூக்கம் வருகிறது - குட் நைட்
ம்ம்... குட் நைட்!
மறுநாள் அதிகாலையில் -
எல்லாம் நல்லபடியாக முடிந்ததா?
யெஸ்... மிஸ்டர் வில்லர்!
சாப்பிட்டானதும் பாஸின் ஆய்வு அறைக்கு வரச் சொன்னார்... பரிசோதனைகள் அனைத்தும் முடிந்து விட்டன...
நல்லது...!



நேற்றிரவு பின்னர் என்னதான் நடந்தது?
சொல்கிறேன்!
நாயின் கழுத்தில் போய் அது அமர்ந்து கொண்டபின் எந்த சலனமும் தென்படவில்ல... ஆனால் நேரம் செல்லச் செல்ல நாயின் உடல் சுருங்கிக் கொண்டே வர அந்த சைத்தானின் உருவம் உப்பிக் கொண்டே வந்தது.
சுமார் இரண்டு மணி நேரம் கழித்து நாய் எலும்பும் தோலுமாகிவிட, அந்த சைத்தான் நாயின் கழுத்தை விட்டிறங்கி கீழே சலனமற்றுக் கிடந்தது...
அதன்பின் சுமார் ஒரு மணி நேரம் கழித்து மேலே மத்தியிலிருந்த ஒரு முள் மட்டும் பருத்து தண்டு மாதிரி மாறி செந்நிறம் பெற்றது...
அந்த தண்டு நீண்டு அதன் உச்சியில் ஒரு செந்நிற மலர் இதழ் விரித்ததும் அந்த சைத்தான் தன் பழைய உருவ அளவுக்கு சுருங்கிப் போனது.
அதைத் தொடர்ந்து அது மும்முரமாகதரையில் பள்ளம் பறித்து அதனுள் ஒளிந்து கொள்ள யத்தனிப்பது போலிருந்தது... ஆனால் அதற்குள் விடிவதற்கான அறிகுறிகள் தோன்றிடவே மீண்டும் முன்போல் ஜீவனற்றதுபோல் அமைதியாகிவிட்டது.
சனியன் இப்போது எங்கேயிருக்கிறது!



அது சலனமிழந்து விட்டதை ஒரு முறைக்கு இருமுறை பாஸ் உறுதி செய்தி கொண்டபின், பூவின் தண்டை துண்டிக்கும்படி என்னை ஏவினார். நான் துண்டித்ததும் அனைத்தையும் கவனமாக அள்ளி எடுத்து சோதனைக் கூடத்திற்கு கொண்டு வரச் சொன்னார்.
யுஸெபியோ... யுஸெபியே
அது தாவர வகையை சேர்ந்ததே அல்ல என்பது உறுதியாக தெரிகிறது...
ஏன்... ஏன் அப்படி கூக்குரலிட்டீர்கள்
வந்து பாருங்கள், இங்கே!
கொஞ்சமும் அசைவற்றுக் கிடந்ததை மேற்கொண்டு பரிசோதிக்க இரண்டாக்கிப் பார்த்தேன்... உள்ளே சதைப் பற்று போலிருக்கும் மத்திய பகுதி இருதயம் போல் சுருங்கி விரிகிறதை பாருங்கள்...
அதிலிருந்து நுண்ணிய இரத்த நாளங்க போல் ஏகப்பட்ட நார்கள் எல்லா பாகங்களுக்கும் போகின்றன பாருங்கள்


உறிஞ்சிய இரத்தத்தை அனைத்து பகுதிகளுக்கும் இவைதான் எடுத்துப் போகின்றன போலிருக்கிறது
மேல் தோலை ஒட்டி இருக்கும் பழுப்பு நிற பகுதியை இப்போது பிரித்தெடுத்துப் பார்த்துவிடலாம்... அடடே, ரொம்ப கெட்டியாக இருக்கிறது... யுஸெபியோ... குத்தூசியை எடுத்து வா...
ஆங்... எடுத்தாயிற்று... சிறு துண்டை எடுத்துப் போய் மைக்ரோஸ்கோப் மூலம் ஆராயப் போகிறேன்... ஆனால் என்ன உண்மை வெளிவரப் போகிறது என்பதை இப்போதே என்னால் யூகிக்க முடிகிறது.
உறிஞ்சிய இரத்தத்தை ஜீரணிக்க உதவுவதோடு, மூளையின் செயலையும் இப்பகுதி செய்யக் கூடும்
யுஸெபியோ... அந்த ஆல்கஹால் ஜாடியை எடு! பாதி துண்டை உள்ளே போட்டு பத்திரப்படுத்திவிட்டு மிச்சத்தை இப்போதைய ஆய்வுக்கு பயன்படுத்திக் கொள்வோம்.
ஓ.கே...பாஸ்
பரிசோதனையை முடித்த பின் உங்களோடு விண்கல் பள்ளத்திற்கு போகத் தீர்மானித்திருக்கிறேன்.
பல்வேறு சோதனைகளுக்கு இவை நிறைய தேவைப்படுகிறதா?


ஆமாம்... அத்தோடு இவை எப்படி பல்கிப் பெருகுகின்றன என்பதை நேரில் பார்க்க விரும்புகிறேன்...விஞ்ஞானிகளிடையே இவ்வுண்மைகள் எப்படிப்பட்டதொரு பரபரப்பை ஏற்படுத்தும் தெரியுமா?
அந்த சைத்தான்களை உடனடியாக பூண்டோடு அழிக்கத் தவறினால் எத்தகை நாசம் விளையும் என்று உங்களுக்குத் தெரியுமா?
எவ்வளவு துரித கதியில் இவை பல்கிப் பெருகும் என்ற உண்மை எனக்குத் தெரியாது... வேகமாக பரவும் தன்மையுடையவையாக இருந்துவிட்டால் மரணங்கள் நூற்றுக் கணக்கில் சம்பவிக்கலாம்.
ம்ம்....
பாஸ்... ஜாடி கேட்டீர்களே!
அப்படி மேஜை மீது வை!
ஒரு பாதி துண்டை எடுத்து ஆல்கஹாலுக்குள் போட்டார் மோரிஸ்கோ...
கொஞ்சமும் எதிர்பாராத வகையில் நுரைத்துக் கொண்டு பொங்கிய ஆல்கஹால் பச்சை நிறமாகிப் போனது... பழுப்பு நிறத்தில் மூண்ட புகை அறை முழுக்க பரவி தொண்டையில் கமறலை ஏற்படுத்தியது...
விபரீதம்...


ஒரே புதிராக இருக்கிறதே!
அப்பால் போங்கள்... நாசியை பொத்திக் கொள்ளுங்கள் அம்மோனியா வாயு மாதிரி நெடியடிக்கிறது... விஷத்தன்மை கொண்டதாகவும் இருக்கலாம்.
அதிர்ஷ்டவசமாக சட்டென்று ஆவி அடங்கி நெடியும் மறைந்துவிட்டது... ஆர்வத்தோடு எல்லோரும் கிட்டே நெருங்கி ஜாடிக்குள் பார்வையை ஓட்டினார்கள்... ஊஹூம் அந்த சைத்தானின் தடயமே இல்லை...
காணோமே...!
மாயமாக மறைந்து விட்டதே!
அந்த சைத்தானை அழிக்க எவ்வகை உபாயத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்பது தெரிந்து விட்டது.
என்னால் நம்பவே முடியவில்லை!
பொருட்களை பத்திரப்படுத்த பயன்படும் ஆல்கஹால் இப்படி தடயமின்றி அழிக்கவும் செய்யும் என்பது நான் கேள்விப்படாத உண்மை!
இதுவும் ஒரு நன்மைக்கே!


இந்த சைத்தானை கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டால் பல்கிப் பெருகி முடிவில் மனித சமுதாயத்திற்கே யமனாக உருவெடுத்துவிடலாம்... இதனை அழிக்கும் வழிமுறைய்ய தற்செயலாக நாம் தெரிந்து கொள்ள முடிந்தது தெய்வாதீனமான சங்கதியாகும்...
உண்மைதான்...! மறுபாதியை பாதுகாப்பா ஒரு இடத்தில் வைத்து பத்திரப்படுத்திவிட்டு விண்கல் பள்ளத்திற்கு நாம் போவோம்.
மேற்கொண்டு சேகரித்து எடுத்து வர
ஆமாம்... இதன் தீய சக்தி பற்றி தெரிந்து கொண்டு விட்டோம்... சில நல்ல தன்மையும் இருக்கலாம்... அதை பல்வேறு பரிசோதனை மூலம் ஆராய்ந்தறிய நிறைய அளவில் இவை எனக்கு தேவைப்படும்.
இப்படியொரு விநோதமான விலங்கினத்தை இதுவரை யாரும் கண்டறிந்ததில்லை... இவ்வுண்மையை சக விஞ்ஞானிகளோடு பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்
இதுவரை எத்தனையோ விஞ்ஞானிகள் எண்ணிக்கையில் அடங்காத ஆராய்ச்சிகள் நடத்தியிருந்தும் பூமியில் இப்படியொரு வகை விலங்கு இருப்பதாக தெரிந்து கொள்ளவேயில்லை...
கொஞ்சம் பொறுங்கள்... இந்த சைத்தான் நம் பூமியில் வாழும் விலங்கினத்தை சேர்ந்ததேயில்லையோ என்கிற சந்தேகம் எனக்கு!


தங்களை துரதிர்ஷடம் பிடித்ததற்கான காரணம் என்னவென்று ஹோபி இனத்தவர் சொன்னதை நாம் நினைவு கூறவேண்டும்.
அந்த விண்கல்தானே?
ஆமாம்...! பிரச்சனை ஏதுமின்றி நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தவர்களுக்கு தொடராக அசம்பாவிதம் சம்பவித்ததெல்லாம் அந்த விண்கல் வந்து விழுந்த பிறகு தான் என்றார்கள்.
விண்கல் விழுந்த பள்ளத்தினருகே சென்றவர்கள் எல்லோரும் புதிரான முறையில் மாண்டுபோனார்கள்.
எனவே, இந்த சைத்தான் அந்த விண்கல்லோடு சேர்ந்து இப்பூவுலகிற்கு வந்து சேர்ந்திருக்கக்கூடும்...
?!
அதாவது இது வேற்றுலக ஜந்து என்பதாக சொல்ல வருகிறீர்களா?



அப்படியும் இருக்கலாமில்லையா என்கிறேன்! நிஜத்தை நீங்கள் தான் ! கண்டறிந்து சொல்ல வேண்டும்!
கஷ்டமான காரியம்தான்!
விண் கற்கள் பொதுவாக பிரபஞ்ச வெளிய தனித்து சுற்றிக் கொண்டிருக்கக் கூடியவை
குழப்பிக் கொள்ளாதீர்கள்
உங்களுடைய சிந்தனைக்கு ஒரு புதிய கோணத்தை அடையாளம் காட்டினேன் - அவ்வளவுதான்! எங்களைவிட கூரிய மதிநுட்பம் படைத்த நீங்கள்தான் மிச்சத்தை கவனித்துக் கொள்ள வேண்டும்.
கூரிய பார்வைத் திறனும், குறிவைத்துச் சுடு திறமையும்தான் எங்களுடைய சிறப்பாற்றல்கள்... உடனே குதிரையிலே விரைந்து அந்தப் பள்ளத்தினுள் பரவிக் கிடக்கும் சைத்தானை வேரோடு களைய இதோ புறப்பட்டுவிட்டோம்.
என்னை இப்படியே தவிக்கவிட்டு போய் விடாதீர்கள் என் ஆராய்ச்சிக்கு மேலும் சில உருண்டைகளாவது எனக்கு தேவை... யுஷெபியோ... ஓடிப் போய் நீண்ட பயணத்திற்கு தேவையான அனைத்தையும் ஏற்பாடு செய். குதிரைகளை வாகனில் பூட்டு...


இதற்கிடையே, விண்கல் விழுந்த இடத்திற்கு சில மைல் தொலைவில்...
ஊஹூம்... இவ்வழியாக நீங்கள் போக முடியாது... ஸெடோனா வழித் தடத்தில் போங்கள்!
ஆனால் நாங்கள் வின்ஸ்லோ போக வேண்டும்!
தெற்கே திரும்பி நான் சொன்ன பாதையில் போனாலும் தான் வின்ஸ்லோ போய்ச் சேரலாம்!
ஆனால் கூடுதலாக நான்கு தினங்கள் பயணம் செய்ய வேண்டுமே!
அதெல்லாம் எனக்குத் தெரியாது! இந்த தடத்தில் யாரையும் போக அனுமதிக்கக் கூடாது என்பது உத்தரவு! யாரும் ஹோபிகளின் குடியிருப்பு பகுதிக்கு அருகிலே போகக் கூடாது! ஸன்ஷைன் வழித்தடமும் இதே போல் மூடப்பட்டிருக்கிறது என்ற உண்மையையும் தெரிந்து கொள்ளுங்கள்.
சரி... ஏனிந்த கட்டுப்பாடு - என்னதான் நடந்தது?
நவஜோக்கள் அமைதியானவர்கள். ஒருவேளை இந்தக் ஹோபிகள் -
அப்படி எதுவுமில்லை... அப்பகுதியில் புதிரான முறையில் மர்மச் சாவுகள் நிகழ்கின்றனவாம்!
ம்ம்... இன்னொரு விஷயம்! போகிற வழியில் பச்சை நிற முள்ளுருண்டைகள் கண்ணில் பட்டால் அதன் கிட்டே போகாதீர்கள் - அதுமட்டுமல்ல... அதை எக்காரணம் கொண்டும் தொட்டு விடாதீர்கள்,




அந்த சைத்தான் விஷத்தன்மை உடையனவையாம்.....மனிதனின் இரத்தத்தை உறிஞ்சி நொடியில் பிணமாக்கி விடுமாம்!
விஷத்தன்மையுடையவை... அவ்வளவுதானே? அதற்குப் பயந்தா நான் காடு மேடெல்லாம் சுற்றிக் கொண்டு போக வேண்டும்?
பயணிகளின் பாதுகாப்பை கருதித்தான் இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்!
த்சொ...!
வேறொன்றும் சொல்லாமல் வண்டியை திருப்பினான் வண்டியோட்டி...
யாாாா...!
விஷத்தன்மையுடைய தாவரமாம்... நொடியில் கொன்று விடுமாம்... என்ன ஒரு பேத்தல் - கேட்டாயா?
ஸெடோனா போய்ச் சேர குறைந்தது இரண்டு நாட்களாவது பிடிக்கும்
அந்த சுற்றுப் பாதையில்தான் போகப் போகிறேன் என்று நீ நினைத்தாயா?


அஸ்தமன வேளை வரை இதே திசையில் போவோம்... இருட்டத் தொடங்கியதும் வடக்கே திரும்பி ஸன்ஷைன் தடத்திற்கு இணைகோட்டில் பயணம் செய்வோம்!வழியில் சிப்பாய்களை சந்திக்காமல் தவிர்த்து விடலாம். ஒருநாள் கூடுதலாக பயணம் செய்ய வேண்டியிருக்கும் -அவ்வளவுதான்!
விஷத் தாவரங்களாம் - ப்பூ...!
புத்திமதிகளை கேட்டு நடக்கிற ஆசாமியாகத் தெரியவில்லை
அவர்களுடைய நன்மைக்குத்தானே சொன்னோம் - அதைக் கூடவா புரிந்து கொள்ள மாட்டான்?
மர்மோன் சுனை அருகே கிடந்த வியாபாரியின் சடலத்தை நேற்று நீயும்தானே பார்த்தாய்..! உயிர் மீது ஆசையிருந்தால் அந்த ஜோடி நம் ஆலோசனைப்படி சுற்றுப் பாதையில் போவதுதான் விவேகம்.
அந்த சடலம் கிடந்த கோலத்தை நினைத்தால் இப்போதும் கூட என் உடல் நடுங்குகிறது...


நெருப்பில் சுட்டெடுக்கப்பட்டது போல் கருகி, சுருங்கி - அப்பப்பா... என்ன கோரம்...
இரண்டு குதிரைகளுக்கும்கூட அதே கதிதான்!
அதற்கெல்லாம் காரணம் அந்த பச்சை சைத்தான்கள் தானா?
அறிக்கையில் அப்படித்தா சொல்லப்பட்டிருக்கிறது!
ஸன்ஷைன் இரயில் தடம், வால்நட் மேட்டுப் பகுதி, மர்மோன் லேக் ஆகிய எல்லைக்குட்பட்ட பகுதியினுள் மனிதர்கள் யாரும் பிரவேசிக்க அனுமதிக்கக்கூடாது; அந்த பச்சை சைத்தான் தென்பட்டால் எக்காரணம் கொண்டும் தொடக்கூடாது; இரவில் அந்த 'ஆபத்து பகுதி' யை விட்டு விலகி தொலைவில் தான் முகாம் அமைத்துக் கொள்ள வேண்டும் - என்று உத்தரவில் கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டிருக்கிறது!
வாருங்கள்... விரைந்து போய் அந்த வண்டி நம் அறிவுரைப்படி மாற்று வழியில்தான் சென்று கொண்டிருக்கிறதா என்பதை தெரிந்துகொண்டு பின்னர் மர்மோன் லேக் நோக்கிப் போவோம்!
ம்ம்... கிளம்புங்கள்!




சற்றைக் கெல்லாம் அந்த ரோந்துப்படை போய்க் கொண்டிருந்த வண்டியை நெருங்கிவிட்டது...
...தொடர்ந்து முன்னேறி அதை தாண்டிக்கொண்டு தெற்கு நோக்கி விரைந்தது...
போய்விட்டார்கள்! அவர்களுடைய தலை மறைந்ததும் நாம் வண்டியை திருப்பி பழைய தடத்திலேயே பயணத்தை தொடரலாம்!
அவ்வாறு சென்றால் நாம் நாளை மாலையிலேயே வின்ஸ்லோ போய்ச் சேர்ந்துவிட முடியும்!
ஆனால் அந்த துரதிர்ஷ்டசாலிகள் நினைத்தது நடக்கவில்லை! மறுநாள்
ஹே...! சார்ஜண்ட்... அங்கே பாருங்கள்!
?!
ஆமாம்... ஏதோ விபரீதம் சம்பவித்திருக்க வேண்டும் - விரட்டுங்கள் குதிரைகளை!



அரைமணி நேரம் கழித்து
நாம் நேற்று திசை திருப்பிவிட்ட அதே வண்டிதானோ?
ஆமாம்... அதே வண்டிதான் கார்ப்பொரல்!
ரொம்ப சமர்த்தாக காரியம் செய்வதாக எண்ணிக் கொண்டு, நாம் அவர்களை கடந்து வந்தபின், மீண்டும் வண்டியை திரும்பி பழைய பாதையிலே பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். வழியில் 'பச்சை சைத்தான்' அவர்களை பலி கொண்டுவிட்டிருக்கிறது
பச்சைத் தாவரம் - செந்நிற மலரோடு! ஆனால் இவை எப்படி மனிதர்களையும் மிருகங்களையும் இப்படியொரு பரிதாப நிலைக்கு மாற்ற முடியும்?
பதில் சொல்லத் தெரியவில்லை! அந்த வியாபாரி அருகே தென்பட்ட இரு 'சைத்தான்' களை வெட்டிப் போட்டது போலவே, இங்கே காணப்படும் 'சைத்தான்களையும்' வெட்டிப் போட்டுவிட்டுப் போவோம்!
கட்டாயமாக அதை செய்து முடிப்போம் சார்ஜெண்ட்
தொலைந்து போ - சனியனே!



முள்ளுருண்டைகள் பல துண்டுகளாகி சிதறிப்போயின...
சதக்!
அந்த துரதிர்ஷ்டசாலிகளை முறைப்படி புதைத்துவிட்டு தன் வழியில் பயணத்தை தொடர்கிறது அந்த ரோந்துப்படை!
அதே நாள் மாலையில் - கோட்டையில்...
சார்ஜண்ட் ப்ராண்டன் சமர்ப்பிக்கும் அறிக்கை - மர்மோன் க்ரீக்கில் நேற்று ஒரு மரணமும் இன்று காலையில் வின்ஸ்லோ க்ரீக்கில் இரண்டு மரணங்களும் சம்பவித்திருக்கின்றன...
ஆக, மூன்று தினங்களுக்குள் மொத்தம் பன்னிரண்டு மர்மச் சாவுகள்!
மர்மச் சாவுகள் என்று சொல்வதற்கில்லை... நமக்குத்தான் இந்த மரணங்களுக்குக் காரணம் அந்த பச்சை சைத்தான்கள் என்று தெரியுமே!
ஆமாம்! டெக்ஸ் வில்லர் அப்படித்தான் நமக்குச் சொன்னார்...
அவர் சொன்னார் என்பதற்காக அப்படியே நாம் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை.
ம்ம்...


தான் அனுப்பும் கடிதத்திலாவது அவர் முழு விபரத்தை சொல்லியிருந்தால் சரி...
இரகசியம் எல்லோருக்கும் தெரிந்தால் குழப்பம் ஏற்படலாம் என்று அவர் நினைத்திருக்கலாம்.
HEADQUART
வாக்களித்தபடி விரைவிலேயே அவர் இங்கு வந்து சேர்ந்தால் நல்லது. இல்லையேல், நிலவரம் கைமிஞ்சிப் போய் இப்பிராந்தியம் முழுக்க பீதியும், குழப்பமும் தலைவிரித்தாடத் தொடங்கிவிடும்.
வரலாம்!
வின் கேட் கமாண்டரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது... கர்னல்!
?
?!


ஃபோர்ட் டிபியன்ஸ் கமாண்டருக்கு,
சற்று முன் திரும்பிய ரோந்தப் படை
சமர்ப்பித்த அறிக்கையின்படி க்ளே
ஸ்பிரிங்ஸ் பகுதியில் இரு மரணங்களும்,
செவெலான் புட்டே பகுதியில் மூன்றும்,
மாண்ட ஜுமா வின் பழைய தடத்தில்
இரண்டும் ஆக மொத்தம் ஏழு மரணங்கள்
சம்பவித்திருக்கின்றன...
சுகாதாரத்துறையினருக்கு விபரம்
தெரிவிக்கப்பட வேண்டும் என்று மருத்துவ
காப்டன் ஆலோசனை கூறியிருக்கிறார்.
நீங்கள் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை
பற்றி அவ்வப்போது தெரியப்படுத்தவும்...
ஆலோசனை ஏதும் இருந்தாலும் எழுதவும்.
ஜான் அக்ஸ்லர்
வின்கேட் கோட்டை கமாண்டர்


ஜான் அக்ஸ்லரின் ப்ளட் ப்ரஷ்ஷர் வேகமாக ஏறிவருகிற மாதிரி தெரிகிறது...
கொள்ளை நோயாக உருவெடுத்து விடுமோ என்கிற அச்சத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்


அப்படி எதுவும் நடந்துவிடாது என்பது என் கணிப்பு... வில்லர் சொன்னபடி அந்த விண்கல்லை சுற்றி எச்சரிக்கை வளையம் ஏற்பாடு செய்திருக்கிறோம். ஹோபியினர் குடியிருப்பை காலி செய்துவிட்டு இடம் பெயரச் செய்துவிட்டோம். இங்கிருந்து வின்கேட் கோட்டைக்கு இடைப்பட்ட பிராந்தியத்தில் இருபது ரோந்துப் படைகள் நிலைமையை கட்டுக்குள் வைத்திருக்க பணியாற்றி வருகின்றனர்.
இது தவிர, ப்ளாக் ஸ்டாப் கிராமத்திலிருந் ஹோல்புக் கிராமம் வரையிலான அனைத் மக்களையும் எச்சரித்துவிட்டோம். எனவே வீணாக கலவரமடையத் தேவையில்லை.
எனவே, சுகாதாரத் துறையினருக்கு சொல்ல வேண்டாம் - இல்லையா?
இப்போதைக்கு தேவையில்ல
இந்த சம்பவம் குறித்து டெக்ஸ் வில்லரிடமிருந்து தெளிவான அறிக்கை கிடைக்கும்வரை காத்திருப்போம்!
வின்கேட் கோட்டை கமாண்டருக்கு,
டெக்ஸ் வில்லர் வரும் வரை எந்த தீர்மானமும் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் இங்கே கண் காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப் படுத்தியுள்ளோம்.
ரிச்சார்ட் பிரிக்போர்ட்
டிபியன்ஸ் கோட்டை கமாண்டர்



வின்கேட் கோட்டைக்கு இந்தச் செய்தியை உடனே அனுப்பு!
அப்படியே செய்கிறேன்... கர்னல்!
அக்ஸ்லருக்கு என்ன சொல்லியிருக்கிறீர்கள்!
அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரவேண்டாம் என்று!
உங்களுடைய புத்திமதிப்படி நடப்பார் என்று எதிர்பார்க்கிறீர்களா?
உறுதியாக நம்பகிறேன்!
பிரச்சனை பகுதியிலிருந்து நம்மை விட வெகு தொலைவு விலகியிருக்கும் அவன் நம்மை ஆலோசிக்காமல் அவசரப்பட்டு எந்த முடிவும் மேற்கொள்ள வேண்டிய நெருக்கடி கிடையாது.
அக்ஸலரின் குணத்தை மறந்துவிட்டு பேசுகிறீர்களே!
கொஞ்சம்கூட பொறுமையே கிடையாது... இதற்குள்ளாகவே அவர் வாஷிங்டனில் உள்ள அனைத்து டிபார்ட் மெண்டுகள், கவர்னர், அருகேயுள்ள கோட்டைகள், சுகாதாரத்துறையினர் ஆகியோருக்கு... ம்ம்... காங்கிரஸுக்கும் கூட அறிக்கைகள் அனுப்பியிருந்தால் நான் ஆச்சரியப்படமாட்டேன்.


தன் கையெழுத்தை போட்டு நிறைய கடிதங்கள் அனுப்புவதில் மனிதருக்கு ஏகப்பட்ட குஷி!
தெரியும்!
தான் இருப்பதை காட்டிக் கொள்ள கிடைக்கும் வாய்ப்பு அனைத்தையும் பயன்படுத்திக் கொள்ளும் ஆர்வம் ஆனால் இவ்விஷயத்தில் கொஞ்சம் நிதானமாகத்தான் நடந்து கொள்வார்.
அப்படியே நம்புவோமாக!
ஆனால், துரதிர்ஷ்டவசமாக வின்கேட் கோட்டையில் நிலவரம் வேறுவிதமாக இருந்தது.
டிபியன்ஸ் கோட்டையில் இருப்பவர்களுக்கு பிரச்சனையின் கடுமை புரியாமல் போனது துரதிர்ஷ்டமே
சரியாகச் சொன்னீர்கள் கர்னல்... இது ஒரு படு ஆபத்தான கொள்ளை நோய்!
நிகழ்ந்த அத்தனை மரணங்களுக்கும் அந்த பச்சை ஜந்து தான் காரணம் என்று நான் நினைக்கவில்லை! தாவரவியலில் நிபுணரான டாக்டர் அந்தக் கதை ஆதாரமற்றது என்று திட்டவட்டமாகக் கூறுகிறார்.
அத்தோடு, அப்படியொரு விஷ ஜந்து இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும் மனிதனை இம்மாதிரி வற்றலாக மாற்ற அதற்கு எப்படி சாத்தியமாகும்!


ஆமாம் காப்டன், ஹோபியினரில் பாழடைந்த கிணற்றருகே இரு கோவேறு கழுதைப் பயணிகள் செத்துக் கிடந்த கோலத்தை பார்த்ததிலிருந்து எனக்குள்ளேயும் இதே கேள்விதான் உறுத்திக் கொண்டிருக்கிறது.
உங்களுடைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது போல் சடலங்கள் உலர்ந்து, கருகி வற்றலாகிப் போயிருந்தன...
பயணிகளின் சடலங்கள் மற்றுமின்றி நான்கு கோவேறு கழுதைகளின் பிணங்களுக்கும் அதேகதிதான்!
அந்த ஜந்துவை நீ பார்த்தாயா?
ஓ...தெளிவாக!
நான்கு முள்ளுருண்டைகள், பாதி தரையினுள் புதையுண்ட நிலையில்! ஒவ்வொன்றும் செந்நிறத்தில் ஒரு மலரை அட்டகாசமாக பூத்திருந்தது...!
ஓ...!
ஒன்றை பறித்தெடுத்து என்னிடம் கொண்டு வந்து காட்ட வேண்டும் என்று தோன்றவில்லயா!
உத்தரவு திட்டவட்டமாக இருந்தது காப்டன்!



அந்த ஜந்துவை தொட்வே கூடாது... முடிந்த வரை விலகியே இருக்க வேண்டும் என்பது உத்தரவு!
சரி... இப்போது நான் மாற்று உத்தரவு பிறப்பிக்கிறேன் காப்டன் பென்ஸன்! எனக்கு அந்த ஜந்து ஒன்று வேண்டும்!
அருமையான தீர்மானம் கர்னல்!
வில்லர் நம்மீது திணிக்கும் கதையில் எவ்வளவு நிஜம் இருக்கிறது என்பதை நாமே சோதித்தறிந்து கொண்டு விடலாம்.
இதை உத்தரவாக எடுத்துக் கொள்ளவா?
ஆமாம்... என் உத்தரவு!
நாளை உங்களுடைய ரோந்துப் பகுதியில் தேடியலைந்து ஒன்றை கவனமாக பிடுங்கி எடுத்துக் கொண்டு வந்து டாக்டரிடம் கொடுக்க வேண்டும்.
எடுத்துவர ஒரு ஜாடி அல்லது பெட்டி தருகிறேன்
ம்ம்...அவை என்ன அளவில் இருக்கும் உத்தேசமாக?
சுமாராக இந்த அளவுக்கு!





**ஜூலை 1 ல்**

**12 - வது ஆண்டுமலர்**

**வருகிறது!**


காடு மேடெல்லாம் தேடியலைந்த அந்த ரோந்துப்படையினர் முடிவில் பச்சை முள்ளுருண்டைகள் இரண்டை கண்டனர். அவற்றை கவனமாக சேகரித்து, கையில் எடுத்துச் சென்றிருந்த பெட்டியினுள் வைத்து பத்திரப்படுத்திக் கொண்டு, கோட்டையை நோக்கி அதிவேகத்தில் திரும்பலாயினர்.
மறுநாள் பிற்பகல் வேளையில் கோட்டையை வந்தடைந்தனர்...
கிடைத்ததா... பென்ஸன்?
இரண்டுதான் சேகரிக்க முடிந்தது... இன்னமும் முழுமையாக பூக்கவில்லை...
கவனமாக கையாண்டீர்களா?
ஓ...! விஷமுள் குத்தினால் விளைவு என்னவென்று எங்களுக்குத்தான் தெரியுமே!
எங்கே வைக்க வேண்டும் - காப்டன்!
என்னுடைய சோதனைக்கூடத்தில்!


நேரமாகிவிட்டது... ஆராய்ச்சியை இப்போது நான் தொடங்கப் போவதில்லை!
என்ன மாதிரியான உண்மை வெளிவரும் என்று நினைக்கிறீர்கள் டாக்டர்?
நான் ஒரு ஜோஸியனாக இருந்தால் உன் கேள்விக்கு உடனே பதில் சொல்லிவிடுவேன்! ஆனால் இயற்கையியல் நிபுணரான எனக்கு குறைந்தது 24 மணி நேர அவகாசமாவது தேவை!
ஆனால் ஒன்றை மட்டும் இப்போதே நான் உறுதியாகச் சொல்ல முடியும்! அந்த வித்தியாசமான மரணங்களுக்கு இந்த முள்ளுருண்டைகள் காரணமாக இருக்க முடியாது!
இவ்விஷயத்தில் கருத்து தெரிவிக்க என்னைவிட உங்களுக்கு தகுதி அதிகம் டாக்டர். ஆனால் என் அனுபவத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்...
...இந்த முள்ளுருண்டைகள் கண்ணில் பட்டபோதெல்லாம் ஏனோ என் முதுகு தண்டு ஜில்லிட்டுப் போகிறது
பௌவி கோட்டையில் முன்பு இருந்த போது மலைப் பகுதியில் ரோந்து போவோம், அப்போது - அபாச்சேக்கள் எங்கோ பாறைகளின் பின்னால் ஒளிந்து கொண்டு எங்களை உறுத்துப் பார்ப்பதான உணர்வில் இப்படி முதுகுத்தண்டு ஜில்லிட்டுப் போகும்...



புரிகிறது பென்ஸன்! ஆனால் இந்த விவகாரத்தில்... புதிரான முறையில் உலர்ந்து வற்றிப் போய் படுபயங்கரமாக தோற்றமளித்த சடலங்களை பார்த்ததனால் ஏற்பட்ட உணர்வுதான் அதுவே தவிர முள்ளுருண்டைகளைப் பார்த்ததினால் அல்ல!
இருக்கலாம் டாக்டர்! எவ்வளவு சீக்கிரம் உண்மையை கண்டறிந்து சொல்கிறீர்களோ அவ்வளவு நல்லது நம் எல்லோருக்கும்!
இரண்டு மணி நேரம் கழித்து -
அவற்றை ஆராயப் போகிறீர்களா... நானும் வரலாமில்லையா?
ஓ... தாராளமா - கர்னல்!
குட்நைட் ஜெண்டில்மென் - நாளை பார்ப்போம்!
பென்ஸனின் அறிக்கையை கேட்டீர்களா? குறிப்பாக செவெலான் பகுதியில் இந்த ஜந்துக்கள் வேகமாக பரவி வருகிறதாம்
காற்று ஒருவேளை அவற்றை அப்பகுதிக்குள் தள்ளிச் சென்று சேர்த்திருக்கக்கூடும். காரணம் எதுவானாலும், உங்களுடைய ஆராய்ச்சி முடிந்தபின் உண்மையை தெரிந்து கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்வோம்!


ஆராய்ச்சிக் கூடத்தினுள் நுழைந்ததும் விளக்கை ஏற்றினார்கள்... உடனே... அதே கணத்தில் -
ஸ்ஸ்ஸ்ஸ்
கேட்டீர்களல்லவா கர்னல் - உள்ளே நாகமோ அல்லது தேனீக்களின் கூட்டமோ இருப்பதுபோல்...
எதையாவது கொண்டு அந்தப் பெட்டியை தரையில் கவிழுங்கள் காப்டன்.
அந்த முள்ளுருண்டையோடு வேறு எது உள்ளே இருந்தாலும் உடனே தீர்த்துக் கட்டி விடுகிறேன்.
ஓசை நின்றுவிட்டது! எதற்கும் நிலவரத்தை உறுதி செய்து கொண்டு விடுவோம்!


வாளைக் கொண்டு முதலில் பெட்டியை கீழே தள்ளி விட்ட காப்டன் பின்னர் மூடியை நெம்பி அகற்றினார். உள்ளே இரண்டு முள்ளுருண்டைகளைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று தெரிய வந்ததும் இருவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.
தேவையில்லாமல் பதறிவிட்டோம்!
ஆனால், விர்ரென்று சீறும் ஓசையை நாம் இருவருமே கேட்டோமே... அதெப்படி?
அதுதான் தெரியவில்லை! கர்னல் - அங்கே பாருங்கள்!
ஹே... அவை நகருகிற மாதிரி தெரிகிறதே! நம்மை நோக்கித்தான் வருகின்றன!
சீறும் ஓசை இப்போது தெளிவாக வருகிறது!
டாக்டர்... என்ன இதெல்லாம்?
எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை கர்னல்.
மறு வினாடி
எதிர்பாராதவிதமாக வந்து தாக்கிய நுண்ணிய விஷ ஊசிகளுக்கு பலியாகி இருவருமே சரிந்தனர். அந்த சைத்தான்களுக்கு கிடைத்த எதிர்பாராத விருந்து!



..நாள்
வரலாம்!
காப்டன் பென்ஸன்...ஓடி வாருங்கள்
ஏன் இப்படி பேய் அறைந்த மாதிரி வந்திருக்கிறீர்கள் சார்ஜெண்ட்?
..நான் பெட்டியில் எடுத்து வந்த அந்த ..த்தான்கள் ...டாக்டரின் ஆய்வறையில் இருக்கின்றன புதிதாக பூத்த செந்நிற மலர்களோடு... ஆனால் கர்னலும், டாக்டரும் செத்துக்கிடக்கிறார்கள்...
அட கண்றாவியே... அப்படியானால் நாம் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதானா? அந்த மரணங்களுக்கெல்லாம் இந்த பச்சை சைத்தான்தான் காரணமா?
..விலகி அப்பால் போங்கள்
காப்டன் பென்ஸன் வந்திருக்கிறார் வழிவிடுங்கள்!


காப்டன் உள்ளே போகாதீர்கள்!
போகப் போவதில்லை! அந்த சைத்தான்கள் உள்ளே இருக்கையில் நுழைய எனக்கென்ன பைத்தியமா!
வேறெதுவும் கூறாமல் சட்டென்று தன் பிஸ்டலை உருவி அந்த இரு உருண்டைகளையும் சுட்டுத் தள்ளினார் காப்டன் பென்ஸன்.
டுமீல்
டுமீல்
டுமீல்
இனி ஆபத்து வராது என்று நம்பலாம்!
காப்டன் பாருங்கள் அங்கே
தண்டுகளிலிருந்து சிவப்பாக கசிகிறது... மலர்கள் வெளுத்து உதிர்கின்றன.
அச்சாக இரத்தம் மாதிரியே இருக்கிறது
சார்ஜண்ட்! இவற்றை தொடாமல் இங்கிருந்து அப்புறப்படுத்த உரிய ஏற்பாடுகளை செய்யுங்கள்..., ஒரு சிறு துண்டோ, துரும்போ மிச்சம் இருக்கக்கூடாது



அப்புறம் ஆல்கஹாலைக் கொண்டு தரையை சுத்தப்படுத்துங்கள். எக்காரணம் கொண்டும் கர்னல் மற்றும் டாக்டரின் உடலை தொட்டுவிடக் கூடாது ...புரிந்ததா?
யெஸ்... காப்டன்
அது முடிந்ததும் கதவை தாழிட்டு வைத்து வெளியே ஒரு காவலாளியை நிறுத்துங்கள். சுகாதார கமிஷன் வரும் வரை யாரும் அறைக்குள் நுழையவே கூடாது
அந்த ஜந்துவின் சிதறல்களை எங்கே கொண்டு போய் போடுவது?
ஒரு பாத்திரத்தில் நிறைய ஆல்கஹாலை ஊற்றி அதனுள் துண்டுகளை அள்ளிப் போட்டு ஒரு குழியை தோண்டி அதனுள் கொட்டி மூடிவிடுங்கள்
அவை விஷத்தன்மையுடையனவை என்பதால் இதுதான் சரியான ஏற்பாடாக இருக்க முடியும்!
ஜெனரலுக்கும் டிபியன்ஸ் கோட்டை கமாண்டருக்கும் இதுபற்றி அறிக்கை அனுப்பப் போகிறீர்களா காப்டன்?
அனுப்பத்தானே வேண்டும் லெப்டினெண்ட்!
ஏற்பட்ட மரணங்களுக்கெல்லாம் இந்த பச்சை சைத்தான்தான் காரணம் என்று கண்கூடாக தெரிந்து விட்டபிறகு சும்மா இருக்க முடியாது!


இந்தப் பிராந்தியத்திற்குள் இவை எப்படி வந்து சேர்ந்தன என்பது இன்னமும் விளங்காத புதிர்தான்.
TELEGRAPH
ஒருவேளை வில்லருக்கு அந்த
தெரிந்திருக்கலாம்.
நிச்சயமா
அவர் அனுப்பியிருந்த செய்தியில் அழுத்தம் திருத்தமாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது - ''பச்சை ஜந்துவை தொடாதீர்கள் விலகி தொலைவிலேயே இருங்கள்'' என்று.
மாதிரி ஒன்றிரண்டை கொண்டு வர
என்னை பணித்திராவிடில் இந்த அசம்பாவிதம் நிகழ்ந்திருக்காது!
உண்மைதா
இந்த செய்தியை உடனடியாக ஜெனரல் கமாண்டுக்கு அனுப்பு!
யெஸ்...காப்டன்!
இதுபற்றி டிபியன்ஸ் கோட்டை
தெரிவிப்போம். அவர்கள் உரிய
நடவடிக்கை எடுக்க உதவியாக




அந்த இரண்டாவது செய்தித்துண்டை தந்தி ஊழியரிடம் அவர்கள் கொடுக்கவிருந்த வேளையில்
காப்டன் ஸார்!
என்ன விஷயம்?
அந்த ஐந்து மாயமாக மறைந்துவிட்டது!
மறைந்து விட்டது என்றால்...? காற்றில் கரைந்து விட்டதா!
காற்றில் இல்லை காப்டன் - ஆல்கஹாலில்!
சிதறிக் கிடந்த துண்டுகளை சேகரித்து ஆல்கஹால் நிறைந்த பாத்திரத்தினுள் போட்டோம்.
உடனே ஆல்கஹால் நுரைத்துக் கொண்டு நெடிமிக்க பச்சைநிற புகையை கக்கியது... கரைசலும் பச்சை நிறமாகிப் போய்விட்டது.
கடவுளே!
அத்தனையும் கரைந்து போய்விட்டது காப்டன்!
ஒரு சிறு துணுக்கு கூட மிச்சமில்லை!



நெடி மறைந்து புகை அடங்கியதும் பாத்திரத்தினுள் பார்வையை செலுத்தினோம். ஆல்கஹால் தன் பழைய நிறத்துக்கு வந்து விட்டிருந்தது. ஆனால் உள்ளே சிறு துண்டுகூட கண்ணில் படவில்லை!
அப்படியானால் அந்த சைத்தானை ஒழிக்கும் சுலபமான ஆனால் உத்திரவாதமான வழிமுறையையும் நாம் இப்போது தெரிந்து கொண்டு விட்டோம்!
அதாவது இவர்களுடைய கூற்று உண்மையாக இருக்கும் பட்சத்தில்!
அதை சந்தேகப்பட காரணம் இல்லை... அத்தோடு இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதிலும் கஷ்டம் இல்லை!
டிபியன்ஸ் கோட்டைக்கும், அபாச்சே கோட்டைக்கும் மேலும் இரண்டு செய்திகளை அனுப்பிவிட்டு, காப்டன் பென்ஸன் சில குதிரைப்படை வீரர்களோடு கோட்டையைவிட்டு வெளியேறி பயணத்தை தொடங்கினார்.
அதே சமயம் டிபியன்ஸ் கோட்டையில் -
முதல் அறிக்கை வந்து சேர்ந்த சற்றைக் கெல்லாம் பெறப்பட்ட அறிக்கை இது ஸார்!
?!
ம்ம்...இது கட்டுக் கதையாக இல்லாத பட்சத்தில் இப்பிராந்தியத்தில் ஒரு வாரமாக அலையடிக்கும் பீதியை ஒரு முடிவுக்கு கொண்டு வந்துவிடலாம்!



அந்தப் பகுதியில் இருக்கும் ரோந்துப் படைக்கு தகவல் கொடுக்க வேண்டுமா?
டிபியன்ஸ் கோட்டை கமாண்டருக்கு, அந்த பச்சை முள்ளுருண்டையை அழிக்கும் வழி முறையை கண்டறிந்துவிட்டோம். ஆல்கஹாலினுள் மூழ்கச் செய்தால் அது கரைந்து மறைந்து போகிறது. அந்தப்பகுதியில் உள்ள ஷெரீப்புக்கும் கிராம வாசிகளுக்கும் இதனை தெரியப்படுத்தவும். அந்த சைத்தானை சேகரிக்க நான் என் ஆட்களோடு புறப்பட்டுவிட்டேன். காப்டன் பென்ஸன்
ஆமாம்... தெரிவிக்க வேண்டும்! ஒவ்வொரு ரோந்துப் படைப் பிரிவுக்கும் இரண்டு பாட்டில்கள் ஆல்கஹாலை கொடுத்து அனுப்பி கவனத்தோடு கையாளச் சொல்!
ஆல் ரைட்!
உங்களுக்கு மறுப்பு இல்லை எனில் அந்த சைத்தானை வேட்டையாட நானும் போகலாம் என்றிருக்கிறேன்.
உன் இஷ்டப்படியே செய்... ஆனால் நீ ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.
கவலைப்படாதீர்கள்... உயிர் மீது எனக்கு நிறைய் ஆசை உண்டு.
போய் வா... ஆனால் அஸ்தமனத்திற்குள் திரும்பி விடு
QUARTERS
அன்று பிற்பகலில்...
அதோ அங்கே நிறைய தென்படுகின்றன.


முதலில் பெரிய பள்ளம் தோண்டி அதில் ஆல்கஹாலை நிரப்புங்கள். அப்புறம் மண்வெட்டியால் முள்ளுருண்டைகளை வாரி குழிக்குள் போட்டு மூழ்கச் செய்யுங்கள்... அதை எக்காரணம் கொண்டும் தொடாதீர்கள் - அருகில் போவதுகூட ஆபத்தாக முடியலாம். ஜாக்கிரதை! பகலில் அவை எவ்விஷமமும் பண்ணுவதில்லை என்கிறார்கள்... ஆனால் மற்றவர்களின் கூற்றை அப்படியே நம்பத்தயாரில்லை நான்!
உத்தரவுப்படியே, காப்டன்!
குழி வெட்டப்பட்டு ஆல்கஹால் நிரப்பப்பட்டது.
மண் வெட்டியால் முள்ளுருண்டைகளை குழிக்குள் தள்ளி அமிழ்த்தினார்கள்.
அடுத்து என்ன நடக்கும் என்றறிய எனக்குத் துடிப்பாக இருக்கிறது காப்டன்!
உனக்கு மட்டும்தான் என்றில்லை லெப்டினென்ட்!
ம்ம்... ஒழித்துக் கட்டுங்கள் சனியனை!
இத்தோடு காலி!


ஒவ்வொரு இடமாக தேடிப்போய் இதே வழிமுறையை கடைப்பிடித்து முள்ளுருண்டைகளை அழித்தார்கள்.
என்னமாய் நெடியடிக்கிறது பார்த்தாயா!
இருந்த தடமே இல்லாமல் மாயமாக மறைந்து போய்விட்டதே!
என்ன ஒரு விசித்திரமான சங்கதி!
கண்ணால் பார்த்திராவிடில் நாமும் கூட நம்ப மாட்டோம்!
அதைத் தொடர்ந்து அப்பிராந்தியத்திலிருந்த அத்தனை கிராமங்களுக்கும் செய்தி பரவியது. ஆல்கஹாலைக் கொண்டு அந்த சைத்தான்களை அடியோடு அழிக்கும் பணி ஏக காலத்தில் பல முனைகளிலும் செயல்படுத்தப்பட்டது. வழியில் தென்பட்ட முள்ளுருண்டைகளை அழித்துக் கொண்டு, நாலாதிசைகளிலிருந்தும் ரோந்துப் படைகள் விண்கல் கிடந்த இடத்தை நோக்கி குவிந்தன...
மூன்று தினங்களுக்குப் பின், வின்ஸ்லோ ஸ்டேஷனிலிருந்து சில மைல் தொலைவில்
இன்னும் சில நிமிடங்களில் நாம் அங்கே போய்ச் சேர்ந்துவிடலாம்!
இராணுவ அதிகாரிகள் உங்களுடைய கடிதத்தை பெற்று அதில் சொல்லியிருந்தபடி பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்திருப்பார்களா?




அப்படித்தான் நம்பகிறேன்! ஸ்டேஷனில் நிலவரத்தை தெரிந்து கொள்ளலாம் - அங்கே டிபியன்ஸ் கோட்டையை சேர்ந்த என் நண்பர் பிக்போர்டு வந்திருக்கும் பட்சத்தில்!
நாங்கள் ஒருவரையொருவர் நன்கு அறிவோம்... நாம் சொல்வதைக் கேட்டு நிச்சயமாக கேலியாக சிரிக்கமாட்டார்...
அப்படியா...!
அந்த சைத்தான்களை ஒழிக்க தேவைப்படும் பெருமளவு ஆல்கஹாலை கோரிப்பெற கவர்னரிடம் விஷயத்தை உரிய முறையில் எடுத்துச் சொல்லி உத்தரவு பெற நமக்கு உதவியாக இருப்பாரா?
நிச்சயமாக!
புத்து நிமிடங்களக்குப்பின்
வாருங்கள் மிஸ்டர் வில்லர்...
ஹாய்... காப்டன் டேடன்!
பழைய நண்பர் பிக்போர்டு வருவார் என எதிர்பார்த்தேன்
தன் இயலாமையை தெரிவிக்க என்னை அனுப்பி வைத்தார்


உங்களை எங்கே தேடிப்பிடிப்பது என்று நாங்கள் தவித்தக் கொண்டிருந்தபோது உங்களுடைய கடிதம் வந்து சேர்ந்தது. இன்று நீங்கள் வின்ஸ்லோ ஸ்டேஷன் வந்தடைகிற விஷயத்தை தெரிந்து கொண்டோம். உங்களுடைய இருப்பிடம் தெரியாததாலேயே அந்த சைத்தான் பற்றி தெரிய வந்த சில உண்மைகளை கமாண்டர் பிக்போர்டு உங்களுக்கு தெரிவிக்க முடியவில்லை!
உண்மைகளா...? என்ன உண்மைகள்...?
கர்னல் அக்ஸலெரையும் டாக்டர் ரண்டாலையும் பலி வாங்கிய பின், அந்த பச்சை சைத்தான் ஹோபி குடியிருப்பிலும், சுற்று வட்டாரத்திலும் மரண பீதி பரவ காரணமாகிவிட்டது.
?!
?!
வின்கேட் கோட்டையில் அந்த சனியனை ஒழித்துக் கட்டும் வழிமுறையை தற்செயலாக கண்டறிந்து கொண்டார்கள். அது என்னவென்று உங்களால் யூகிக்கவே முடியாது!
ஆல்கஹாலா...!
அட... கடவுளே - அது எப்படி உங்களுக்குத் தெரியும்?
அந்த உண்மையையும், பிற தகவல்களையும் பிக்போர்டுக்கு தெரிவிக்க கடந்த சில தினங்களாகவே முயற்சி எடுத்துக் கொண்டோம்...


உங்களுக்கு இது தெரிந்திருக்கும் என்று நான் கற்பனையாகக் கூட எண்ணிப் பார்த்ததில்லை. அது போகட்டும் – உங்களுக்குத் தெரியாத வேறொரு உண்மையை இப்போது நான் சொல்லப் போகிறேன்.
என்ன அது?
கடந்த மூன்று தினங்களாக ஏகப்பட்ட படைப்பிரிவுகள் பாதிக்கப்பட்ட பகுதியை சல்லடை போட்டு சலித்துக் கொண்டிருக்கிறார்கள். கண்ணில்பட்ட அனைத்து முள்ளுருண்டைகளையும் ஆல்கஹால் நிரப்பப்பட்ட குழிகளுக்குள் தள்ளி அழித்து வருகிறார்கள்!
கடைசியாக கிடைக்கப் பெற்ற தகவலின்படி விண்கல் கிடக்கும் பள்ளத்தைச் சுற்றி எந்த ஒரு முள்ளுருண்டையும் எஞ்சி இல்லை. தொலை தூர மேடு பள்ளங்களிலெல்லாம் வேட்டை தொடர்ந்து கொண்டிருக்கிறது!
அநியாயம்!
ஏன்... ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?
அவை பூண்டோடு அழிக்கப்பட்டுவிடக்கூடாது!
அந்த விநோத ஜந்து பற்றி முழு அளவிலான சோதனைநடத்த சில மாதிரிகள் தேவைப்படுகின்றன.
ஸாரி...மிஸ்டர்!



ர்னரும், சுகாதாரத்தைத் துறை உயர்மட்ட அதிகாரிகளும் அந்த முள்ளுருண்டைகளை ஒன்று பாக்கிவிடாமல் உடனே அழிக்க வேண்டும் என்று கடுமையான உத்தரவுகளை பிறப்பித்திருக்கிறார்கள்...
டெக்ஸ்...! ஆராய்ச்சிக்கு சில ள்ளுருண்டைகளையாவது மிச்சம் விட்டு வைக்காவிடில் விஞ்ஞானத்திற்கு அது ரிழப்பாகும் என்று புரியும்படி அவருக்கு எடுத்துச் சொல்லுங்கள்
நாம் அறிந்த உண்மைகள் அனைத்தையும் இவருக்கு எடுத்துச் சொல்லி, விஞ்ஞான ஆராய்ச்சிக்கு சில ஜந்துகளையாவது மிச்சம் வைக்க வேண்டிய அவசியத்தை இவருக்கு உணர்த்தினாலும் இவர் எப்படி மேலதிகாரிகளின் உத்தரவுக்கு எதிராக செயல்பட முடியும். சொல்லுங்கள்
ந்து என்றா அவற்றை குறிப்பிட்டீர்கள்!
ஆமாம்... காப்டன்! செந்நிறத்தில் பூக்கிறதை பார்த்து முதலில் எல்லோரும் அதை தாவர வகை என்றே நம்பி வந்தோம்.
ஆனால் ஒரு நல்ல டாக்டர் மட்டுமின்றி திறமை மிக்க விஞ்ஞானியுமான நம் அருமை நண்பர் மோரிஸ்கோ சமீபத்தில் அந்த முள்ளுருண்டைகளின் உண்மை சொரூபத்தை கண்டுபிடித்தார்! பகல் வேளையில் செயலிழந்து கிடக்கும் இந்த ஜந்துக்கள் இருள் கவிழ்ந்ததும் நகர்ந்து இரைதேடிப் போகின்றன... மனிதனோ, மிருகமோ எதிர்ப்பட்டால் நுண்ணிய விஷ ஊசிகளை பாய்ச்சி உடனடி மரணத்தை ஏற்படுத்தி பின்னர் அவர்களின் இரத்தத்தை உறிஞ்சி தன் பசியை போக்கிக் கொள்கின்றன.
?!


அப்படியா...! உங்களைத் தவிர வேறு எவரும் இதைச் சொல்லியிருந்தால் நான் நம்பியிருக்கவே மாட்டேன்!
உங்களால் என்ன செய்ய முடியுமோ அதை உடனடியாக செய்யுங்கள் காப்டன்!
நான் செய்யக் கூடியது இப்போது ஒன்று ஒன்றுதான்! கர்னல் பிக்போர்டும் மற்ற அதிகாரிகளும் இருக்கும் இடத்திற்கு புயலென விரைந்து சென்று நீங்கள் இப்போது சொன்னதை அவர்களிடம் தெரிவிக்கலாம்.
கால தாமதம் செய்யாமல் உடனடியாக அதைச் செய்யுங்கள்! இரண்டு மணி நேரத்தில் நாங்களும் அங்கே வந்து சேர்ந்துவிடுவோம் என்றும் அதுவரை நடவடிக்கைகளை ஒத்திப்போட வேண்டும் என்று நான் கோரியதாகவும் தெரிவியுங்கள்.
ஓ.கே. என்னாலான அனைத்தையும் நிச்சயம் செய்வேன்! மீண்டும் சந்திப்போம்!
வாருங்கள்! நாமும் பயணத்திற்கு ஆய்த்தம் செய்வோம். நமக்கு குதிரைகள் போதும். நண்பர் மோரிஸ்கோவுக்கு வண்டி ஏற்பாடு செய்ய வேண்டும்.
ERY STABLE
ஹூம்...அப்படி நடந்துவிட்டால் என்ன ஒரு பேரிழப்பு என்று எண்ணிப் பார்க்கும்போது...
அதைப்பற்றியே எண்ணிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை அருமை நண்பரே!


இருபது மைல் தொலைவு கடுமையான பயணம்... தாமதமின்றி போய்ச் சேர்ந்தால் ஒருவேளை உங்கள் எண்ணம் ஈடேற ஏதாவது செய்ய வாய்ப்பு கிட்டலாம்!
பயணத்தின் கடுமைக்கு நான் பயப்படவில்லை.
மோரிஸ்கோவும், யுஸெபியோவும் பயணம் செய்ய வண்டி ஏற்பாடானதும், மற்றவர்களும் குதிரைகளில் ஏறிக் கொள்ள பயணம் தொடங்கியது...
நாங்களும் உங்களுடனேயே வருகிறோம். ஒருவேளை வழியில் உங்களால் பயணத்தை தொடர முடியாது போனால்
அந்தப் பேச்சுக்கு இடமே இல்லை... வண்டி உடைந்து சுக்கு நூறாகிப் போனாலன்றி என் பயணம் நிற்காது!
சரி... கிளம்புங்கள்...! ஊரை விட்டு வெளியேறியதும் லகானை லூஸாக விட்டுப் பிடி யுஸெபியோ!
யெஸ் மிஸ்டர் பில்லர்
உச்ச வேகத்தில் நாம் போக வேண்டும்!
யாா!!!....!



கொஞ்சம் மெதுவாக போகட்டுமா பாஸ்...?
வேண்டாம்!
பாதை படு மோசமாக இருக்கிறது... அதனால்தான்
நான் சமாளித்து கொள்கிறேன்... நீ விரட்டு.
ஓடுங்கள்... இன்னும் வேகமாக... யா
ஆஆஆ...
இதற்கிடையே
வாய்ப்பே இல்லை கர்னல்!
ஒரு ஐந்து கூட தப்பியி. .ருக்காது என்பது உறுதிதானா?
ஒரு அங்குலம் பாக்கியில்லாம துப்புரவாக தேடிவிட்டோம்...



பணி சற்று கடுமையானதுதான்... நெட்டி வாங்கிவிட்டது எங்களை... ஆனாலும் உத்தரவாதமாகச் சொல்ல முடியும் - இதோ இங்கே பள்ளத்தினுள் கிடப்பவை தவிர வெளியே ஒன்றுகூட மிச்சமில்லை...
என்னுடைய பாராட்டுக்கள் கர்னல்!
நன்றி... கவர்னர் அவர்களே!
அப்படியானால் நாம் கிளம்புவோமா?
இல்லை...வேலை நடந்து முடியும் வரை நாம் இங்கிருப்பது நல்லதல்லவா?
நிச்சயம் பணிமுடிய ஒரு மணிநேரமாவது ஆகும்...! ஆனால் நாம் பள்ளத்தினுள் இறங்கி அவற்றின் அருகே போகத் தேவையில்லை!
கொண்டு வந்திருக்கும் ஆல்கஹால் மொத்தத்தையும் பிரயோகிப்போம்... அவசியப்பட்டால் தீவைப்போம்.
நல்ல யோசனை, கர்னல்!


கேட்டீர்களல்லவா காப்டன்? பாரல்களை மேலே கொண்டு வாருங்கள்... அப்படியே நீளமான ஒரு ப்யூஸையும் தயார் செய்யுங்கள்!
அப்படியே...கர்னல்!
ஒரு மணி நேர முடிவில் -
கடைசி பாரலும் வந்து சேர்ந்தாயிற்று காப்டன்
நல்லது
அனைத்தும் தயார்... ஸார்
சரி... உருட்டிவிடுங்கள்
பாரல்களை உருட்டிவிடச் சொல்லி உத்தரவு கொடுங்கள் லெப்டினென்ட் -
யெஸ் ஸார்!
கமான்! எல்லா பாரல்களையும் உருட்டி விடுங்கள்



அதே சமயம்
அங்கே பாருங்கள்... நாம் சற்று தாமதித்து விட்டோம் என்று தோன்றுகிறது
?!
பாரல்களை ஏற்கனவே உருட்டி விட்டார்கள்!
டெக்ஸ் வில்லருக்குப் பெருத்த ஏமாற்றமாக இருக்கும்
ம்ம்... போய் சேருங்கள்


டடமீ..டமா!
ஸ்ஸ்...!
ஸ்ஸ்ஸ்....!
பார்த்தீர்களா... ஆல்கஹால் போய் தொட்டதும் அவை அப்படியே உருக்குலைந்து அழிந்து போகின்றன!
கருகும் தண்டுகளை கவனியுங்கள்
உயிருக்கு போராடும் ராட்சஸ ஆக்டோபஸ்ஸின் தண்டுகளைப் போல் துடிதுடிக்கின்றன...



அங்கே -
காரியம் கை மிஞ்சி விட்டமாதிரி தோன்றுகிறது
மோரிஸ்கோவை தவிர மற்றவர்களுக்கு உற்சாக மூட்டும் சங்கதி!
கரடு முரடான பாதையில் ஆர்வம் காரணமாக கஷ்டமான பயணத்தை சகித்துக் கொண்டு, அங்கே ஒருவழியாக வந்து சேர்ந்த மோரிஸ்கோ நிலவரத்தை சட்டென்று புரிந்து கொண்டார்.
போச்சு... எல்லாமே நாசமாகப் போயிற்று... ஒன்று பாக்கியில்லாமல் ஒட்டு மொத்தமாக அழித்து விட்டார்கள்
வண்டியை நிறுத்து யுஸெபியோ... இனி நாம் அங்கே போவதில் அர்த்தமேயில்லை!
ப்யூஸை பற்ற வையுங்கள்! எல்லாமே பற்றி எரிந்து சாம்பலாகட்டும்!


சில விநாடிகளுக்குப் பள்ளத்தினுள்ளிருந்து நீல நிற ஜுவாலைகள் வானுயர எழும்பின...
கூடவே எழுந்த புகை மண்டலத்தினூடே நட்சத்திர ஜொலிப்போடு தீங்ஙங்குகள் தோன்றி மறைந்த...
ஹும்... ஈடு செய்ய முடியாத இழப்பு!
ஸாரி... மோரிஸ்கோ!
அதை ஆராயும் பணி படு ஆபத்தானது என்று அறிவேன்... ஆனாலும் உங்களுடைய திறமையை...
இனி அதைப்பற்றி பேசி என்ன ஆகப்போகிறது!


வார்த்தைகள் எனக்கு எந்த ஆறுதலையும் தராது!
இந்த இரத்தக் காட்டேரிகள் எங்கிருந்து வந்தன என்ற உண்மை புதிராகவே நிலைத்துப் போய்விட்டது இப்போது. அவை முழுக்க முழுக்க சமுதாயத்திற்கு எதிரானவையா அல்லது அவற்றால் ஏதாவது பயனடைய முடியுமா என்றெல்லாம் ஆராய்ந்து அறிய வாய்ப்பே இல்லாது போய்விட்டது.
ஆனால் ஒன்று வில்லர்... இரத்தத்தை குடித்துவிட்டு அவை செக்கச் சிவப்பில் அட்டகாசமாக பூக்கும் காட்சி நீண்டகாலத்திற்கு பலர் நெஞ்சில் தீக்கனவாக நிலைத்துப் போவது நிச்சயம்.
வாருங்கள்... நாம் திரும்பி போகலாம்...!
என் கிராமத்திற்கு வந்து சில நாட்களை கழித்துவிட்டுப் போகலாமே!
நன்றி நண்பரே! ஆனால் நான் உடனே ஊர் திரும்பி நீங்கள் கொண்டு வந்த முள்ளுருண்டையில் இன்னமும் மிச்சமிருக்கும் துணுக்கை மேற்கொண்டு ஆராயப் போகிறேன்!
விருப்பம்போல் செய்யுங்கள்!
பள்ளத்திலிருந்து தொடர்ந்து புகை மூட்டம் சுழலாக மேலெழும்பிக் கொண்டிருந்தது... டெக்ஸ் வில்லர் குழு ஏமாற்றத்தை நெஞ்சில் சுமந்தவாறு திரும்பிக் கொண்டிருந்தது... அந்த புதிரான சைத்தானின் இரகசியம், காலம் என்னும் புதை மணலுக்குள் நிரந்தரமாக புதையுண்டு போனது!
முற்றும்


லயன் ஸ்பாட்-லைட்!
புரட்டைத் தலை ராஜா!
ஜெ. சங்கர், பாணாம்பட்டு.
உர்ர்ர்...
அடேய் தூங்கு மூஞ்சி எழுந்திருடா... நீதான் இந்த காட்டுக்கு ராஜாவா?
சரியான சோணிப் பயல் நீ, என் பலத்துக்கு முன் நீ தூசி...
என்னுடைய பலத்தைப் பார்த்தாயா?
ராஜாவாக இருக்க உனக்கு அருகதை இல்லை.


இனி இந்த காட்டுக்கு நான் தான் ராஜா...
அதனால உன்னை தூக்கி கடாசப்போகிறேன்...
உன்னையா தூக்கி கடாசிப்போறான்?
ஆ... ஆ...
ஓ...
அம்மாா....
சில விநாடிகளில்...
ஐய்யோ...
யம்மாடி...
நிம்மதியா வாக்கிங் போக விடமாட்டேங்கிறாங்கப்பா..



என்னை யாராவது காப்பாத்துங்களேன்...
படக்.
நாங்க காப்பாத்துறோம்... பரட்டை...
சீக்கிரம் காப்பாத்துடா தடிமுண்டம்...
ஆபத்துல இருக்கிறப்ப கூட பயலுக்கு என்ன திமிர் நல்ல பாடம் கற்பிக்கணும்
சராக்
யம்மா...
பொத்...
டமார்
ஹா... ஹா..ஹா..

## மாதம் ஒரு வாசகர்



| | | |
|---|---|---|
| வாசகர் பெயர் | : **அ. சிவா** | வயது : 30 |
| முகவரி | : 104, கண்ணகி தெரு,<br>அன்னதானப்பட்டி, சேலம் - 2. | |
| கல்வித்தகுதி | : M.A., D.E.T. | |
| லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? | : தொடக்கத்தி(முனையி)லிருந்தே! | |
| லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி? | பழைய முத்து வாசகர் சொல்லிதான் படிக்க வேண்டுமோ காமிக்ஸ்களை! | |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரிக்கைகள் | : ஜுனியர் விகடன், நக்கீரன் | |
| இதுவரை வந்த கதைகளில் மிகவும் பிடித்தது | : இரத்தப்படல பாகங்கள் & ரிப் & டெக்ஸ் கதைகள் | |
| உங்களைத் தவிர வீட்டில் யாரும் படிக்கிறார்களா? | : ஆம். அண்ணன், தம்பி & நெருங்கிய நண்பர்கள். | |
| படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள் | : தற்போது கவனமாக வைத்துள்ளேன் **இரத்தப்படல பாகங்கள் I to V** பைண்டிங் பீரோவில் | |

# கதை சொல்லும் படங்கள் - 14

S.விஜயன்

Lettering பற்றிய review ல் - வசனங்களைத் தாங்கியுள்ள பலூன்கள் பற்றி - இன்னும் கொஞ்சம் பார்ப்போமா?


1\.

இது மாமூலான வசனம் பேசும் போது போடப்படும் பலூன்.





2\.

உணர்ச்சிவசப்பட்டு பேசும் போதோ தொலைபேசியில் கேட்கும் குரலுக்கோ போடப்படும் பலூன் இது!





3\.

சிந்தனைக்கான பலூன்




4.

கிசுகிசுத்த குரலில் பேசுவதைக் காட்டிட இந்த பலூன்




5.

சின்ன இடைவெளிக்குப் பிறகு வசனம் பேசப்பட்டால் இந்த டபுள் பலூன்கள்!




6.

திகைப்பை - குழப்பத்தை வெளிப்படுத்திட!




7.

சத்தமாய் பேசுவதானால் இப்படிப் பெரிய எழுத்துக்கள்



வசனம் எழுதப்பட்ட பலூன்களை. படங்களின் மீது ஒட்டும்போது - முக்கியமான பகுதிகளை மறைத்து விடக் கூடாது. அதே போல வசனங்களை சரியான வரிசைக்கிரமத்தில் ஒட்டிட வேண்டும். நாம் இடமிருந்து வலமாகப் படிக்கும் பழக்கம் கொண்டவர்களாதலால் - அதற்கேற்ப ஒட்ட வேண்டும். (ஜப்பானிய காமிக்ஸ்களில் வலமிருந்து இடமாகப் படிப்பார்கள்)


அப்புறம் இன்னொரு சங்கதி! ஒரு படத்தில் இரண்டு ஆசாமிகள் நிற்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். முதலாவது வசனத்தை இடதுபுறம் நிற்கும் ஆசாமி பேசினால் பிரச்சனையில்லை! ஆனால் வலது கோடியிலிருக்கும் ஆசாமி தான் முதலில் பேசுவதாகயிருந்தால் பலூன் இப்படி நீளமாக மோதிக் கொண்டு அமைந்துவிடும்! சிக்கலான விஷயம்! கூடிய மட்டிற்கு வசனம் பேசும் பாத்திரங்களின் தலைக்கு நேர் மேலே பலூன்கள் இருந்து விட்டால் நல்லது.



அப்புறம் - அளவுக்கு மீறி வசனம் இருந்தால் பலூன்களுக்குள் அடக்கிட முடியாமல் போகும்! 'நறுக்' கென்று வசனங்களை அமைத்திட வேண்டியது எடிட்டரின் பணி! அவர் கோட்டை விட்டுவிட்டால் - லெட்டரிங் ஆர்டிஸ்ட் பாடு திண்டாட்டம் தான்! இந்த மாதிரி சமயங்களில் இரண்டோ - மூன்றோ பலூன்களைப் பயன்படுத்திவிட வேண்டியது தான்!

வசனங்கள் கொண்ட பலூன்களை படங்கள் மேல் ஒட்டிவிட்ட பிறகும் கூட இன்னொரு வேலை உள்ளது. அது பற்றி அடுத்த இதழில்!


- வளரும் -


விச்சு & கிச்சு
விடாதே..... விடாதே.... பாஸ் பண்ணு... கோல் அடி!
ஏம்பா விச்சு... அடுத்த வாரம் வரவிருக்கும் பெரிய மாட்ச்சிற்கு கிச்சு உதவியா இருப்பான் போலிருக்கு!
ஆட்டம் முடிந்த பிறகு
வந்து கிச்சு... அடுத்த வார பெரிய மேட்சின் போது கோச் கவனிப்பு வேலையை நீ செய்வாயா?
ஓ... பேஷாய்!
அடுத்த வாரம் -
நம்ம கிச்சுவிற்கு கோச் வேலை கிடைத்தது பெரிய யோகம் தான்!
பின்னாடி போ... போ... ஹோல்டான்!
LUXURY COACHES
அட ராமா! ''கோச்'' வேலை என்றால் இந்தக் கோச் வேலையாக்கும்?


பெண்கள் ஹைஸ்கூலோடு! அவளுகளைப் பார்த்தாலே பயம்மாயிருக்கு!
ஸ்டார்ட்!
மேட்ச் முடிந்த பிறகு
ஸ்கோர் என்னப்பா?
வ...வந்து 0 - 30 சார்! பொண்ணுக ஜெயிச்சுட்டாங்க!
BOYS GIRLS
0 30
ஓடுங்கடா... சார் வர்றார்!
வீட்டுக்குப் போலாம் கிச்சு!
தோற்றால் என்ன செய்வேன் என்று ஏற்கனவே எச்சரித்தேனில்லையா?
மடேர்! மடேர்!
இப்படில்லாம் வண்டி ஓட்ட முடியாது! உனக்கு வேலை கிடையாது போ!
பாவம் கிச்சு! 'கோச்' வேலையும் ஒத்துக்கலை... கோச் வண்டியும் சரி வரலை!
SCHOOL COACH

# க்ரைம் - க்விஸ் - 27 விடை

'மியாவ்... மியாவ்... மரணம்'' இதழில் வந்த க்ரைம் க்விஸ் - 27க்கு சரியான
ட எழுதி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் :



M. சாக்ரடீஸ்
26 - A, கம்பராமாயண் தெரு,
வண்ணார் பேட்டை, நெல்லை - 3.

M. ராஜ்குமார்
S/o U.M. மல்லிகார்ஜுனன்,
1, உச்சி செட்டியார் தெரு,
மணிநகரம், அருப்புக்கோட்டை - 626 101.

T. சுரேஷ்குமார்
18, சத்தியமூர்த்தி தெரு,
பெருங்களத்தூர், சீனிவாசநகர் (P.O.)
சென்னை - 63.

## சரியான விடை

அந்தப் பெண்ணின் கண்ணாடிக்கார மாஜிக்கணவனே கொலையாளி. ஸ்பெக்டர் விபரம் கூறும் முன்பே - ''கொலையாளி இவன் தான்'' என்று னான். அது மட்டுமல்லாமல் - 'லிப்ட்' இருக்கும் போது 6 வது மாடிக்கு கனமான கேஜுடன் யாரும் ஏற மாட்டார்களே?! So - பொய் சொல்லும் அவனே லையாளி.

இம்மாத க்ரைம் க்விஸ் - 29 க்குப் பதில் அனுப்பிடும் போது கீழ்க்கண்ட பனை ஒட்டியனுப்ப வேண்டும் :

**க்ரைம் - க்விஸ் - 29**
C/o. பிரகாஷ் பப்ளிஷர்ஸ்
த. பெ. எண் : 374,
சிவகாசி - 626 123.

# வாசகர் ஹாட்-லைன்!



திரு. ஆசிரியர் விஜயன் அவர்களுக்கு!

நான் ஒரு நீண்ட நாள் லயன் வாசகன், என்னைப் போல் உள்ள வாசகர்களுக்கு அயல் நாட்டில் வரையும் சில சித்திரக்கதைகளையே பிடிக்கவில்லை. நீங்கள் சில வர்சகர்கள் வரைந்த கதைகளை போடுகிறீர்கள். லயன் TOP 10 ஸ்பெஷலில் வாசகர் வரைந்த ஸ்பைடர் கதையை போட்டு விட்டீர்கள். சுமாராக இருந்தது. தற்போது இந்த மாத ஸ்பாட் - லைட்டில் லக்கி லூக்கின் மிக மோசமான கதையை போட்டு இருக்கிறீர்கள். நான் வாசகர்கள் வரையும் எந்தக் கதையும் போடவேண்டாம் என்று சொல்லவில்லை. லயன் ஸ்பாட்-லைட்டுக்கு இரண்டு பக்கம் ஒதுக்கினாலே போதுமே! வாசகர்களின் திறமையை பரட்டை தலை ராஜா & சிரிப்பின் நிறம் சிவப்பு இந்த மாதிரி கதைகளில் வெளிக்கொண்டு வந்தாலே போதுமே!

**A. கலீல்**
**No. 39, B, INDIRA NAGAR**
**(மசூதி அருகில்)**
**கோட்டக்குப்பம் - 605 104.**

## ஆசிரியர் பதில்

இதே போன்று ஏகப்பட்ட கடிதங்கள் கடந்த ஒரு மாதமாக வந்து கொண்டுள்ளன! வாசகர்களின் Complaint ல் நியாயம் இருப்பதாகவே படுகிறது எனக்கு!

So - ஸ்பாட் - லைட் பகுதிக்கு Contribute செய்து வரும் வாசக ஓவியர்கள் அனைவருக்கும் எனது அன்பான வேண்டுகோள் :

நீங்கள் எவ்வளவு ஆர்வமாய் கதைகளை உருவாக்கி அனுப்பி வருகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்! எனினும் - இனி அனுப்பும் படைப்புகளை அளவில் சிறிதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுகிறேன்!

# நரகத்தைப் பார்த்தேன்! 5

ஒரு கண்ணீர் தொடர் கதை!




ஐயோ! வலி தாங்கமுடியவில்லையே!
'இடிபாடுகள் வழியாக வந்த ஒருவரை உதவிக்கு அழைத்தேன். ஆனால் அதிலும் பயன் ஏற்படவில்லை.'
உஷ்ஷ்... இதனால் பயனில்லை. நம்மால் ஒன்றும் செய்ய முடியாது!
'இது தெரியும் முன்பே எங்களை நெருப்பு சுற்றி வளைத்திருந்தது.'
'நான் அப்படியே உட்கார்ந்தேன்.'
'என்னுடைய நினைவும் தவறத்துவங்கியது.'
'நான் அவர்களுடனே சாக விரும்பினேன்.'
அம்மா! காப்பாற்றேன்!!
வலி தாங்க முடியலையே!!!
கிமியோ!
கிமியோ!
" ஈகோ விடமிருந்து சப்தம் எதுவுமில்லை.
கட்டிடம் தரைமட்டமானபோதே அவள் செத்துப் போயிருக்கணும். மற்றவர்களும் ஈகோ போல் அமைதியாக சாவைத் தழுவியிருந்தால் எனக்குக் கொஞ்சம் எளிதாக இருந்திருக்கும். அந்த அளவுக்குத் தாங்க முடியாத வேதனை... "
இங்கு என்ன
சீக்கிரம்! இங்கிருந்து
ஓடுங்கள்!
ஓ.....!



நீங்களும் சாகப்போகிறீர்களா? இப்ப என்னுடன் நீங்கள் வந்து விடுவது நல்லது!
ஆனால் மிஸ்டர் சகமோடோ...
என் கணவர் மற்றும் சுசுமு...
இப்ப காலம் கடந்து விட்டது மிஸஸ். நகசாவா!
ப்ளீஸ்! என்னை விட்டு விடுங்கள்!
அம்மா - வலி உயிர்போகுதே...
கிமியோ கிமியோ
அவர்களைக் காப்பாற்ற முடியாது!
முட்டாள் தனமாக நடக்காதீர்கள்!
நோ! என்னைப் போக விடுங்கள்! நானும் அவர்களுடனே சாகப்போகிறேன்!
டியர்!! சுசுமு!! ஈகோ!!
ஐயோ!! அம்மா!! சூடு தாங்க முடியலையே!!
....
....
கெய்ஜி - இப்பக்கூட சுசுமுவின் அழுகைக் குரல் எனக்கு கேட்குது...
அப்பா, ஈகோ மற்றும் சுசுமு - அந்த நெருப்பில் செத்து விட்டார்களா? நோ! இது உண்மையல்ல!


அன்றைய தினம் இரவு ஹிரோஷிமா பற்றி எரிந்த போது பட்டப் பகல் போல் நகர் முழுவதும் வெளிச்சம் இருந்தது!
தெருக்களிலும் மைதானங்களிலும் உயிர் தப்பியவர்கள் கூட்டம் மண்டிக் கிடந்தது தண்ணீர் கேட்டு எழும் சப்தம் எங்கும் எதிரொலித்தது!
ப்ளீஸ்... தண்ணீர்
தண்ணீ...தண்ணீ
பொழுது புலர்ந்த போது உயிருடன் வாழும் பேய்களில் முடிவில்லாத ஊர்வலம் நகரில் நடந்து கொண்டேயிருந்தது...
முன்னோக்கி கூன் விழுந்த நிலையில் அவர்கள் நடந்தனர். அவர்களுடைய தோல்கள் உருகி முன்னே தொங்கிக் கொண்டிருந்தன...
என்னைப் பொறுத்தவரை அவர்கள் உயிருடன் திரியும் பேய்களாகக் காணப்பட்டனர்...
மிகக் குறைவான வேதனையுடன் அவர்கள் நடமாட இதுவே இறுதி வழியாக இருந்தது.
தொடரும்...


# சென்ற இதழில் கேட்டிருந்த கேள்விகளுக்கான பதில்கள் இதோ!

## 1995 ன்

| | |
|---|---|
| 1. மிக அருமையான கதை | : இரத்தப் படலம் V |
| 2. மிக அறுவையான கதை | : இரத்தக் கரம் |
| 3. மிக அழகான அட்டைப்படம் | : வெறிநாய் வேட்டை |
| 4. மிக சொதப்பலான அட்டைப்படம் | : தி. நகரம் டோக்யோ |
| **5. லயனில் பிடித்த பகுதிகள்?** | **மார்க்** |
| a) ஹாட் லைன் | : 90/100 |
| b) சித்திரத் தொடர்கதை | : 55/100 |
| c) வாசகர் ஸ்பாட் - லைட் | : 25/100 |
| d) கதை சொல்லும் படங்கள் | : 75/100 |
| e) க்ரைம் க்விஸ் போட்டி | : 60/100 |
| f) வாசகர் ஹாட் லைன் | : 70/100 |
| 6. குறைகள் | : 1) அட்டைப்படம் தரம் மோசம் 2) பழைய ஹீரோக்கள் இல்லாதது. 3) விளம்பரப்படுத்திய கதைகளை சரியாக வெளியிடாதது. |
| 7. புதிதாக என்ன செய்யலாம்? | : 1) கார்டூன்கள் கூட்ட வேண்டும். 2) இலவச இணைப்புகள் கொடுக்கலாம். 3) ஸ்பெஷல் வெளியீடுகளை இன்னும் கூட்டலாம். 4) பேனா நண்பர்கள் பகுதி சேர்க்கலாம்! |




லயன் காமிக்ஸ்
வருகிறது!
Forest Officer
பீட்டர் பாலண்டைன்
தோன்றும்
யானைக் கல்லறை!
ரூ. 6/-




**A. அருண்கார்த்திக்** **பாளையங்கோட்டை.**

மியாவ்... மியாவ்.. மரணம் கதையில் வாசகர் ஸ்பாட் லைட்டில் வாசக நண்டார் சதீஸ் கதைக்கு 16 பக்கங்களை ஒதுக்கி வேஸ்ட் செய்து விட்டீர்கள். நம் வாசக நண்பர்களின் திறமையை மதிக்கிறேன். ஆனால் அவர்களது படைப்புகள் இரசிக்கும்படியாக இல்லை. ஏதோ அவர்களை உற்சாகப்படுத்த சில பக்கங்கள் மட்டும் ஒதுக்குமாறு வேண்டுகிறேன்.

**A. சிவா,** **சேலம்.**

விபரீத விதவையைத் தொடர்ந்து மியாவ் மியாவ் மரணம் தெளிவான கதை, அழகான அட்டைப்படம் & அதைவிட சித்திரங்கள் பிரமாதம்.

**M. ராஜவேல் & ராஜ்குமார்,** **அருப்புக்கோட்டை.**

சார்லியின், மியாவ் - மியாவ் மரணம், அவரின் திறமைக்கு ஒரு சான்று. இவர் கதைகளை தொடர்ந்து வெளியிடவும்.

**G. பிரபு,** **திருவண்ணாமலை.**

அட்டைப் படத்தில் இருந்த அசத்தல், கதையில் இல்லை. இருந்தாலும் நரகத்தைப்பார்த்தேன், ஒரு குதிரையின் கதை மிகவும் பிடித்திருந்தது. வாசக ஓவியர் சதீஸ்க்கு எனது பாராட்டுக்கள்.

**M. ராஜ்குமார்,** **அருப்புக்கோட்டை.**

''வினை விதைத்தவன் வினை அறுப்பான்'' என்ற கருத்தை ''மியாவ்... மியாவ்.. மரணம்'' மீண்டும் ஒரு முறை வலியுறுத்தியது. ''நரகத்தைப் பார்த்தேன்'' செம உருக்கமான கதை. சதீஸின் ''ஒரு குதிரையின் கதை'' செம சூப்பர்.

**A. T. முருகன்,** **சென்னை.**

''மியாவ் மியாவ் மரணம்'' அருமையான கதை. பயங்கரப் பூனைகள் கதையை நினைவூட்டினாலும், விறுவிறுப்பாகச் சென்றது.

**M. சிவக்குமார்,** **அம்பாசமுத்திரம்.**

''மியாவ்.. மியாவ்.. மரணம்'' கதையை படித்தேன். கதை ரொம்பவும் சாதாரணமாக இருக்கிறது. மேலும் ஜனவரி வெளியீடு பிப்ரவரியில்தான் கிடைக்கிறது. இதற்கு ஒரு தீர்வு காணுமாறு கேட்டுக் கொள்கிறேன்.




இன்ஸ்பெக்டர் டேஞ்சரின் க்ரைம் க்விஸ் -'29-
மிஸ்டர் வின்ஸெண்ட்! உடனடியாக 10,000 டாலர்கள் நீங்கள் அவனுக்கு தரா்விடில் உங்களுடைய தொண்டையில் கத்தியை பாய்ச்சுவேன் என்று எழுதியிருக்கிறான்... இந்த ஆசாமி!
எழுதியவன்... ஜான் ஸாண்டர்ஸ்! — என் திரண்ட சொத்துக்களுக் குரிய வாரிசுகள் இருவரில் அவன் ஒருவன்!
உடனடியாக உயிலை மாற்றி சொத்து முழுவதும் என் அருமை மருமாள் மெலிண்டாவுக்கே போய்ச் சேர வேண்டுமென்று எழுதப் போகிறேன்!
முதலில் நான் சில புதிர்களை புலனாய்வு செய்ய அவகாசம் கொடுங்கள் மிஸ்டர் வின்ஸெண்ட்!
ஓ... ஷ்யூர் — இன்ஸ்பெக்டர்
ஆய்வு கூட அறிக்கை என்ன சொல்கிறது ஆல்பி?
அந்தக் கடிதம் நோவாக்ஸ் Z LP—777 எலக்ட்ரிக் டைப்ரைட்டரில் டைப் செய்யப்பட்டிருக்கிறது.... ஸார்!
அத்துவானக் காட்டில் தனியாக நிற்கும் ஜான் ஸாண்டர்ஸின் குடிலில்....
பெரியப்பாவின் சொத்தில் எனக்கு நாட்டமே கிடையாது... நவீன வசதி எதுவுமில்லாத இந்த ஒதுக்குப்புறத்தில் எளிமையாக வாழ விரும்புகிற எனக்கு எதற்கு ஸார் பணம்!
ஸார்... குச்சு வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது இந்த நோவாக்ஸ் Z LP—777 எலக்ட்ரிக் டைப்ரைட்டர்!
நமக்கு அவசியப்பட்ட தடயம் அல்லவா இந்த டைப்ரைட்டர்?
ஸார் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?
யார் குற்றவாளி?


பரட்டைத் தலை ராஜா!
என்னோட தீக்கோழி ரேசுக்கு என் சாம்பியனுடன் மோத ஒரே ஒரு ஆளு தான் வந்திருக்காப்ல இருக்கு!
ஆமா... எங்க ஆளைத் தான் நீ போட்டுத் தள்ளிட்டியே!
போச்சா? ஏதோ தெரியாம ஒரு தேங்காயை உங்க தீக்கோழி காலுல போட்டதால என்னைய என்ன சதிகாரனுங்கிறியா? போட்டியில்லாதனாலே என்னோட தீக்கோழியையே ஜெயித்ததா அறிவிக்கிறேன்.
அவசரப்படாதீங்க தலைவா! இப்பப் பாருங்க... எங்க ஆளு ஒரு கால், ஒரு கன்னம் ஓட்டம் ஓடப் போகிறார்.
ம்...ம்... சரி! 1...2...3...ஓடுங்க
ஓடு... ஓடு! வேகமா ஓடு! ஆசி!
அங்கே பாரு! நம்ம ஆளு ஆசி தான் முதல்ல இருக்கு ஈசியா ஜெயிச்சர்லாம்
ம்ம்... இதை இப்படியே விடக்கூடாதே! நமது அடுத்த திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியது தான்.


ஹா... ஹா... ஆசி ரொம்ப களைப்பாக இருக்கும். லைட்டா ஒரு டிபன் கொடுப்போம்
இந்தத் தீனி அவனை ஓட விடாமப் பண்ணிடும். ஹி...ஹி...
டடக்!
ஐயையோ! நம்ம ஆளு கிந்திக்கிட்டிருக்கான். பரட்டையோட ஆளு ஜெயிக்கப் போறானே!
ம்...ம்... பரட்டை ஏதோ தில்லு முல்லு பண்ணீருப்பான். வா, நாம ஏதாவது பண்ணுவோம்!
என்னோட சாம்பியனை வரவேற்க நான் இங்கு காத்திருக்கேன்
ம்..ம்... வேகமா! இரும்புச் சுரங்கத்ல இருந்து வாங்கிவிட்டு வந்த காந்தத்தை ஒழுங்காகப் பிடி.
டங்ங்!
சொய்ங்ங்
தீக்கோழியின் வயிற்றுக்குள் இருந்த இரும்பு சாமான்கள் காந்தத்தால் ஈர்க்கப்பட்டன!
ஆஹா! ஆசி அற்புதமாக ஜெயித்துவிட்டான்!

## புள்ளிகளை இணைத்துப் பாருங்கள்!



வெகு விரைவில்....



கேப்டன் பிரின்ஸ் குழுவினர்
மூன்று புதிய சாகஸங்களில்
உங்களை சந்திக்க வருகிறார்கள்!



புத்தம் புதிய கதைகள்...
துடிப்பான சித்திரங்களுடன்...
சூப்பராகத் தயாராகி
வருகின்றன!

# மாதம் ஒரு ஹீரோ!



| | | |
|---|---|---|
| பெயர் | : | கிச்சு |
| வயது | : | என்றும் பதினாறு! |
| கல்வித் தகுதி | : | நிச்சயமாய் ஜாஸ்தி கிடையாது! |
| தொழில் | : | ஆல் - இன் - ஆல் அழகுராஜா! |
| பொழுது போக்குகள் | : | ஏராளம் - மீன் பிடிப்பது; விளையாடுவது இத்யாதி...இத்யாதி! |
| விரும்புவது | : | "கிச்சுவைப் போல கில்லாடி உண்டா?" என்ற (கிடைக்காத) பாராட்டை! |
| விரும்பாதது | : | "விச்சுவைப் போல ஒரு கில்லாடி உண்டா?" என்ற வசனத்தை! |
| நம்புவது | : | தன் மேதா விலாஸத்தை! |
| நம்பாதது | : | தன்னைப் பற்றிய விமர்சனங்களை! |
| மற்ற பெயர்(கள்) | : | கோமாளி; மாங்காய் மடையன் etc... |
| சாதனை | : | எலியும், பூனையுமாக இருந்தாலும் -விச்சுவைவிட்டு இணைபிரியாமல் இருப்பது! |
| நீண்ட கால சாதனை | : | சிரிக்கவே தெரியாதவர்களைக் கூட சிரிக்க வைப்பது! |

லயன் காமிக்ஸ்

## அடுத்த வெளியீடு!

# மேடையில் ஒரு மன்மதன்!





Tamil Comics Ulagam - King Viswa